தென்மொழி
தனித் தமிழ்
க்கியத்திங்களிதழ்
இருள் மிகு நாடே...!
அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்;
அறம்பிழை வாணிகர் ஒருபால்;
வரவியல் செலவியல் அறிகிலர் ஒருபால்;
வருவதை முடக்குவர் ஒருபால்;
கரவுளம் ஒருபால்; குலவெறி வளர்க்கும்
கயவரும், களியரும் ஒருபால்;
இரவினும் திண்ணிய மடமைகொள் நாடே
எங்கொளி பெறுகுவ தினியே!
ஐப்பசி
தி. பி. 1995.
காசு

17 OCT 1964

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | ஐப்பசி தி. பி. 1995 (1964 அக்டோபர்) | ஓலை 9.

திருவையாறு அரசர் கல்லூரித் தலைவரின்
திருவிளையாடல்கள்!

புலி, ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து இறுதியில் மக்களையே கடித்தது போலத் திருவையாறு அரசர் கல்லூரித் தலைவர் தொடக்கத்தில் சமற்கிருத வெறியராக விருந்து தமிழ்க்குக் கேடுகள் பல செய்து வந்தது மன்றி, இக்கால் தமிழ்ப் படிக்கும் மாணவர்களை ஏதோ ஒருசில காரணங்களைக் காட்டி வெளியேற்றவும் தொடங்கியுள்ளார் என்பதறிந்து மிகவும் மனம் வருந்தினோம். அதன் முதற் படியாகக் கடந்த மாத முடிவில் தனித்தமிழ்ப் பற்றும் தமிழ் வளர்க்கும் நோக்கமும் கொண்ட பதினான்கு தமிழ் மாணவர்களைக் கல்லூரியினின்று விலக்கியே விட்டதாக அறிகின்றோம். எந்தத் தமிழர் ஆட்சிக் காவலராக இருப்பினும், ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் தங்கள் திருவிளையாடல்களைச் செய்து கொண்டுதாம் இருப்பர் என்பதை, அரசர் கல்லூரியின் பார்ப்பனத் தலைவர் திரு எச். இராசகோபாலன் அவர்கள் மெய்ப்பித்துள்ளார். இந்நிகழ்ச்சி ஒன்றே இக்கால் தமிழ்க்கும் தமிழர்க்கும் போதிய காப்பில்லை என்பதற்கும், தமிழ்ப்பற்றுக் கொண்டவர் என்ற காரணங் காட்டி,

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்-2.

அரசியல், பொருளியல், குமுகாயவியல், கல்வித்துறை முதலிய எவ்வகையானும் பெறவிருக்கும் முன்னேற்றத்தை எளிதாகத் தடை செய்துவிட முடியும் என்பதற்கும் போதிய சான்றாகும்.

1957-லும் இது போன்றதொரு நிகழ்ச்சி நடந்துள்ளது. அக்காலும் இதே போன்று தமிழ் மாணவர்கள் பலரை அன்றிருந்த கல்லூரித் தலைவர் வெளியேற்றினர். பலரைத் தேர்வுகளில் தேர்வு பெறாமல் செய்தனர். அப்பொழுதும் அம் மாணவர்கள் சார்பில் எவ்வகையான நடவடிக்கையும் மேற்கொள்ளப் பெறவில்லை. இன்றும் ''என்னுடைய காலத்தில் கல்லூரியை இழுத்து மூடிவிடுவேன்'' என்று திரு இராசகோபாலன் அடிக்கடிக் கூறிவருவதையும், அவர் நடந்துகொள்ளும் அடாவடிச் செயல்களையும் எண்ணிப் பார்த்தால், ஒருவேளை கல்லூரியை மூடிவிடத்தான் அவர் முயற்சி செய்கின்றாரோ என்று கருத வேண்டியுள்ளது. இந்நிலைகள் இத்தகைய அளவிற்குக் கட்டு மீறிப்போயும், இவற்றைப்பற்றிப் பல்கலைக் கழகமோ, கல்வித் துறையோ, தனிப்பட்ட அமைச்சர்களோ எவ்வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இவற்றிற்கெல்லாம் அக்கல்லூரித் தலைவர்க்குப் பலவகையிலும் பெருந்துணையாக விருந்துவரும் மாவட்ட ஆட்சித் தலைவரும் ஒரு பார்ப்பனர் என்பதே காரணமாக இருக்கலாம் என உய்த்துணரப்படுகின்றது.

கல்லூரித் தலைவர் மாணவர்களுக் கேற்றவரல்லர் என்பதற்கு அவர் மேற்கொண்ட ஒரு சில நடைமுறைகளே சான்றுகளாகும். அவற்றுள்,

க] இந்திய நாட்டின் தலைமையமைச்சர் நேரு இறந்தமைக்காக இந்நாட்டிலும் பிற நாடுகளிலும் உள்ள மக்களும் மக்கள் தலைவர்களும் ஆங்காங்கே கூட்டங்கள் நடத்தி இரங்கல் தெரிவித்ததைப்போல், இக் கல்லூரியில் பயிலும் நாட்டுப்பற்றுடைய தமிழ் மாணவர்கள் சிலர் இரங்கற் கூட்டம் நடத்த இசைவு கேட்டும், அதற்கிசைவு தராமற்போனதுடன், மாணவர்கள் எவ்வகையானும் அக் கூட்டத்தை நடத்தாதவாறு மிகக் கண்டிப்பாக இருந்ததும்,

உ] சமற்கிருதத்திற் கென்றே தொடங்கப் பெற்ற இக் கல்லூரியைத் தமிழ்க் கல்லூரியாகவும் மாற்றிய திரு ஏ. டி. பன்னீர்ச்செல்வம்போன்ற தலைவர்களின் நினைவுவிழாக்களையும், திருவள்ளுவர் மன்றச் சார்பாக நடந்துவந்த தமிழ் இலக்கியக் கூட்டங்களையும் நடைபெறாமல் தடுத்து நிறுத்தியதும்,

ங] பார்ப்பன இனத்தவர் என்ற ஒரே காரணத்தால் யானைக்கால் நோய் கொண்டவரும், முன்பு ஒருகால் மாணவர்

ஒருவரின் மண்டையில் ஒரு கட்டையால் அடித்துப் படு காயத்தை உண்டாக்கியதற்குத் தண்டனையாகக் கல்லூரியி னின்று மேலாளரால் விலக்கப்பட்டவருமான ஒருவரையே மீண்டும் உணவு விடுதித் தலைவராக இவர் வைத்துக்கொண்டது மன்றி அவர் கூற்றுப்படியே தமிழ் மாணவர்களைக் கொடுமைப் படுத்தி வருவதும்,

௪] இக் கல்லூரியில் சமற்கிருதம் பயின்றுவரும் பதினேழு பார்ப்பன மாணவ மாணவியர்க்கென்று நான்கு சமற்கிருதப் பேராசிரியர்களை வைத்ததுமன்றி, தமிழ் கற்று வருகின்ற இரு நூற்றுப் பதின்மூன்று மாணவர்களுக்கும் நான்கு தமிழ்ப் பேரா சிரியரைக் கொண்டே தமிழ் கற்பிக்கப்பட்டு வருவதாக மேலா ளர்கட்குப் போக்குக் காட்டிக்கொண்டு வருவதும்,

௫] தமிழ் மாணவர்களின் மனம் புண்படுமாறு அடிக்கடி 'அடேய், பச்சைத் தமிழா', 'அடேய் காய்ந்த தமிழா' என்று விளிப்பதும், 'சத்திரத்துச் சோற்றைத் தின்றுவிட்டுச் சும்மா விருக்க முடியவில்லையா?' என்று அவர்களைப் பலவாறாக இழிவுகூறி வருத்தி வருவதும்,

௬] தமிழ் பயில வரும் தமிழ் மாணவர்களை வடமொழி பயிலுமாறு கட்டாயப் படுத்துவதும்,

௭] பார்ப்பனர் கொண்டாடத் தக்க விடுமுறைகளையே தந்து, பிற சமயத்தைச் சேர்ந்த தமிழ் மாணவர்களுக்கான விடு முறைகளை [அவை அரசினராலும், பல்கலைக் கழகத்தாலும் வழங்கப் பெற்றவையா யிருப்பினும் கூட]த் தராமல் கல்லூரி நடத்திப் பிற சமய, குலங்களைச் சார்ந்த மாணவர்களிடம் ஓரகம் காட்டுவதும்,

௮] தமக்கு வேண்டிய ஓரிரண்டு ஏழைத் தமிழ் மாணவர் களைத் தம் பக்கல் வைத்துக்கொண்டு, அவர் தம்மைக் கொண்டு பிற மாணவர்கள்மேல் குற்றங்கள் சாற்றுவதும், அவற்றைப் பலர் முன்னிலையில் மெய்ப்பித்துக் காட்டி அம் மாணவர்களைத் தண்டிப்பதும்,

௯] பிற கல்லூரிகளினின்றும் அக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்ள வேண்டி வரும் சொற்போட்டி, எழுத்துப் போட்டி போன்ற இலக்கிய நடவடிக்கைகளின் அறிக்கை களைத் தமிழ் மாணவர்களுக்குக் காட்டாமல் இருட்டடிப்புச் செய்து, அவர்களை அந்நடவடிக்கைகளில் கலக்கவொட்டாமல் மாணவர்தம் அறிவு வளர்ச்சியையும், உரிமை உணர்வுகளையும் தடைப்படுத்துவதும்,

௧௦] தனித்தமிழில் பேசியும் எழுதியும் வரும் தமிழ் மாணவர்களுக்கு வெளிப்படையாகவும், மறை முகமாகவும் பற்பல கேடுகளைச் செய்ததும், செய்து வருவதும்,

கல்லூரித்தலைவர் திரு. இராசகோபாலன் அவர்களின் தலையாய திருவிளையாடல்களாகும் இத்துணையளவு கொடுமைகளிருந்தும் இவற்றைக் கேட்கவோ, கேட்டுத் தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளவோ, அரசினரோ, கல்வித்துறையினரோ முன்வராமை தமிழ்நாட்டில் தமிழ்ப் பயிற்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் ஒரு சிறிதளவு தானும் ஆக்கமோ ஊக்கமோ அளிக்கப்படவில்லை என்பதாகத்தானே பொருள்படும். இக்கால் இந்தி பயின்று வரும் மாணவர் ஒருசிலர்க்கு மேலே கூறப்பெற்ற கொடுமைகள் நிகழு மாயின், அக்கொடுமைகளின் கடுமையால் தில்லியில் உள்ளவர் கள் குதித்துக் கூத்தாட மாட்டார்களா? அவர்கள் கூத்தாட் டத்தைக் கண்டு இங்குள்ள காமராசுகளும் பக்தவத்சலங்களும் மறு நாளே தடிகளை எடுத்துக்கொண்டு கொடுமை நடந்ததாகக் கூறப்பெற்ற இடத்திற்கு ஓடமாட்டார்களா? தமிழ் வளர்ச்சி யில் மட்டும் இத்துணைப் புறக்கணிப்பா?

இவற்றிற்கிடையில் வீடணத் தமிழ் மாணவர் ஒருவரைத் துணையாகக்கொண்டு அவர் பெட்டியில் உள்ள புத்தகம் ஒன்றை அவரையே கிழித்துக் கொள்ளச் செய்து, அக்குற்றத்தைப் பிறர் மேல் சாற்றி, அதன் விளைவாக எழுந்த நடவடிக்கைகளின் முடி வாகப் பதினன்கு தமிழ் மாணவர்களையும் அக் கல்லூரித் தலை வர் வெளியேற்றியதுடன், அவர்தம் பள்ளி மாற்றச் சான்றிதழ் களையும். சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு விடுத்துள்ளார். அம் மாணவர்களில் அறுவர் புலவர் இறுதியாண்டும், நால்வர் மூன்று மாண்டும், நால்வர் இரண்டாமாண்டும் பயில்வோராவர். நான் காண்டுகளாக அக்கல்லூரியில் தமிழ்ப் படித்துவந்து. இன்னுஞ் சில மாதங்களில் பட்டம்பெற்றுத் தமிழாசிரியர்களாகப் பல்லா யிரக் கணக்கான சிறுவர்களுக்குத் தமிழ்க் கல்வி கற்பிக்கப் போகும் அவர்களை, அவர்கள்மேல் உள்ள கடுப்பால், அவர்கள் செய்யாத குற்றத்திற்கெனக் கல்லூரியை விட்டு விலக்குவது எத்துணைக் கொடுமையானது என்பதை அரசினரும், கல்வித் துறை மேலாளர்களும் எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். இவ் வடிப்படையான நிகழ்ச்சிகளில் மாணவர்கள்மேல் எவ்வகைக் குற்றமுமே இருந்திராது என்று கூற நாம் முற்பட வில்லை. ஆனல் இவ்வளவு கொடுமையான நிகழ்ச்சிகளுக் கிடையில் வெளியேற்றப் பெறும் அம் மாணவர்களின்மேல் கூறப்பெறும் குற்றங்கள் மெய்தாமா என்பதைக் கூடத் தீர ஆய்ந்து பாராமல் பார்ப்பன வெறி கொண்ட கல்லூரித் தலைவர் ஒருவரின் முடிவுக்கே அப் பதினன்கு தமிழ் மாணவர்களின் வாழ்வை விட்டுவிடுவதென்பது எவ்வகையானும் நெறியாகாது; அறமாகாது என்றே கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதுபற் றித் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் வந்து உசாவினரேனும், அந் நேர்முக உசாவலின் முடிவேதும், வெளியேற்றப் பெறும்

(12-ஆம் பக்கம் பார்க்க)

என் அண்ணாமலை நகர் வாழ்க்கை

பணிசெயற்படலம் - 2-ஆம் பகுதி

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திரவிட மொழியியற் குழுவின் முதற் கூட்டத்தில் முடிபு செய்தவாறு, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்மொழிக்கும் ஒவ்வொரு விரிவுரையாளரை அமர்த்த முயற்சி தொடங்கியது. முதற்கண் திருவாளர் இராதாகிருட்டிணனார் (எம். ஏ.) தமிழுக்கு அமர்த்தப்பெற்றார். இவர் பூனாத் தெக்காணக் கல்லூரி நடத்தி வரும் வேனிற் பள்ளியிலும் (இலை)உதிர்காலப் பள்ளியிலும் வண்ணனை மொழியியற் பயிற்சி பெற்றவர். நானும், எனக்குப் பணிக்கப்பட்டவாறு, நான் தொகுக்கவிருந்த தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் போலிகையாக, ஐம்பது சொற்கட்கு வேரும் வரலாறும் பொருளும் விளக்கமும் எழுதத் தொடங்கினேன்.

வழக்கப்படி, தெக்காணக் கல்லூரியின் வேனில் மொழியியற் பள்ளி மேழ (சித்திரை) மாத நடுவில் (அதாவது மே மாத முதலாம் பக்கல்) தொடங்குமென அறிவிப்பு வந்தது. என் மொழிநூற் கல்விப்பரப்பையும் ஆராய்ச்சி யாழத்தையும் நிலைத்த கொள்கையையும் மாறா மனப்பான்மையையும் வாழ்க்கைக் குறிக்கோளையும் அறியாத என் எதிரிகள், என்னைத் தம்வழித் திருப்புமாறு, துணைக் கண்காணகர் திரு. நாராயணசாமியார் அவர்களிடம் சென்று. என்னை மேற்குறித்த வேனில் மொழியற் பள்ளிக்குப் பயிற்சி பெற அனுப்ப வேண்டுமென்று வேண்டியதாகத் தெரிகின்றது. துணைக் கண்காணகரும் என் விருப்பத்தை வினவினார்கள். இறைவனருளால், அற்றைப்பள்ளி தேராதூனில் (Dehra Dun) நடைபெற்றது. பல்வகைப் பயனையும் முன்னோக்கிப் பெருமகிழ்ச்சியுடன் உடனே இசைந்தேன்.

பின்பு, இருதிசை வழிச் செலவிற்கும் ஒன்றரை மாதத் தங்கற்கும் பல்கலைக் கழகத்திற் பணம் பெற்றுக்கொண்டு, தேராதூன் சென்றேன். பல்வேறு நாட்டினரும் பல்வேறு மொழியினரும் பல்வேறு மதத்தினரும் பல்வேறு இனத்தினரும் பல்

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

வேறு குலத்தினருமான ஆசிரியரும் மாணவரும், அங்கு ஒன்று கூடி உடன் பிறப்புப்போற் பழகியது மிக்க மகிழ்ச்சியைத் தந்து கிளர்ச்சியை உண்டு பண்ணியது.

வண்ணனை மொழியியல் என்ன தென்பது ஏற்கெனவே அறிஞர் கிளீசன் எழுதிய வண்ணனை மொழயியற் புகுநூல் (An Introduction to Descriptive Linguistics) வாயிலாய் அறிந்திருந்தேனெனினும், அதன் முழுப் பரப்பையும் பயிற்சி முறையையும் தேரா தூன் பள்ளியில்தான் தெளிவாகக் கண்டேன். கடவை (Course) யிறுதியில் நிகழ்ந்த தேர்விலும் தேறினேன். ஆயின், அஃது எனக்கும் உண்மையான மொழி நூற்கும் பயன்படுவதன்று. வட நாட்டு மக்களின் வாழ்க்கை முறையும், மொழி வழக்கும், ஆக்ரா (Agra) தில்லி (Delhi)க் காட்சிகளும் கங்கையாறும் பனிமலையும் பற்றிய அறிவே, இவ்வுலகில் எனக்கு என்றும் பயன்தரும். இதுபற்றி என் எதிரிகட்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

தேராதூன் பள்ளியிற் பயின்றபோது, தமிழில் நால் நிறத்திற்கே சொற்களுண்டென்று பேராசிரியர் தெ. பொ. மீ. கூறியதாகக் கிளீசன்துரை வகுப்பிற் சொன்னதும்; அப் பேராசிரியரின் சென்னை மாணவியர் Bank என்பதற்குத் தமிழ்ச் சொல் 'பாங்கி' என்று வகுப்பில் எழுந்து அத் துரைமகனுர்க்கு விடையிறுத்ததும்; பேரா. சீகண்டையா ஹொன் என்னும் கன்னடச் சொல் பொன் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபென்று மாணவர்க்குக் கூறியபோது, வண்ணனை மொழியியல் வகுப்பில் வரலாற்று மொழியியலைப் புகுத்தல் தகாது என்று பேரா. தெ. பொ. மீ. கண்டித்ததும், தமிழில் எட்டு வேற்றுமையும் சமற்கிருத வேற்றுமையமைப்பைப் பின்பற்றினவென்று கால்டுவெல் தவருகக் கூறியதை மறுக்காது, அதையே தேற்றஞ் செய்து வட நாட்டுத் தமிழ் மாணவர்க்குத் தமிழைப் பற்றித் தாழ்வான எண்ணம்படுமாறு அவர் கற்பித்ததாக நான் கேள்விப்பட்டதும், மிக வருந்தத்தக்க செய்திகளாகும். வேனிற் பள்ளி முடிந்தபின், அண்ணுமலைநகர் திரும்பினேன்.

பர். சட்டர்சியின் அ. ம ப. க மொழியியல் துறைத் திறப்புவிழாத் தலைமையுரை, பின்னர் நீட்டியுங் கூட்டியும் வரையப்பட்டு வெளியிடப் பெற்றது. அது பகுதியளவில் (Demy size) சிறு குக்கில் (Small Pica) எழுத்தில் 34 பக்கங் கொண்டது அதில், அவர் தமிழைப் பற்றிய தம் மதிப்பீட்டைப் பின்வருமாறு தெரிவித்திருக்கின்ருர்.

''உண்மையில், கழக(சங்க)இலக்கியமென்னும் பழந் தமிழிலக்கியப் பகுதிகளை நான் முதன்முதல் (ஆங்கில மொழி

பெயர்ப்பு வாயிலாய்ப்) படித்தபோது, சமற்கிருத இலக்கியத்திலும் மறைவில்லாது அதன் சூழ்வெளிக்கு அல்லது வட்டத்திற்கு உட்பட்ட பிற இந்திய இலக்கியத்திலும் இல்லாத புதுமையை அஃது அளித்ததைக் கண்டு வியப்பில் ஆழ்ந்துவிட்டேன். முதுபழங்காலத்துத் தமிழக் குமுகாய (சமுதாய)ச் சூழ்வெளி, இராமாயணம் மகாபாரதம் போன்றவற்ருலும், புராணங்களாலும், செந்திறச் சமற்கிருத இலக்கியத்தாலும், வட இந்திய ஆரிய மொழிகளிற் போன்றே தென்னிந்தியத் திரவிட மொழிகளிலுமிருக்கும் இடைக்கால இலக்கியங்களாலும், காட்டப்பெறும் சூழ்வெளியினின்றும் வேறுபட்ட சில கூறுகளைக் காட்டுவதாய்த் தோன்றிற்று. தமிழிலக்கியத்தில் வாழ்க்கையை அடுக்கும் வழியும், அதன் மறநிலைச் சூழ்வெளியும், இந்திய இலக்கியத் துறைக் களத்தில் ஒரு தனிப்பட்ட நிலைமையைக் காட்டின. களவென்றும் கற்பென்றும் இருபெருந் தொகுதிகளாக அல்லது வகுப்பாகக் காதலை வகுத்த பழந்தமிழ் வகையீடு, ஆரிய இலக்கியம் என்பதின் அல்லது சமற்கிருதத்தின் கண்டிப்பான மரபியற் கருத்திற்கு மாருகப் போவதாய்த் தோன்றிற்று. (களவென்பது. வளர்ச்சியடைந்த இளந்தையரிடைப்பட்ட ஒருவகைக் கட்டுபாடற்ற காதலைக் குறிக்கும். இது, நன்று திருந்தின குமுகாயத்திற் போல் வளர்நிலையர் அல்லது இளந்தையரிடைப்பட்ட உறவியல்கள் சிறந்த முறையில் மறபிய லொழுங்கு படுத்தப் பெருத முந்தியல் மாந்தரினத்துள் மிக இயற்கையாகக் காணப்படுவதாகும். கற்பென்பது, சட்ட முறைத் திருமணத்தின் பிற்பட்ட ஒழுங்கான மரபியற் காதலைக் குறிக்கும். இஃது இருபாலிடைப்பட்ட உறவியல்களுள் முதன்மை பெற்றதாகும்) மீண்டும், தொல்காப்பிய நெறி மொழிகட்கு மூலமான முந்து தமிழ் நூல்களில் காதல் விரிவாகக் கூறப்பட்டவகை, முற்றிலும் புதுமையானதாகவும் அனைத்திந்தியச் சமற்கிருத அடிப்படைச் சார்பற்றதாகவும், தோன்றிற்று. இங்ஙனம், வேறுபட்ட வாழ்க்கைக் கூறுகளும் பொருளியற்பண்பாட்டு நிலைக்களங்களும் காதலுணர்ச்சி பயிற்சிகளும் குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல்,பாலைஎன்னும் ஐந்திணைகளின் விரிவான உள்ளிடை யுறவும், உண்மையில் அவையிருக்கிறபடியே, அதாவது பழந் தமிழிலக்கியத்தின் ஒரு புது முதன்மையாக காட்சியளித்தன. இவையெல்லாம் காட்டும் கலைவனப்பும் புதுமையும் எனக்கு மிகுந்த உள்ளக்கிளர்ச்சியூட்டின. அதனல், இவ்வகையால் 1500 முதல் 2000 வரைப்பட்ட ஆண்டுகட்கு முந்திய தமிழகத்தை இந்தியாவின் பிற பாகங்களினின்றும் சிறப்பாக வேறுபடுத்திக் காட்டுவ தொன்றுண்டென்னும் நிலைமையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று, என் உள்ளத்தில் ஓர் ஆர்வம் எழுந்தது. பண்டைத் தமிழிலக்கியத்திற் சமற்கிருதச் சொற்களும் கருத்துக்களும் மிகக் குறைவென்று, பழந்தமிழ் ஆர்வலர் சிலராலும் மிகத் திட்டவட்டமாய்ச் சொல்லப்பட்டது.

இவ்விரு செய்திகளும், [கழக இலக்கியத்திற் போன்றே] தமிழிலக்கிய மரபு முற்றும் சமற்கிருதச் சார்பற்றதென நிலை நாட்டுவவாய்த் தோன்றின. இது, தமிழிலக்கியப் பண்பாடு களின் புது முதன்மையிலும் ஒப்பியல் முன்மையிலும் எளிதாக உணரக்கூடியதும் முறைப்பட்டதுமான பெருமை கொள்வதற்கு உணர்வெழுப்பும் தேற்றமான ஊற்றுக உண்மையில் ஆகிவிட் டது; அதனுல், பிரிவுணர்ச்சியை மிகுதியும் தூண்டிவிட்டது. இவ்வுணர்ச்சி, இற்றை நாளில், குமுகாயம், அரசியல், சமயம் ஆகிய பிற துறைகளிலும் ஊக்கப் பெறுகின்றது. இதுவே ஒரு வெளியார்க்குத் தோன்றும் கருத்து.

''தமிழ் இங்ஙனமிருப்பினும், ஏறத்தாழ உடன் அடுத்தே, கழக நூல்களை முன்னினும் ஆழ்ந்து கற்று [ஆனுல் ஆங்கில மொழி பெயர்ப்பு வாயிலாகத்தான்] நான் அயலானேயல்லன் என்பதைக் கண்டேன். இன்புறுத்துவனவும்மிகத் திட்டவட்ட மாய்ப் புதுமுதலானவுமான கூறுகளைக் கொண்டிருந்தும். மிகப் பழைய தமிழ் நூல்களிற்காணும்'சூழ்வெளி உட்சாருன அல்லது அடிப்படையான செய்திகளில், மிகுதியும் மகா பாரதத்திலும் இராமாயணத்திலும் புராணங்களிலும் காண்பதாகவேயிருந்தது. கழக நூன் மொழி [நான் எங்கெங்கே மூலத்தை நோக்கினும்], மிகப் பெரும்பால் இந்திய மொழிகளில் தூய தற்சமங்கள் அல்லது திரிபடையாச் சமற்கிருதச் சொற்கள் மிகுதியாயிருப்ப தைக் கருதும் பொழுது, உண்மையில் புதுமையாகவே தோன் றிற்று. ஆனுல் [மிகப் பிந்தித்தான்], சமற்கிருதச் சொற்களும் பிற ஆரியச் சொற்களும் தமிழிற் புகுந்து தன் சொல்லாகும் பொழுது அடையும் மாறுதல்களைப் பற்றி, அனவரதவிநாயகம் திறம்பட வரைந்த நூலைப் பார்வையிட்டபின், புதுமையாகவும் விளங்காமலுமிருந்த பல சொற்கள் தெளிவானவும் தெரிந்தனவு மாயின. புது முகங்களின் பின் அறிமுகங்கள் காட்சியளிக்கத் தொடங்கினவென்று சொல்ல வேண்டும். சமற்கிருதச் 'சபா' பழந்தமிழில் 'அவை' என்று திரிந்ததைக் கண்டபோது திடுக் கிட்டுவிட்டேன் இங்ஙனமே, சந்தி, சகசிர, [சகஸ்ர], அச [அஜ], பூர்வாசாட [பூர்வாஷாட], சிராவண [ஸ்ராவண], காவ்ய, தர்ம, கோபால, கன்யகா, தூண]ஸ்தூண], இசுத்திரீ [ஸ்த்ரீ], துலசீ, லோக்க, பிராமண [ப்ராஹ்மண], துரோணீ, [த்ரோணீ], சிநேக [ஸ்நேஹ], தேச முதலிய நூற்றுக் கணக் கான சமற்கிருதச் சொற்களும் பெயர்களும் அதேபோல் வடிவு மாற்றப்பட்டும், அவ்வடிவு மாற்றத்தில் அந்தி, ஆயிரம், அயன், பூராடம், ஆவணி, காப்பியம், தருமம், கோவலன், கண்ணகி தூணம், தி, துழாய், உலகு, பார்ப்பான், தோணி, நேயம், தேயம், என்பனபோல் வடிவு மறைந்தும், உள்ளன. ''யோ தேவ-நாமான் யகிலானி தத்தே'': பரம் பொருளே கடவுளின் பல்வேறு பெயர்களாலும் மக்களிடை வழங்கும் வெவ்வேறு

தெய்வங்களாலும் அறியப் படுகின்றது. ஆகையால், விட்டு ணுவை மால் அல்லது மாயோனிலும், குமாரனை முருகன் அல் லது சேயோனிலும், துர்க்கையைக் கொற்றவையிலும், வேறு சில தேவரையும் தேவியரையும் தென்னிந்தியாவில் வழங்கும் அவரின் புதுப் பெயர்களிலும் கண்டு மகிழ்ந்தேன். கருத்துலகும் சமயக் காட்சியுலகும் முற்றும் ஒத்திருந்தன. இவை சமற்கிருத இலக்கணத்திற்போல் பிராமண அறிவியலையும், மகா பாரத இராமாயண புராணங்களிற்போல் பிராமண இந்து மதத்தையும், தழுவியவை. இவற்றிற்கு வேதங்கள் அடிப்படை. இவற்றைச் சார்ந்தவை வேள்வியும் தீ வளர்ப்பும், மலர்ப் பூசையும் தெய்வ வழிபாடும், நாற்பெருங் குலமும் நால்வகை வாழ்க்கை நிலையும் பற்றிய பிராமணக் கருத்துக்களும், ஆகும். இந் நாற்குலமும் நால்வகை நிலையும் பண்டைத் தமிழகத்தாரால் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்தன. ஒரு கால், வட இந்தியாவிற்போல் அவை அடைந்த வளர்ச்சியில் அவரின் ஒத்தாசையும் பெற்றிருக்கலாம் இனி அவற்ருெடு சமண புத்த மதங்களும் தமிழகத்திருந்தன. வினையும் [கர்ம] உலக வாழ்க்கையும் [ஸம்ஸார] பற்றிய பொது வான பட்டாங்கு நூற்கருத்துக்களும் [திருவள்ளுவரின் உடன் பிறப்பாட்டியரான ஔவையாரால் ஒரு பெரு வழக்கான வெண் பாவில் மிகச் சுருக்கமாகவும் அழகாகவும் இயல் வரையறுக்கப் பட்ட] அறம் பொருளின்பம் வீடு [தர்மார்த்த காம மோக்ஷ] என்னும் நாற்பால் [சதுர்வர்க்க] பற்றிய ஏடல்களும், வேறுபல அனைத்திந்தியக் கருத்துக்களும் அங்குள்ளன. இந்தியாவின் தலை சிறந்த செவியறிவுறூஉச் செய்யுளான திருக்குறள் முப் பாலை (திரிவர்க்க) மட்டும் எடுத்துக் கூறியது, தக்கதே என்று எனக்குப்பட்டது. அதன் ஆசிரியரான பேரறிவர் தம் அறி வுடைமையால், நாலாம் பாலாகிய வீட்டைப்பற்றிக் கூருது, அதுபற்றிய கருத்தை, காணப்படாத மெய்ப்பொருளை அவரவர் அடையும் வழிக்கேற்பத் தனிப்பட்டவர்க்கு விட்டுவிட்டார். ஒருவன் தன் பாட்டிக்கு [நூல் நூற்கக்] கற்றுக் கொடுப்பது அடாச் செயலே. கொல்லத் தெருவில் ஊசி விற்க வேண்டிய தில்லை நெடுநாளுக்கு முன் என் மனத்தில் உரத்துப்பட்டது என்னவென்ருல் பழந் தமிழிலக்கியம் மிக மிக இன்பந்தரும் கூறுகளிற் சிலவற்றை அமைக்கும் வெளிப்படையானவும் மேம்பட்டுத் தோன்றுவனவுமான பல புது முதன்மைக் குறிப்புக் களைக் கொண்டிருப்பினும், சமற்கிருதத்தினின்றும் ஏனையிந்திய விலக்கியத்தினின்றும் பிரிக்கப்பட முடியாதென்பதும், இந்து என்னும் சொல்லை அதன் மிகப்பெரு விரிவான பொருளில் ஆண்டால், அது (பழந்தமிழிலக்கியம்) பெரிதும் அனைத்திந்திய இந்து இலக்கிய வட்டத்திற்கு உட்பட்டதென்பதும், இவை பற்றி ஐயம் எதும் இருக்க முடியாதென்பதுமே. இது, தமிழகத் திற்கும் இந்தியாவிற்கும் பெருமை தரும் நாயன்மாரென்றும் சிவத்தூயரும் ஆழ்வாரென்றும் திருமாலடியாரும் இயற்றிய

- அத் தமிழ்ப் பெரியாரின் நினைவாக -

திரு. வி. க.

செந்தமிழாக்கம்: **முகவை. ஆடவல்லான்.** எல். எம். ஈ.
["கனுசருவேடிவு" ஆங்கில இதழில் பழனி. நா. கோபு அவர்கள் எழுதிய கட்டுரையின் தமிழாக்கமிது]

இந் நாள் நல்லோர் நாவில் வாழும் திருவாரூர். வி. கலியாண சுந்தரனார், ஏழு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன் இலக்கியப் பேராளராக இருந்தார். இவர் 1883 ஆம் ஆண்டு ஆகசுடுத்திங்கள் 26–ஆம் நாள் தோன்றினார். தம் வாழ்வின் பெரும் பகுதியைச் சிதறுண்ட தமிழகத்தைச் சீரமைப்பதினும், முறைமைக்கு வழிகாட்டுவதினும் கழித்தவர். அவர் அரசியலாளராகவும், மெய் விளக்குநராகவும் இருந்தமை வையகமறிந்ததே. அரசியலாளராகவிருந்து உழைப்பாளர் கொள்கைக்காகக் கச்சைகட்டி நின்றவர். அவர்களின் இன்னல் களைய பல்பெரும் வேலை நிறுத்தங்களை முன்னின்று நடத்தியவர். சட்டத்துக்குட்பட்ட, சட்டத்துக்குகந்த உரிமைகளுக்காக அவர் போராடியமையால், ஒவ்வொரு முறையும் வென்று முடிசூடினார். அன்னாரின் நேர்மைத்திறமும், நெஞ்சத்து ஈரமும், நெஞ்சத் தூய்மையுமே எண்ணிலா ஒன்றிப்புகளை அயல் நயத்தவின்றி அவர்தம் தலைமையேற்கச் செய்தன. எனவே அவர்கால உழைப்பாளர் ஒன்றிப்புகள் கொண்டாடும் 'கோமகனாக அவர் விளங்கியதில் வியப்பில்லை. மாற்றலரை வென்றெறிய அவர் பயன்படுத்திய போர்க் கருவியைப் பற்றிச் சொல்லத்தான் வேண்டும். வன்முறைச் செயற்றிறமேற் கொண்டோ, பிறரை மேற்கொளத் தூண்டியோ, தத்தம் கோரிக்கைகளை ஆலையாளர் ஒப்புக் கொளச் செய்ததில்லை. அது குறித்து விழிப்புடனிருந்தார். இன்னா செய்யாமையின்பால் உலைவிலா உறுதிகொண்டிருந்தார். நாட்டுரிமை மீண்டிட அறிவுறுத்தி நிறைவுறுத்திய

முன் பக்கத் தொடர்ச்சி:

பாடல்கள் பற்றிய செய்தியில் மிகவுண்மையாகும். அப்பாடல்கள் தம் ஆழமுடைமையாலும் அழகினாலும், தம் தேவியல் மாந்தியல் தன்மையாலும், இந்தவுலகத்திற்கு மட்டுமன்றி மன்பதை முழுவதற்குமுள்ள ஆவிக்குரிய வாழ்வையும் நாட்டங்களையும் வளம்படுத்தியுள்ளன.'' (தொடரும்)

சூழ்வெளி = atmosphere.
ஏடல் = idea.
பட்டாங்கு நூல் = philosophy.

சால்பின் சான்றோர். அவர் காந்தியின் அறவழியைக் கடைப் பிடித்தார். ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' எனுந் தலைப் பெயருடைய நூலை எழுதியுள்ளார். அதில் அவரோடு தமக்குள்ள நெருக்கத்தைப் புலப்படுத்துகிறார். காந்தியார் அறிவுறுத்த விரும்பிய மெய்த்திறஞ்சேர் நற்செய்திகளை நம்மக்கள் புரிந்துகொண்டு விளக்கம் பெற அந்நூல் உதவுகிறது எனவே காந்தீயத்தின்பால் பரிவும் துணையும்கொண்டு அவர் எளிய வாழ்க்கை நடத்தியதில் வியப்பில்லை.

மெய்விளக்குநராக விருந்து தமது உன்னிப்பையெலாம் சைவச் செம்பொருள் துணிவின்பால் ஒருமுகப்படுத்தினார் அவர் எழுதிய ''முருகன் அல்லது அழகு'' எனு நூலில் பழம்பெருந் தமிழர்களின் பழக்க வழக்கங்கள் குறித்தும், அவர்கள் அருள் திருவழகினை வணங்கிய முறை குறித்தும் பலபடப் பேசப்படுகிறது. அது படித்துச் சுவைக்கவல்ல சுவடி. அவர் தமிழ்நாடு நன்கறிந்த, அரசியல் மெய் விளக்குநராகத் திகழ்ந்தார். அவரின் தகைமேவிய நலஞ்சார் பண்பியல்பும் மேம்பாட்டொளி நிறைந்த நேர்த்திறமும் அவ்வப்பொழுது வெளிப்பட்டன. பல்கூட்டங்களிலும் ஒவ்வொன்றிலும் அன்னார் அணிபெற வீற்றிருந்தார். மக்களோ, கள் விலக்கல், புலால் மறுப்பு, கடிமணம், மங்கை நல்லாருக்குள்ள மதிப்பு முதலியன குறித்து அவர் கருத்துகளை அறிய ஆவல் கொண்டிருந்தனர். அவரின் ''பெண்ணின் பெருமை'' பயன்தரும் ஒரு நூலாகும். தமிழ்ப் பெண்டிரின் உண்மை நிலையினைச் சரிவரப் புரிந்து கொள்ளாத தற்கால இளைஞர்களுக்கு அரும்பெரும் பாடங்களை அஃது உணர்த்துகிறது.

மங்கலோ, மழுங்கலோ கிஞ்சிற்றுமில்லாதவர் திரு. வி. க. குறிப்பொருள் எதுவாயினும் அவர் சொற்பெருக்காற்றினால் அமிழ்தனையதாயும், ஆர்வமூட்டுவதாயும் இருக்கும். அவர் பேச எழுந்தால், அவர் குரலில் ஆட்சியும், அடலேற்றின் வீறும் இழைந்திருக்கும். இளைஞர்க்கு விரிவுரையாற்றுவதென்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும். அதிலும் தமிழ்நாடும் அதன் பண்பாடும் குறித்துப் பேசும்பொழுது அவற்றின் தகை நலன்களை உணர்ச்சியார்வத்தோடு அவர் விளக்குவது, அன்னாரின் பெருந்தன்மைக்குச் சான்று பகர்வதாயிருக்கும். அன்னாரின் ஆள்வினை அறிவுத்திறனும், மெச்சத்தகுந்த ஆட்பண்பும் அவரைத் திறனாளராகவும் முனைப்பாளராகவும் ஆக்கியன. அவர் சொற்றிறமிக்க சொலல் வல்லார் என்பதோடு, உணர்ச்சியார்வமிக்க எழுத்தாளர். எடுத்துக்கொண்ட பொருளை மனத்தில் பதியத்தக்கத் தொடர் மொழிகளைக்கொண்டு நிறைவுற அமைப்பதோடன்றி, புதுமையும் இனிமையுஞ் சேர்ந்த நடை நயமிக்க எழுத்துகளை மேற்கொண்டு தம் நூல்களில் கூட்டுக் கவர்ச்சி

பூட்டினர். சுவைஞர்தம் உன்னிப் பனத்தையும் கவர்ந்து இன்பூட்டுவதில் அவர்தம் நடை நயத்திற்கு இணையேயில்லை.

திரு. வி. க. தளரா உழைப்பாளர். தம் நயனெதிர்வுக்கோர் அவிரொளியாகத் (Beacon Light) திகழ்ந்தார். ஆனல் அவ்வொளி இன்று மங்கிவிட்டது. உழைப்பாளர் ஒன்றிப்புகள் மெய்ம்மையும், நேர்த்திறமும் கொண்ட தலைவரை இழந்துவிட்டன. அவரின் இறுதி நாட்களில் அவலம் ஊடாடியது என்பதை அறியும் பொழுது வருத்தம் மேலிடுகிறது. ஆம்; கண் பார்வை இழந்து, பொருளீட்டமும் இன்றி இருந்தார். அவ்வாறிருந்தும், அவர் எவர் மேலும் வெறுப்புக் கொள்ளவில்லை. அன்னர் எஞ்ஞான்றும் பிறர்பால் அருள்கூர்வும், பெருந்தன்மையுங் கொண்டிருந்தமையான், அனைவரும் அவரிடம் பணிவுடன் நடந்தனர். உயர் நிலையும், படிமானமுமுள்ள புலம்பன் இந்நாள் நம்மை விட்டகன்றுவிட்டது. ஆயினும் அவரிடம் குடிகொண்டிருந்த துணிவு, தன்னடக்கம், வாய்மை, மொய்ம்பு, ஆகியவற்றை நாம் கடைப்பிடித்தால் இம் மண்ணக வாழ்க்கையைப் பயனுடையதாக ஆக்கிக் கொள்ளலாம். ●

[4-ஆம் பக்கத் தொடர்ச்சி]

அம் மாணவர்களுக்கு அறிவிக்கப் பெறவில்லை என்பதே அந் நடவடிக்கை எத்துணைப் போலியானது என்பதைக் காட்டப் போதுமான சான்றாகும். இதுபற்றிக் கல்லூரி மேலாளர்கள் யாவரும் எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம். மாணவர்களின் பள்ளி நிறுத்தங்களைப் பற்றியும், அதன் விளைவாக ஏற்பட்ட சலசலப்புகளைப் பற்றியும் ஆரவாரமான முறையில் வெளியிட்ட தமிழகச் செய்தித் தாள்களும், அம் மாணவர்கள் வெளியேற்றப்பெற்றதை எம்முறையிலாயினும் வெளியிடாமற்போனது கருதத் தக்கதும், கண்டிக்கத் தக்கதுமாகும். தமிழ்க்கெனப் போராடும் தமிழ்த் தலைவர்களும், தமிழ்த் தொண்டர்களும் அரசினருடன் தொடர்பு கொண்டு வெளியேற்றப் பெற்ற அம் மாணவர்களுக்கு அறம் வழங்குவார்களாக! இன்றேல் அவர்தம் போலித் தொண்டும், ஆரவாரப் பேச்சுகளும் பொய்பட்டுப் போகும் என்பதையும், அவர்களும் கால வட்டத்தில் இம் மாணவர்களைப் போன்றே அரசினரால் புறக்கணிக்கப்பட நேரிடும் என்பதையும் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். ●

முகவர்கள் கவனத்திற்கு.

- ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளுக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
- படிகள் சரி பார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
- தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

பறவைகள் மாநாடு

துரை-மாணிக்கம்

தென்னன் பொதிகைத் திருமலையில் அன்றொருநாள்
பொன்னின் பரிதி புலர்ந்தெழுமுன், ஆங்கிருந்த
ஓரா யிரம்விழு(து) ஊன்றிப் புடைவிரிந்து
கார்போர்த்த வாறு கவிந்திருந்த ஆலடியில்
தெற்கில் குமரி முனைதொடங்கிக் கேரளத்தும்,
வெற்புநிறை ஆந்திரத்தும், கன்னடத்தும், கூர்ச்சரத்தும்,
விந்தியத்தைத் தாண்டி விளங்குபல நாட்டிலும்வாழ்
இந்தியப் புட்கள் இணைந்தொருங்கே வீற்றிருந்த!

கண்ணைப் பறித்திழுக்கும் காந்தப் பறவைகளாம்
வண்ண மயிலும் வளர்கிளியும் பூங்குயிலும்
மின்னற் குருவியும் மேவும் புறவினமும்
நன்னர் மொழிபயிலும் நாகணவாய்ப் புள்ளினமும்
வாழ்வை இசைக்களித்து வாழ்வானம் பாடியும்
சூழ்வுநிறை காகமும் கூர்த்தகுரல் ஆந்தையும்
வாவல் இனமும் வளைகழுத்துக் கொக்கினமும்
சேவலொடு கோழிகளும் சேர்ந்தங் கிணைந்திருந்த!
ஆங்கவற்றின் மேலே அரசக் கழுகொன்று
வீங்குகின்ற மூச்சோடும் வெற்றி நினைவோடும்
சூழ்பறவைக் கூட்டத்தைச் சுட்டெரிக்கும் பார்வையொடும்
'வாழ்க பறவையினம்' என்றவொரு வாழ்த்தெழுப்பிப்
பின்னர் வருமாறு பேச்சைத் தொடங்கியதே:

''என்னருமை மக்களே! இன்றோர் திருநாளாம்!
இன்றோடு நாம்அமைத்த ஏற்றமிகு நல்லாட்சிக்
கொன்பது மாதங்கள் ஓடி மறைந்தனவாம்!
இங்கொன்றன் ஆட்சியிலே இங்கொன்றும் அங்கொன்றும்
பொங்கும் பசிப்பிணி,நோய் பூண்டுயிர்கள் மாண்டாலும்,
பொல்லா விலங்குகளால் புன்மையிடர்ப் பட்டாலும்,
வல்ல கொலைகளவு வாய்த்தாலும், நீங்களெலாம்
எஞ்சி யிருக்கின்ற காரணத்தால் இவ்வாட்சி
'அஞ்சுமா றில்லை; அனைவர்க்கும் ஒப்புதலே'
என்னும் ஒருகுறிப்பை யானறிந்து போற்றுகின்றேன்–''
(இன்ன இடத்திலே எங்கிருந்தோ 'இல்லைஇல்லை'

என்றோர் பறவை இடுக்கில் தலைமறைத்துக்
கொண்டு குரல்கொடுக்கக் கூட்டம் சலசலக்கும்)

'ஆரங்கே?' என்றே அதிர்ந்த குரலெழுப்பி,
நேரங் கடத்தி, நிமிர்ந்தவொரு பார்வைதந்து
வல்ல கழுகரசன் சொற்கள் வழங்கியது:
''புல்லர் ஒருசிலர் மாறாய்ப் புகன்றாலும்
இந்திய நாட்டுப் பறவை இனத்துக்கு
வந்த பெருமையினை வாய்வலிக்கப் பேசிடினும்
காது புளிக்குமோ? நெஞ்சம் கரையாதோ?
ஓது பெருமை உலகப் பெருமையன்றோ?
ஆதலினால் உங்கள் அனைவர்க்கும் ஒன்றுசொல்வேன்;
தீதாய் நினைவற்க; உள்ளந் திறந்துரைப்பேன்;
திங்களொன்றாய் ஆய்ந்துவந்து தீர முடிவெடுத்தே
உங்களது நன்மையாம் ஒன்றே கருதி
இதனை உரைக்கின்றேன்; இங்குவந்த நீங்கள்
அதனை உவந்தேற்க அட்டிசொல மாட்டீர்கள்
என்பதையும் யானறிவேன்; என்றாலும் இங்குசிலர்
தம்பழமை பேசி இசைவு தரமறுப்பர்;
இன்னவரைப் பற்றியான் என்றும் வருந்துகிலேன்;
அன்னவரோ பண்டைப் பெருமை அழப்பேசிப்
பொங்கிவரும் நல்ல புதுக்கருத்தை யொப்புகிலார்;
இங்கிவரின் நாக்கை இழுத்தறுக்க நானறிவேன்;
முன்னோர் முயன்று முடியாமற் போனதிதாம்;
என்னோர் திறத்தால் இதுமுடியும் என்றுணர்ந்தேன்;

''என்னருமை மக்களே! இன்றுநாம் வேண்டுவன:
முன்னர் நறுங்கல்வி! மூக்குநிறை நல்லுணவு!
பின்னர் குடியிருப்பு! பீடுற்ற நல்வாழ்க்கை!—
அல்லவா?'' என்றரசப் புள்ளங் கதட்டிடவே,
எல்லாமும் 'ஆம்ஆம் எனவே தலையசைத்த;
இவ்விடையால் உள்ளம் இனித்த கழுகரசன்,
ஒவ்வாதார் இங்கே உளராவென் றேவினவ,
காக்கை யினம் 'இல்லை; இல்லை' எனக்கரையும்.
சீழ்க்கை யடித்துவந்து 'வெளவால்' வரவேற்கும்.
பின்னும் கழுகரசன் பேசத் தொடங்கியதே!
''இன்னும் உரைப்பேன்; இதுகேளீர்! நாமெல்லாம்
ஒற்றுமையாய் வாழ்ந்தால்தான் முன்னர் உரைத்தவற்றை
முற்றும் சிறப்பாய் முடித்தல் எளிதாகும்!
இன்றேல்நம் எண்ணம் எரியுள் இடுபஞ்சாம்!
அன்னவோர் ஒற்றுமை எங்ஙன் அடைகுவதோ
என்று வினவின் இதோநான் உரைக்கின்றேன்;
ஒன்றும் பிறழாமல் உள்ளத்தில் கொள்ளுங்கள்.
நம்முள் பலஇனங்கள்; நம்முள் பலமொழிகள்;

நம்முள் பலவாழ்க்கை; நம்முள் பலவழக்கம்;
ஊரும், மொழியும், ஒழுக்கமெலாம் ஒன்றுவதே
சீரும் சிறப்புமாம்! இல்லையெனின் சீரழிவே!
ஈகை உளத்தோடே எண்ணி முடிவுசெய்தேன்;
ஆகையினால் நீங்கள் அனைவீரும் எம்மின்
கழுகு மொழிதன்னைக் கற்றுவரல் வேண்டும்:
பழகின் மிகஎளிது! பைங்கிளியும் பூங்குயிலும்
ஆடல் மயிலும் அவரவர்தம் முன்னோரின்
பீடாம் மொழியே பெரிதென் றுரைத்திடினும்
ஒற்றுமைக்கு நல்லவழி உண்டால், கழுகுமொழி
கற்றுவரல் ஒன்றே! கனிவாக மீண்டுரைப்பேன்:
காக்கை யொருவகையா 'கா கா கா' வென்றுரைக்கக்
கூக்கூக்கூ வென்றே குயிலிசைக்கப், பைங்கிளியோ
அக்காஅக் காவெனவே ஆர்க்க, மயிலகவ;
கொக்கரக்கோ வென்றிந்தச் சேவல் குரலெழுப்ப-
தூத்தூத்தூ என்ன மொழிக்குழப்பம்? தோழரீர்!
பூத்துக் குலுங்கும் புதுமைக் கருத்துகளைச்
சற்றே நினையுங்கள்; உள்ளம் சரியாகும்!
பற்றே தவிரப் பழமை உயர்வில்லை!
இந்தக் கருத்தை எதிர்த்திடயிங் காருமிலர்
என்றே கருதுகின்றேன்; இல்லையா. காக்கையே!''
என்றுதன் அண்டை இருக்கின்ற காக்கையினை
மென்றுகூ ழாக்கி விழுங்கும் இடிக்குரலில்
கேட்டிடவும், காக்கை கிடுகிடுத்து மெய்வெயர்த்தே
ஆட்டுந் தலையோடும் ஆடாக் குரலோடும்
''ஆமாமாம் அப்படியே ஆரெதிர்ப்பார்'' என்றுரைத்தே
பூமாலை ஒன்றைப்போய்ப் போட்டு வணங்கியது;
வௌவால் இனங்களெலாம் 'வாழ்கரசன் வாழ்க'வென
ஒவ்வும் மனக்கருத்தை ஆங்கே உரைத்தமர்ந்த;

ஏந்தும் மனத்துயரால் நெஞ்சில் இடியேறக்
காந்தச் சிறுகுருவி உள்ளம் கனன்றிருக்கும்!
தோகை மயில்களெலாம் நெஞ்சம் துடிதுடிக்கும்!
வேகும் உளத்தால் குயில்கள் வெதிர்வெதிர்க்கும்!
பச்சைக் கிளிக்குப் பதைபதைப்பு வந்தாலும்
அச்சம் ஒருபுறத்தே ஆட்கொள்ள நின்றிருக்கும்!
காதற் புறவினமோ, கன்னித் தமிழ்ப்புலவர்
தீதென்ன வந்தாலும், உள்ளம் திரியாமல்
பண்டை இலக்கியத்தைப் பாடுவதும் விள்ளலுமே
தொண்டென்று கூறித் தொடைநடுங்கிக் கொண்டு,வரும்
ஆக்கம் கருதி அமர்வதுபோல் ஆங்கிருக்கும்!
நோக்கம் எதிர்பார்த்தே நிற்கும் கரிக்குருவி!
வானம்பா டிக்குருவி வந்த தடையெண்ணி
மானந் திரிந்திழிந்த மற்றப் பறவைகளைப்

பாட்டால் மனந்திருப்பி உள்ளத் துணர்வெழுப்பும்
நாட்டத்தோ டின்னும் நடப்பதெலாம் பார்த்திருக்கும்!'
நாகணவாய்ப் புள்ளினமோ நாவும் அசைக்காது
வாகான நல்முடிவு வாராதோ என்றிருக்கும்!
ஆந்தை,'அக் கூ'வென் றவலக் குரல்கொடுத்தே
ஏந்துகின்ற துன்பம் எடுத்துப் பறைசாற்றும்!
கொக்குக் குலமெல்லாம் கூம்பி யிருந்தபடி
தக்கதொரு நேரம் தமக்குவரக் காத்திருக்கும்!
இன்னபடி ஆங்கே இருந்த பறவைகளின்
முன்னர் கழுகரசன் மொய்ம்புறவே உள்ளுவந்தும்,
ஆட்சி தலைக்கொண்ட ஆள்மைச் செருக்காலே
மீட்சியிலாப் புட்களெலாம் மீளத் துடிதுடிக்கும்
காட்சி கருதாமல் கால்மேலோர் கால்போட்டு
மாட்சி குறையாதும் மன்னன்போல் வீற்றிருக்கும்!

எண்ணம் முதிர்ந்துவர எல்லாப் பறவைகளும்
விண்ணென்று வானில் வெளிப்பட்டுப் போவதுவும்,
மீட்டும் மரக்கிளைமேல் வந்தமர்ந்து மீளுவதும்
கூட்டமாய்க் கூடிக் குசுமுசுவென் றுய்வதுமாய்
ஆங்கிருக்கக் கண்ட கழுகரசன் மீண்டுரைக்கும்.

''ஈங்கென்றன், கூற்றிற் கெதிர்க்கூற் றிருக்குமெனில்
உள்ளத் துணிவோ டெழுந்தே உரைத்திடுக!
தள்ளத் தகாத கருத்தென்னின் மேற்கொள்வோம்''
என்றே குடிநலத்தை எண்ணி உரைப்பதுபோல்
நன்றே புளுகிற்று! நாட்டமெலாம் ஒன்றே!
இருந்திருந்து பார்த்தே எழுந்ததொரு சிட்டே!
அருந்தின் ஒருவாய்க்கும் ஆகாக் குருவியினைக்
கண்ணுருட்டிப் பார்த்துக் கழுகரசன் 'என்ன'வென,
வண்ணச் சிறுசிட்டு வாய்பதைக்கக் கூறியது;

''வன்மைக் கழுகரசே! வாழுகின்ற புட்களெல்லாம்
முன்னம் பயிலும் மொழியைத் துறந்தினிமேல்
உங்கள் கழுகுமொழி ஒன்றே மொழிவதெனின்
எங்கள் மொழியால் எழுகின்ற பல்லிசைகள்
மாய்ந்தொழிந்து போகாவோ? மாய்ந்துவிடின் அந்நிலைமை
வேய்ங்குழலும் யாழும் விறல்முழவும் நல்லுறுமும்
கொம்பும் முரசும் குடப்பறையும் துந்துபியும்
பம்பையும் சங்கும் பதறும் கரடிகையும்
சேர்ந்தியம்பும் பல்லியங்கள் யாவுமே ஒன்றேபோல்
ஆர்ந்தே ஒலிப்பதுபோல் ஆகாதோ? பல்லிசையேன்?
மல்லிகையும் தாமரையும் உள்ளம் மகிழ்மலரும்
முல்லை மருக்கொழுந்தும் முள்ளலரி நன்மலரும்

ஒன்றுபோல் நாற்றம், உருவம் பெறுவதெனின்
நன்றாமோ? அந்தநிலை நாளில் புளிக்காதோ?
ஒன்றில் மணங்கசந்தால் ஒன்றில் உளமினிக்கும்!
ஒன்றில் துயர்மிகுந்தால் ஒன்றில் மகிழ்வலரும்!
இன்னபயன் சேர இயற்கை பகுத்தவற்றை
என்னபயன் எண்ணி இணைத்துவிடப் பார்க்கின்றீர்?
உள்ளம் உடலுணர்வு ஊறுகின்ற நல்லறிவு
கொள்ளும் பயன்முற்றும் சேரக் குமிழ்ந்தவன்றோ
சொல்லும் மொழிகளெல்லாம்? நாம்முனைந்து தோற்றியவோ?
எல்லா மொழியும் இயற்கை தருவிளைவே!
ஓசை வடிவாய், உலவும் மொழியாவும்
பேசும் மொழியினுக்கு முந்துநிலை! பேருலகில்
எல்லாப் பொருளும் இருக்குநிலை வேறும்போல்
எல்லாப் பொருளும் ஒலிக்குநிலை வேறாகும்!
அவ்வவ் வொலியமைப்பே அவ்வம் மொழியாகும்!
இவ்வொலியை எல்லாம் எடுத்துப் பிசைந்துருக்கி
ஒன்றாக்கி விட்டால் உலகில் நடப்பேது?
நன்றாக எண்ணி நலங்காண வேண்டுகின்றேன்.

ஒன்றொழியின் அப்பொருளில் ஊறும் பயனழியும்;
நின்று வழங்கும் மொழிக்கும்அந் நேர்ச்சியே!
உள்ள உணர்வலர ஊறும் மொழியழியின்
உள்ளம் அழியும்! அதன்பின் உருவழியும்!
காக்கை மொழியழிந்தால் காகம் உடனழியும்!
கூக்கூவென் றார்க்கும் குரல்சாகின் சாம்குயிலும்!
சிட்டின் மணிக்குரலோ சீரழியின் சிட்டழியும்!
அட்டியில்லை எம்மை அழித்திடவே எண்ணிவிட்டீர்!
கொல்லாதீர்! எம்மின் குரல்வளையைக் கொய்யாதீர்!
எல்லாப் பறவைகட்கும் ஏற்ற கருத்தமைப்பீர்''

என்று மணிச்சிட்(டு) இயம்பி முடித்திடவும்
'நன்றுநன்று' என்றங்கே நாற்றிசையும் சூழ்ந்திருந்த
புட்களினம் கூறிப் பொலபொலெனத் தம்சிறகால்,
வெட்கிக் கழுகு வெலவெலத்துப் போகுமட்டும்
ஆர்த்த ஒலியெழுப்பி ஆங்கெழுந்தே ஒன்றையொன்று
சேர்த்தணைத்தே உள்ளம் சிலிர்த்திடவே வான்நோக்கிச்
'சிவ்'வென்று தாவிச் சிறகடித்துப் போயினவே!
வௌவாலும் காக்கைகளும் மட்டும் வருந்துவபோல்
தொங்குந் தலையோடு துன்பமுகம் காட்டினவா
றங்கே இருந்த அரசக் கழுகுக்கே
ஆறுதலை கூறி, அவையும் பிரிந்து சென்ற!
மாறுதலை—புட்கள் மலர்ச்சியினை எண்ணியெண்ணி
உள்ளமிகச் சோர்ந்தோ உணர்வழிந்து போயடங்கக்

தொண்டர் படைப் பாட்டு

பாவேந்தர் பாரதிதாசன்

(அவர் நினைவாக)

—*—

வாரீர்தொண் டர்படைக்கெல் லாரும்-விரைந்துசேர
வாரீர்தொண் டர்படைக்கெல் லாரும்

பாரீர் நமதுதமிழ்க் கன்னல்-உயிர்ப்பயிரை
வேரோடு சாய்க்கவரும் இன்னல்-களைந்தெறிய (வா)

சீரோ டிருந்ததமிழ் நாடு-தந்தருளிய
செம்மைப் புலவர்தந்த ஏடு-பலப்பலவும்
பேரே இலாதொழித்த தோடு-நமதொழுக்கம்
பேணு தகற்றிவிட்ட கேடு-பொறுத்ததனுல்
பாரோர் புகழ்தமிழ்ப்பண் பாடு-தனையழிக்கப்
பார்க்கும் பகையின்நரிக் காடு-தனை எதிர்க்க
ஊரார் தம்வீட்டுக்கு வீடு-சிறுத்தைநிகர்
ஒற்றைத் தமிழர்விழுக் காடு-வெளியில் வந்து
போராடுவோம் மகிழ்ந்து நேரோடியே விரைந்து (வா)

(முன்பக்கத் தொடர்ச்சி)

கள்ளக் கழுகரசன் கண்ணீர் வடித்ததுகாண்!
மங்கிவரும் ஆட்சி மறைய இருப்பதையும்,
பொங்கிவரும் மக்கட் புரட்சிப் புயலினையும்,
வெய்ய புரட்சியினுல் வீணுன மாற்றமும்
பொய்மைக் கருத்தும் பொடிப்பொடியாய்ப் போவதையும்
எண்ணிப், பறவைகள்முன் ஏதேனும் வம்புரைகள்
பண்ணி யிருந்தால் படும்துயரம் உள்நினைந்தும்
தாக்கப் படாமலுயிர் தப்பியதைக் கண்டுவந்தும்
ஏக்கமொடு சென்ற தெழுந்து!

பறவையியல்

பறவைகளின் வியத்தகு உண்மைகள்.

ஆங்கிலத்தில் : ALAN DEVOE.
தமிழில் : செம்பியன்.

"எனக்கு உடுக்களைப் (Stars) போன்றே ஒரு பறவையும் வியப்பாக இருக்கின்றது" என்று எலியட் கோயுசு (Elliott coues) என்றும் புகழ் பெற்ற பறவையியல் நூலறிஞர் கூறியுள்ளார். வியத்தகு இறக்கைகளையுடைய பறவைகளைப் பற்றி ஒரு சிறிது அறிய முயலுவோமாயின் இயற்கையின் அதிர்ச்சியைத் தரும் மிக மிக வியத்தகு உண்மைகளை அறியலாம். பறவையின் அமைப்பு முறையின் ஒவ்வொரு நிலையும், நம் உள்ளத்தில் ஒவ்வொரு வகையான பேருண்மையைத் தோற்றுவிக்கும். பறத்தலைப் பற்றிய பேருண்மைகளை நோக்கும் பொழுது பறவை வானின் 'அருட் பேற்றைப்' போன்றும்; அன்றமை (Air) பறவை உருக்கொண்டுள்ளது போன்றும் தோன்றுகின்றது. இறக்கைகளைப் பொறுத்தமட்டில் பறவை, பளுவின்மையாகவும்,காற்றில் எழும்திறம் உடையதாயும், கணையின் விரைவையும்மாந்தனின் உள்ளுணர்வைத்தொடும் தன்மையையும் உடையதாகவும் விளங்குகின்றது. வியக்கத் தகுந்த மிகக்கூர்மையான பார்வையும் விரைவாகப் பறக்கும் ஆற்றலும், பறவைக்குத் தேவையானதால் அதன் மூளையும் ஆற்றலுடையதாக இருக்கின்றது. பறவையின் கண்களின் ஒரு பகுதிமட்டும் நம் பார்வையில் படுவதால், அவை மிகப் பெரிய உறுப்புகள் என்பதை நாம் உணர முடிவதில்லை மண்டையோட்டிலும் அவற்றிற்கு இடம் மிகக் குறைவு என்றே கூறலாம். பல்வகைப் பருந்துகளும், ஆந்தைகளும், நம் விழிகளைவிடப் பெரிய விழிகளை உடையன. இம் மிகப்பெரிய கண்கள் பறவையின் மூளையைச் சிறப்பில்லாதவாறு, மண்டையோட்டின் பின் பகுதிக்கு வலிந்து அழுத்தித் தள்ளுகின்றன. பல பறவைகளின் கண்கள் அவற்றின் மூளையைவிட மிக்க எடையுள்ளன. சில பறவைகளின் ஒரு கண்ணே அவற்றினுடைய மூளையின் எடையை உடையதாய் இருக்கின்றது. இப் பறவைகட்கெல்லாம் மூன்றும் கண்ணிமை ஒன்றும் உள்ளது பறவை வானில்மிக்க உயரத்தில் மிக விரைவுடன் பறக்கும்பொழுது, முன்னும் பின்னும் நகர்ந்து, ஒரு மென்திரைச் சீலை போன்று அது காப்பளிக்கின்றது.

ஆந்தையானது அடர்ந்த காட்டின் இருட்டினை, மங்கலான ஒளியில் நாம் உணருகின்ற அளவினும் பத்து மடங்கு ஆற்ற

லோடு அளவிடுகின்றது. ஒரு பருந்து உணவு தேடும் பொருட்டு உயர்ந்த மரக்கிளையில் அமர்ந்திருக்கும்பொழுது ஒருகல் தொலைவில் உள்ள சிறு இரையையும் நன்கு காணக்கூடிய, ஊடுருவும் பார்வையை உடையது. ஒரு மரங்கொத்தியானது மரத்தில் உள்ள பூச்சிகளின் முட்டைப் புழுக்களை வலிந்து, பிடுங்கி யெடுக்கும் பொருட்டு மிகமிக நீண்ட தன் நாக்கைப் பயன்படுத்துகின்றது. அந்நாக்கு அதன் தலைக்குக்கீழ் உட்புறத்தின் மேலாக வளைந்து சென்று கண்களுக்கு முன்னால் நிலைபெற்றிருக்கின்றது. பல்வகைக் கடற்கரைப் பறவைகள் மிகத்துல்லியமாக நேரத்தை உணரும் அமைப்பைப் பெற்றிருக்கின்றன. அவை நிலப் பகுதிக்குட் சென்று, குறித்த நேரத்தில் திரும்பி வந்து தங்கள் குஞ்சுகட்கு இரையளிக்கின்றன. பொதுவாகப் புதர்களில் காணப்படுகின்ற குருவி மிகையான அலையதிர்வுகளையுடைய உயிர்த் துடிப்பைக் கொண்டுள்ளது. அதனுடைய மிகச்சிறிய நெஞ்சாங்குலையானது, ஒரு மணித்துளியில் 500 முறை துடிக்கின்றது. சில பறவைகளின் உடல் வெப்பம் 110 பாகைக்கும் (Degrees) உயர்ந்து காணப்படுகின்றது. 'இரசுக்கின்' என்ற பாவலன், பறவையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, "காற்றின் சுழற்சியால் கொணரப் பெற்ற இரகுக் கற்றை" என்று கூறினான். ஒரு பறவை ஒரு முறையில் உள்ளிழுக்கும் காற்றின் அளவு, நுரை யீரலுக்குள் செலுத்தும் அளவை விட மிகையானது. அதனுடைய நுரையீரலானது மேலும் ஒன்பது துணைக் காற்றுப் பைகளுடன் சேர்க்கப் பெற்றுள்ளன. அவற்றில் சில எலும்புகளின் உட்புறம் வரை விரிவு படுத்தப் பெற்று நீட்சி. கொண்டிலங்குகின்றன. ஒரு பாலூட்டியின் எலும்புகள் பளுவும் செறிவும் உடையன. ஒரு பறவையின் எலும்பு தன் உட்புழையில் காற்றைக் கொள்வதற்கு, கடற் பஞ்சைப் போன்று, வலையமைப்பும் உட்டுளைகளும் மென்மையும் பூண்ட நுண்ணமைப்பை யுடையது. பறவை உயிர்க்கும் பொழுது காற்றானது எலும்புக்குள்ளிருக்கும் நல்விக்குள்ளும் செல்கின்றது.

பறவையின் மண்டையோடுங்கூடக் காற்றைத் தன்னகத்தே கொண்டு பளுவற்ற நிலையை அடையும் அமைப்பையுடையது. குறைந்த எடையுள்ள தட்டாகத் திகழ்கின்றது. உயிருள்ள பறக்கும் நுண்பொறியாகிய பறவைக்கு, அதன் முகப்பில் எடை குறைவாயிருக்க, இயற்கையானது பற்களைக் கொடுக்கவில்லை. ஏனெனில் பற்களும், அவற்றைப் பொதிந்து வைக்கும் தாடை எலும்பும், அதைச் சூழ்ந்திருக்கும் சதைப்பற்றும் எடை யுள்ளவையாயிருக்கும் என்ற காரணமே! பறவையின் பின்பகுதி எடையற்றிருக்க அதனுடைய வால் இறகுகள் எல்லாம் ஒரு குட்டையான எலும்பில் அமைக்கப் பெற்ற எலும்பின் கூறுபாடுகளாயிருக்கின்றன. இயற்கையில் காணப்பெறும் பொருள்கள் யாவற்றையும் விட, இறகுகள் தம் எடை, அளவு,

இவற்றை நோக்க மிக மிக வலிமையுடையனவாக உள்ளன. ஓர் இறகானது, தண்டின் இரு புடைகளிலும் ஒழுங்காக நீட்டிக் கொண்டிருக்கும், மயிர் வரிசைகளையுடையது போல் காணப் படுகின்றது. இறகின் நடுத் தண்டிலிருந்து இரு புடைகளிலும் நீட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு மயிரும் தத்தம் இருபுடை களிலும் இறகுச் சுணைகளைப் பெற்று இணைப்புண்டிருக்கின்றது. ஓர் இறகுச் சுணை தன்னளவில் ஒரு நுண்ணமைப்பு வாய்ந்த, இரு புடைகளிலும் ஒழுங்காக நீட்டிக்கொண்டிருக்கும் மயிர் வரிசைகளையுடைய முழுமையான இறகு போன்றதே. ஒரு பெருக்காடியின் அருகில் ஓர் இறகுச் சுணையை வைத்துப் பார்த் தால் இச் சுணையின்மீது அதனின் சிறிய நுண் சுணைகள் காணப்பெறும். இந் நுண்சுணைகள் கொக்கிபோன்று வளைவுள்ள வாகக் காணப்பெறும். இந்த நுண் சுணைக் கொக்கி வலைகள், இறகுச் சுணைகள், மயிர்கள் இவை யாவும் ஒன்றோடொன்று இணைத்துப் பின்னப்பட்டுள்ளன. ஓர் இறகில், இறகுச் சுணை களும், நுண் சுணைக் கொக்கிகளும் ஒரு கோடிக்கும் மேற் கொண்டனவாயிருக்கும்.

முழு நிறைவானதும். பளுவற்றுப் பறக்கும் நுண் பொறியு மான, பறவையின் ஆமைப்பு விலங்கினத்திலேயே மிகமிகக் கடினமான தொன்றாகும். பறவையின் முதுகெலும்பாக இணைக் கப்பெற்றச் சிறு எலும்புத் தொடர், இளகியதாயும், ஒன்றோ டொன்று சேர்க்கப் பெற்றும், உடல் சுழன்று அசையும் தன் மையை ஏற்குமளவிற்கு மிக மிக வன்மையுடையதாகவும் இருக்கும். பின்புற எலும்பு, விலா எலும்புகள், மார்புக் கூட் டெலும்பு இவை ஒப்புமைக் கூற இயலாத அளவு வலிமை பொருந்திய கூடாக அமைந்துள்ளன. பறவையின் விலா எலும்புகள், வலிமை மிக்கத் தசை நார்களால் ஒன்றோடொன்று இறுக்கிப் பின்புற எலும்பிலும், மார்பு எலும்பிலும் பிணைக்கப் பெற்றுள்ளன. வலிமை மிக்க பின்புறத் தோளெலும்புகள் இரண்டும், இளகும் தன்மை வாய்ந்த காறை எலும்புகளுடன் (Collar Bones) முன்பகுதியின் குறுக்காகப் பிணைத்துக்கட்டப் பட்டுள்ளன. இவற்றின் கீழே மிகவும் வலிமைவாய்ந்த விளிம் பெலும்பானது இடையில் சென்று, இறக்கைகளைத் தொழிற்படுத் தும் பெரிய மார்புத் தசை நார்களை இணைக்கின்றது. பல பறவை யினங்களில் இந்தத் தசைநார் பறவையினுடைய மொத்த எடையில் நான்கில் ஒரு பங்கிற்கு மிகையாகவே அமைந்திருக் கின்றது.

பறவைகள் இறக்கைகளை அடிக்குமுகத்தான், அவற்றைக் கீழ்நோக்கி உந்தும்பொழுது, அவை காற்றில் மிதந்து முன் னுக்குத் தள்ளப் பெறுகின்றன. இந் நிகழ்ச்சியை மிக விரை வுள்ள நிழற்படக் கருவியினால் காணலாம். ஒரு பறவையானது

சிற்றுருவாக்கப்பட்ட இயற்கை வானூர்தி என்று கூறலாம். கீழ் நோக்கு உந்தில் ஒவ்வோர் இறக்கையும் முன்னோக்கி நகர்கின்றது. உட்புறப் பாதி இறக்கை உடலுடன் ஒட்டி நிற்கின்றது. முன் பகுதி விளிம்பு வானூர்தியின் இறக்கையைப் போன்று சிறிது சாய்வாக்கப் பெறுகின்றது. மேற் பகுதி இறகிலாகிய வளை முகட்டால் கவிந்துள்ளது. வெளிப்புறப் பாதி இறக்கையானது அதன் நடுவில் இடம் பெற்றிருக்கின்ற மணிக்கட்டெலும்பினால் தனியே இயக்குவிக்கப் பெறுகின்றது. இறக்கை அசைவின்பொழுது அதனுடைய தொடக்க இறகுகள் அதற்கு நேர்கோணத்தில் கிளர்ந்தெழுந்து வானூர்தியினுடைய சுழல் விசிறியின் (Propellers) பயனைத் தருகின்றன. உட்புறப்பாதி இறக்கையானது மேலும் கீழுமாக வளைந்து அசைகின்றது. முன் புறச் சரி மட்டமான இறக்கை, பறவையானது நிலைப்பாட்டுடன் மேலெழும்பிப் பறக்க வாய்ப்பளிக்கின்றது. பறவை மேலெழும் பொழுதும்; கீழிறங்கும் பொழுதும் இறக்கைகளின் முன்பக்க முனையிலுள்ள சிறப்பான இறகுகளின் உதவியால் காலத்தாழ்த்தத்தைத் தவிர்க்கின்றது. இவற்றைச் சற்றே உயர்த்தித், தமக்கும் அடி இறக்கைகட்கும் இடையில் நீண்ட குறுகிய வெளியை அமைப்பதன் வழி, முழுமையான காற்றழுத்தமுள்ள கீழ்ப் பகுதியை அமைக்கின்றது.

பறவையின் பறக்கின்ற அருஞ் செயலானது மிக மிக வியப்புக்குரியதாயும் நம்புதற்கரியதாயும் இருக்கின்றது. ஒரு பெரிய கூப்பர் (Cooper) பருந்தானது ஒரு கவுதாரி இனப் புள்ளை (Quail) பிடித்தற்பொருட்டுப், பின்தொடரும்பொழுது, திடுமென அப்புள் ஐந்து அல்லது ஆறடி உயரத்திலிருந்து ஓர் அடர்ந்த செடிப் புதரில் எறிந்த கல்லைப்போல் விழுங்கால், அப் புதரின் மறைவிடத்தில் அப்புள் விழுவதற்குமுன் மிக்க விரைவுடன் அப் புதரின் கீழ்ப் பாய்ந்து, விழுகின்ற அப் புள்ளைப் பற்றிக் கொண்டு ஒருநொடிப்பொழுதுகூடக் காலத் தாழ்த்தமின்றி, மிகத் துல்லியமாக மேலெழுந்து செல்கின்றது. மிக விரைவாகப் பறந்து செல்லும் வல்லூறுனது (Sparrow Hawk) திடுமென ஏற்படும் தடைகளிலிருந்து, மிகமிகச் சரியான விரைவுத் திருப்பத்தினால் தன்னைக் காத்துக் கொள்கின்றது. ஓர் ஆப்பிரிக்கக் கழுகானது (African Eagle) இரையைப் பற்றும் நோக்கோடு மணிக்கு 100 கல் விரைவோடு கீழ்நோக்கிப் பாய்ந்தாலும் மிக மிக (அதிர்ச்சி தரத்தக்க) வியக்கத்தக்க ஆற்றலுடன் தன் விரைவைத் தடைப்படுத்தி இறக்கைகளையும் வாலையும் விரித்துத் தரையினின்றும் 20 அடி உயரத்தில் திடுமென நிறுத்தத்தைப் பெறுகின்றது. ஒரு பறவையானது நிலத்தை யடையும் பொழுது ஏற்படும் அதிர்ச்சியை கால்களின் உதவியால் தவிர்த்துக் கொள்கின்றது. கால்கள் மூன்று தனித்தனி வலுவுள்ள எலும்புகளினால் எதிர்ப்புறத்தை நோக்கி இயங்கும் இணைப்புகளைப்

பெற்றிருப்பதால் மெத்தென்ற நிலையினைப் பெறுகின்றது. இது மிகமிகப் பயனுள்ள அதிர்ச்சியைத் தவிர்த்தற் பொருட்டு இயற்கையில் அமைந்துள்ள நுண்ணமைவு.

ஓரான் பறவையானது தான் உறையும் நிலத்தின் உரிமையைக் குறித்தற் பொருட்டும், தன் துணையை அழைத்தற் பொருட்டும், இனிமையாகப் பாடுவதற்கு வியப்பான ஒலியெழுப்பும் சிறு குழலைப் போன்ற உள்ளுறுப்பைப் பெற்றிருக்கின்றது. இவ் விசைப் பெட்டியில், எலும்பாலாகிய இசைக் கருவி ஒன்றுளது. அதனுடன் மிக மெல்லிய தோலினால் விரிக்கப் பெற்ற ஓர் அமைப்பு இணைக்கப் பெற்றுள்ளது. இது மிகச் சிக்கலான தசை நார்களினால் கட்டுப்படுத்தப்பெறுகின்றது. இவை பறவையானது மெய்ம்மறந்த நிலையில் இசை யெழுப்பும் பொழுது, அதனுடைய நுரையீரலினின்றும், வெளிப்படுத்தப்பெறும் காற்றால் அசையும் சிறு தோலமைப்பை (Volve) மிக நேர்த்தியாக இறுக்கியும், தளர்த்தியும் செயற்படுத்துகின்றன. பறவையின் இளவேனிற்கால இனிய குரலொலிகள், இயற்கையின் தனிப்பட்ட உள்ளத்தைத் தொடும்படியான நிகழ்வுகளால் வழக்கமான உணர்வு தூண்டப்பெற்று அவற்றைக் காதல்வேட்டம்கொள்ளச் செய்கின்றன. கொட்டைகளை உண்ணும் சிறிய பறவையானது காதல் மயக்கில் எதிர்பாராத அளவு கவர்ச்சியைப் பெற்றிருக்கின்றது. அது பொழுது வணங்கிச் செடியின் (Sun Flower) விதைகளை மிக்க விருப்பத்துடன் தேர்ந்தெடுத்துத் தன்னுடைய துணைக்கு அளிக்கின்றது. அப் பெண் பறவையானது விடாப்பிடியாக இணங்க மறுத்தால் ஆண் பறவையானது அவ் விதைகள் ஒவ்வொன்றின் மேலோட்டை நீக்கிப் பரிசாக அளிக்கின்றது. காதலுணர்வால் பெண்ணினப் பறவைகளைக் கவருமுகத்தான் 'லாப்விங்சு' (Lapwings) எனும் பறவை தன்னுடைய இறகுகளைக் கொடி பறப்பதுபோல் அசைத்தும்; கொக்கு, நாரை போன்ற பறவைகள் கூத்திட்டும்; மரக்கோழி வானில் வட்டமிட்டுப் பறந்தும், 'வின்னோசு' (Winnows) எனும் புள், வெளிப்புற, முதனிலை இறகுகளின் துணைக்கொண்டு காற்றினால் 'சீழ்க்கை'யொலியை மறத்தற்கியலாத காதலழைப்பாக விடுத்தும் காதலை நிகழ்த்துகின்றன.

பறவைகள் பலவற்றின் கூடுகள் மிக மிக நுண் அமைப்புடையனவாயும் நம்புதற்கரியனவாயும், அவ்வளவு நுண்ணுணர்வோடு கூடிய ஆற்றலுடன் அமைத்தனவாயும் உள்ளன. பறவையின் கூடு அமைக்கும் நுண் ஆற்றல் குறைந்தது ஐந்து மகப்பேற்றுக்குள் பட்டறிவும் பயிற்சியும் இன்றியே, கைவரப் பெற்றது என்பதை அறிவியல் நிலைநாட்டியுள்ளது. நான்கு மகப்பேற்றுக்குத் தூங்கணங் குருவிகள் (Weavr Birds) கூடு கட்டத் தெரியாமலும், கூட்டையோ அல்லது கூடு கட்டும்

பொருள்களையோ அறியும் திறனற்றும், கூடமைப்பையுடைய இடங்களில் வாழ்கின்றன. அதன் பிறகு ஐந்தாம் பேற்றுக்குள் தம் அறியாமையிலிருந்து விடுபெறுகின்றன. உடனே அவை தங்கள் முன்னோர்களைப் போன்றே, மிகவும் நுண்ணுற்றலும் சிக்கலும் வாய்ந்த, முழுமையான பிழையற்றக் கூடுகளைக் கட்டத் தொடங்குகின்றன. பறவைக்கு குஞ்சானது இயற்கையால் அளிக்கப்பெற்ற தற்காலிகமான அலகின் முனையால் முட்டையினின்றும் வெளிவருவதற்கு அவ்வோட்டினைத் தட்டி உடைக்கின்றது. வியப்பளிக்கும் அக் குஞ்சுகள் எண்ணிப் பார்க்க வியலாத அளவு பசி உணர்வை உடையனவாயிருக்கின்றன. சிறிய சிகப்பு வண்ண மார்பினையுடைய 'இராபின்' (Robin) பறவைக் குஞ்சு 14 அடி நீளத்திற்கு மேலும் இணையான நிலப் புழுக்களை ஒரு நாளில் உண்கின்றது. இங்கிலாந்திலுள்ள மிகச் சிறு 'இரன்' (Wren) என்னும் பறவை தன் குஞ்சுகளுக்குக் கதிரவத் தோற்றத்திற்கும், இரவின் தொடக்கத்திற்கும், இடைப் பட்ட நேரத்தில் 1217 முறைகள் உணவு உண்பித்தன என்று கணக்கிடப் பெற்றுள்ளது. 31 'கிராம்' எடையுள்ள ஒரு 'கருப்புத் தெரன்' (Black Tern) பறவைக் குஞ்சு ஒவ்வொரு நாளும் 48 'கிராம்' எடையுள்ள உணவை விழுங்குகின்றன. ஒவ்வொரு பறவையும் உயிர் வாழ்வதற்குத் தன்னுடைய எடையில் குறைந்தது, பாதி அளவு ஒரு நாளில் உண்கின்றது.

கோடையிறுதியில் பறவைக் குடும்பங்கள் அடர்ந்த காட்டிற்குள் சென்று இனிய குரலொலிகளை எழுப்பியவாறு தங்கள் இறகுகளை உதிர்க்கின்றன. மிகப் பழமையான இறகுகள் நுண்ணயம் வாய்ந்த மாற்றத்தால் படிப்படியாக மீண்டும் அமைக்கப் பெறுகின்றன. இரண்டாம் இறகு விழுவதற்கு முன், முதலில் உதிர்ந்த இறகுக்கு மாறுக முளைத்த இறகானது அரை குறை வளர்ச்சியுறுகின்றது. இம் முறையில் பறவைகள் பறப்பதற்கு இடையூறு நேரா வண்ணம் தொடர்ந்து முழுமையான இறகுதிர்ச்சி நிகழ்கின்றது. வெள்ளிய இறகுகளையுடைய பறவைகள், தனூர்சு (Tanagers), புண்டிங்சு (Buntings) போன்ற பறவைகளின் ஒளியுள்ள இறகுத் தொகுதிகள் முழுமையும் மங்கிய நிறமுடையனவாக மாற்றி அமைக்கப்பெறுகின்றன. இலையுதிர்கால இடப் பெயர்ச்சியில் பறவைகள் தரை மட்டத்திலிருந்து 5000 அடிக்கு மேலும், மிகமிக உயரத்தில் பறந்து நம்புதற்கரிய தொலைவைக் கடக்கின்றன. மிகச் சிறிய வானம் பாடி இனத்துக் கருப்பு வண்ண 'வார்புலர்' (Warbler) 'கனடா' நாட்டில் கூடமைத்துக் கொண்டு 4,000 கல் தொலைவிலுள்ள 'பிரேசில்' நாட்டிற்குச் செல்கின்றது. ஆட்காட்டிக் குருவியினத்தைச் சேர்ந்த பொன்னிறப் 'புளோவர்' (Plover) 'ஆர்டிக்' பெருங் கடல் முடிவிலிருந்து 'அர்சன்டைனு' வரைக்கும் 8,000 கற்கள் பயணம் செய்கின்றது. 'சாம்பியன்' (Champion)

வரலாற்று இலக்கியம்.

பெ. இராசாராமன், எம். ஏ.,

வரலாற்று விரிவுரையாளர், அரசினர் கலைக்கல்லூரி, கடலூர்.

இறவாப் புகழ் பெற்று அழியாத இலக்கியங்களைக் கொண்டது நம் அருந்தமிழ் மொழி. அவை கால வெள்ளத்தையும் கடந்து நிற்கும் ஆற்றல் படைத்தவை; நாகரீகத்தின் கொடுமுடியில் தமிழர்கள் வீற்றிருந்த ஞான்று ஈட்டிய கருவூலங்கள்; பண்டைப் பாவாணர்கள் இயற்றிய பனுவல்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடிகள் மட்டுமல்ல; வாழ்வியல் முறைகளையும், வாழ்ந்து மறைந்த மன்னர்களின் மறச் செயல்களையும் எடுத்துச் சொல்லும் வரலாற்றுச் சுவடிகள். 'உயர்ந்த பனிமலைபோல் ஓங்கு புகழ் பெற்று நம் முன்னோர் வாழ்ந்தனர் என்பதை நமது இலக்கியங்கள் தெளிவுற எடுத்துக் காட்டுகின்றன.

இன்றைய வரலாற்று அறிஞர்கள் பண்டைய இந்திய வரலாற்றில் தமிழக வரலாற்றினை பெரிதும் ஒதுக்கியதோடு மட்டுமன்றி, அதற்குறிய சிறப்பான இடத்தையும் கொடுக்கத் தவறிவிட்டனர் என்பதை கற்றறிந்தார் மறுக்கார். அஃதேயன்றித் தமிழரின் தொன்மையான உயரிய பண்பையும் நாகரித்தையும் உலகுக்கு உணர்த்தப் போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லையென்றும் கூற முற்பட்டிருக்கின்றனர். ''தமிழக வரலாறு'' எனத் தனிப் பெயர் சூட்டி ஒரு நூலினை அன்றைய தமிழறி

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்னும் புடைப் பெயர்ச்சியுடைய குளிர்மையை நாடும் ஆர்டிக் கடற் பறவை கோடைக் காலத்தில் வடக்கு நிலமுனையைச் சார்ந்த நிலத்திலும் (North Polar) குளிர் காலத்தில் தென் நிலமுனைப் பெரும் பனிப் பரப்பினையும் (Antarctica) நாடுகின்றது. அதனுடைய ஓராண்டின் பயணத்தொலைவு 22000 கற்களாகும்.

இயற்கை நூல் வல்லுநர், பறவைகள் மிகத் திறமையாக நில இயல்பற்றியும் கதிரவக் கோணத்தைக் கொண்டும் நேரத்தைக் கணக்கிடவும் அறிந்திருக்கின்றன என்பதை நிலைநாட்டியுள்ளனர். ஆனால் இரவுக் காலங்களில் அடையாளம் ஏதுமற்ற விசும்பில் வழியறிந்து செல்லும் பறவையின் தனிப்பட்ட ஆற்றலைப்பற்றிய உண்மைகள் அறியப்படாமலிருக்கின்றன. பறவை வாழ்க்கையின் மிகமிக வியத்தகு உண்மைகள் முழுமையும், மிகச்சிறந்த இயற்கை நூல் வல்லுநரான ''வாட்டர்டன்'' என்பார் ''அறியலாம்; ஆனால் வணங்கத்தான் வேண்டும்'' என்று நான்கு சொற்களில் மிகவும் எளிமையாகவும், சிறப்பாகவும் கூறியுள்ளதை நினைவூட்டுகின்றன. *

ஞர்கள் தோற்றுவிக்கவில்லை யெனினும் அவர்கள் உருவாக்கிய ஒப்பற்ற பாவியங்களில் அவர்தம் காலங்களில் நிகழ்ந்த தலையாய வரலாற்று நிகழ்ச்சிகளை ஆங்காங்கே குறிக்கத் தவறினாரில்லர்.

பெரும்பாவியத்திற்கு இலக்கணம் கூறும் தண்டியலங்காரம் பெரும்பாவியம் தன்னிகரில்லாத் தலைவனைப் பாடுவதோடு, மலை கடல் நாடு வளநகர் அனைத்தும் பாடவேண்டும் என்று நெறி வகுக்கின்றது. தமிழிலுள்ள எல்லாப் பெரும் பாவியங்களிலும் அன்றைய அரசியல், நாட்டு வளம், வாழ்வியல் முதலியன பேசப்படுகின்றன. நமக்குக் கிடைத்த ஐம்பெரும் பாவியங்கள் அனைத்தும் இன்றுள்ள வரலாற்றுச் சுவடிகள்போல் கால வரையறைப் படுத்த நிகழ்ச்சிகளை நமக்கு அறிவிக்காவிடினும் பழங்கால மக்களின் வாழ்வு முறைகளை ஒளிவு மறைவின்றித் தெரிவித்தலால் அவை வரலாறுபோல் போற்றத் தக்கனவே யாகும். பாவியத்திற்கும் வரலாற்றுக்கும் உள்ள வேறுபாட்டினை உணர்த்தப் போந்த பௌரு (Bowra) என்ற மேற்றிசை வரலாற்று வல்லுநர், ''பாவியத்தின் செய்முதற் பொருள்கள் பெரும்பான்மையும் வரலாற்று நிகழ்ச்சிகளே'' என்றும், 'ஆனால் அவற்றினை வகுத்தமைக்கும் முறையும் மாற்றி அமைத்துக் கொள்ளும் தன்மையும் மாறுபட்டவை' என்றும் கூறுகின்றார். (Its meterials are largely historical, but its arrangment and adaptation of them are not).''பெரும்பாவியம் அன்றைய சமுதாய நிலைகளை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் என்ற ஆபர் கிராம்பி (Abrcrombie) யின் கருத்தும் இதற்குத் துணை நிற்கிறது. (Grate epic poetry will always frankly accept the Social Conditions within which it is Composed.)

ஈடு இணையற்ற இத் தமிழ்நூற்களை ஆக்கிய அன்றைய புலவர்கள் அனைவரும் முடித்த கேள்வி முழுதுணர்ந்த பெருமக்கள். இயற்கையிலேயே எல்லா நலங்களும் வாய்க்கப்பெற்று விளங்கினர் தண்டமிழ்ப் புலவர்களில் தனி நாயகமாக விளங்கும் வான்புகழ் வள்ளுவனின் அறிவாற்றல் இன்றும் நம்மை வியக்கச் செய்கிறதன்றோ? அவன் பேசாத நெறியில்லை; கண்டறியாப் பொருளில்லை. இல்லறத்தின் இயல்பினைப் பேசும் வள்ளுவன், துறவியோ என்று ஐயுறும் வண்ணம் துறவறத்தின் தூய்மையை எடுத்துத் துலக்குகிறான். ''பற்றற்றான் பற்றினைப் பற்றுக'' என்று பரிந்து கூறும் அந்தப் பாவலன், இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்'' என்று பொங்கி யெழுந்து பொது உடைமை பேசுகின்றான். ஆன்றமைந்த அந்தச் சான்றோனின் அறிவின் ஆழம் அளவிட முடியாப் பெருங்கடல். எல்லாத் துறையிலும் வல்லவர்களாக அன்றைய அறிஞர்கள் திகழ்ந்தார்கள் என்பதை வள்ளுவனின் தெள்ளிய அறிவு நமக்குப் பறை சாற்றுகின்றது.

பாவியங்களில் தலையானதாக விளங்கும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் ஓர் ஒப்புயர்வற்ற வரலாற்று நூல். கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் சேரனின் அழைப்பிற்கிணங்கிக் கண்ணகிக்குப் படிமம் வைத்த விழாவில் கலந்து கொண்டான் என்ற குறிப்பு கல்விக் கழகம் (Academy) வைத்துக் கன்னித் தமிழ் வளர்த்த காலத்தை அளவிட்டுத் துணிந்து கூறப் பயன் படும் கருவியாகும். இப்பெரும் பாவியத்தை யாத்த இளங்கோ வடிகள் வழங்கத் தொலையாத வளத்தினை உடைய பூம்புகார் நகரின் புகழினையும், அன்று அப் பெருநகரம் உலக நாடுகள் அனைத்திற்கும் அங்காடியாகவும் தமிழகத்தின் தலை சிறந்த துறைமுகப் பட்டினமாகவும் விளங்கிற்று என்றும் கூறுகின்றார். புகாரின்கண் பிறநாட்டின் அரும்பொருள்கள் வந்து தொகுதலைப் பட்டினப்பாலையும் குறிக்கும். இதையே பண்டித நேரு அவர் களும் தமது "The Discovery of India"–வில் "Old Tamil poems tell us of the flurishing port of Kaverippoompatti-nam on the Kaveri River in ihe South which was a centre of international trade" எனக் குறிப்பிட்டுள்ளார்.

பூம்புகாரின் மற்றொரு பகுதியாகிய மருவூர்ப்பாக்கத்தில் யவனர்கள் (Greeks) கடற்கரையை யொட்டிக் கண்கவர் மாளிகைகளை அமைத்திருந்தனர் என இளங்கோ அடிகள் பாடி யிருப்பது அன்றைய தமிழர்கள் உரோம, கிரேக்க நாட்டு மக்க ளுடன் வணிகத் தொடர்பும் அந் நாட்டு வேந்தர்களுடன் அரசியல் உறவும் பெற்றிருந்தனர் என்பதற்குச் சான்று பகர் கின்றது. இளங்கோ செய்த சிலம்பின் ஒவ்வொரு பரலும் பழந் தமிழரின் பெருமை வரலாற்றை ஒலிக்கத் தவறியதே இல்லை. இன்றைய இந்துமாக்கடல் ஒரு காலத்தில் பரந்த நிலப்பரப்பாக இருந்ததென்றும், கொடிய கடலின் அடாத செயலுக்கு ஆட் பட்டு அழிந்தொழிந்ததென்றும், அப் பகுதியில் ஓடிக்கொண்டி ருந்த பஃறுளி ஆறும், நிலைத்து நின்ற குமரிக்குன்றும் கடலோடு கடலாய்க் கலந்தன என்ற பேருண்மையினைப்,

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"

என்பதனால் அறியலாம். ஆனால் இக்கால வரலாற்றுப் பேரா சிரியர்கள் பஃறுளிஆறும் குமரிக்கோடும் புலவரின் உள்ளத்தில் தோன்றிய வெறுங் கற்பனையே என்று கூற முற்படும் செயல் கண்டிக்கத் தக்கதாகும். பஃறுளி ஆறும் குமரிக் கோடும் நிலவி நின்றன என்பதற்கான எண்பு சிலப்பதிகாரத்துக்கு மூற்பட்ட நூலாகிய புறநானூற்றிலும் காணலாம்.

"முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"

எனப் பாண்டியன் பெருவழுதியைப் பாடப் போந்த புலவர் நெட்டிமையார் 'பஃறுளியாற்று மணலினும் பல்லாண்டு வாழ்க' என்று வாழ்த்துகின்றார். இதனின்றும் அப் பஃறுளியாறு நெட்டிமையார் காலத்தில் நிலவி நின்றது என்பது பெறப்படும்.

அன்றைய தமிழன் காதலையும் மறத்தையும் இருகண்களாக மதித்தான் அந்த மறத்தமிழனின் புகழினைப் பாடுவதுதான் புறநானூறு. தென் குமரியின் தெற்கிலுள்ள இந்துமாக் கடல் தோன்றுவதற்கு முன் தோன்றிய செய்யுட்களும், அதன் பின்னர் நிகழ்ந்த பாரத இராமாயண நிகழ்ச்சிகட்கு முன்னும் பின்னும் தோன்றிய பாடல்களும், சிலம்பு பாடிய இளங்கோவடிகளும் மணிமேகலை பாடிய சாத்தனாரும் தோன்றுவதற்கு முன்னும் பின்னும் தோன்றிய பாடல்களும் இந் நூலிற் தொகுக்கப் பெற்றுள்ளன. சுருங்கச் சொல்லுமிடத்து மிகப் பழைய நூல்கள் எல்லாவற்றிற்கும் பழையதெனக் கருதப்படும் தொல்காப்பியத்திற்கு முன்னே தோன்றிய செய்யுட்களும் பின் தோன்றிய செய்யுட்களும் தன்னகத்தேகொண்டு தமிழ் நாகரிகத்தின் தொன்மை உணர்த்தும் பெரு வரலாற்று நூலாகத்திகழ்வது இப் புறநானூறு என்பது மிகையாகாது

வாழ்ந்து சிறந்த தமிழகத்தின் வரலாற்றை எடுத்துரைக்கும் பெருமையினை யுடையது இந்நூல். பண்டைத் தமிழகத்தை ஆண்ட பதினைந்து பாண்டிய மன்னர்களையும் பதினெட்டு சோழ வேந்தர்களையும் பதினெட்டு சேர அரசர்களையும் சிறப்பித்துக் கூறுகிறது. அறநெறி தவறாத அவர்கள் ஆட்சித்திறத்தையும், சிறிதும் வழுவாத செங்கோல் சிறப்பையும் படைநலத்தையும் கொடைவளத்தையும் பாராட்டியுரைக்கிறது. இன்னும் சிற்றரசர் பிறரின் மறச்செயல்களையும் வெற்றிப் பெருமிதத்தினையும் விளக்கிப் பேசுகிறது. பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய், நள்ளி போன்ற யெழுதமிழெழுவள்ளல்களின் கொடையுள்ளத்தையும், குமணன் போன்ற பிற்கால வேந்தர்களின் கொடை நலத்தையும் நிலையான ஓவியங்களாகத் தீட்டித் தருகிறது.

செந்தமிழ் வளர்த்த செந்நாப்புலவர்கள் காதலைப் பற்றிப் பேசும்பொழுது வரலாற்று உண்மைகளைக் கூறிப் போந்தனர். அகநானூற்றில் ஒரு காட்சி-தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் தோழி ஆறுதல்மொழி பகர்கிறாள். ''கி. மு. நான்காம் நூற்றாண்டில் வடபுலத்தை ஆண்ட பேரரசன் தனநந்தன் என்பான் தன்னாட்டில் மிஞ்சிய பொருள்களைப் பகைவர்களுக்கு அஞ்சி கங்கைப்பேரியாற்றின் கீழ்ச் சுரங்கமமைத்துப் புதைத்துள்ளான். அந்தப் பெருஞ் செல்வத்தைக் கொண்டு வருவதற்காக உன் தலைவன் சென்றிருந்தாலும் விரைவில் வந்து விடுவான்; ஆறுதல் பெறுக'' எனத் தோழி தேற்றுவதாக, ஒரு பாடல்

உள்ளது. இத்தகைய வரலாற்று மெய்ம்மையினை உள்ளடக்கிப் பாடியவர் மாபெரும் புலவர் மாமூலர். என்னே அவரின் பரந்த வரலாற்றறிவு! அவர் பாநயம் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது.

தமிழிலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டுதாம் தமிழக வரலாற்றினை எழுதுதல் வேண்டும் என்ற கருத்தினை ஆராய்ச்சிப் பேரறிஞர் அப்பாதுரையார் "தமிழக வரலாறு" என்ற நூலில் வலியுறுத்துகின்றார். இன்று நாகரிகங்களின் தொட்டில் (Craddle of civilizatians) என்று பாராட்டப்படு கின்ற புகழ்மிக்க கிரேக்கர்களின் பண்டை வரலாறு, ஓமர் (Homer) என்ற பாவியப் புலவன் எழுதிய இலியட்டு (Iliad) ஓடிசி (Odyssey) ஆகிய பாவியங்களை நடுவாக வைத்துப் புனை யப்பட்டது என்புதை வரலாற்றுப் பேராசிரியர் யாவரும் அறிந் திருப்பர். ஓமரின் பாவியங்களால் ஊக்குவிக்கப்பட்ட சிலைமாண் (Schliem-nn) என்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளரின் அரிய முயற்சியாலும், அயரா உழைப்பினாலும் 'டிராய்(Troy)மைசீனே (Mycenac) கிரீட் (Crete) போன்ற மறைந்த மாநகரங்கள் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டன. இலக்கியத்தால் ஓர் இருண்ட வரலாற்றை ஒளிபெறச் செய்யமுடியும் என்பதற்கு ஓமரின் மறமிகு காந்தைகள் எடுத்துகாட்டாய் விளங்குகின்றன. கிரேக் கர்களின் வரலாற்றினை அறிய வேண்டுமென்றால் ஓமரின் பேரிலக்கியத்தை நாடு, "Go to Homer" என்ற வழக்கு இன் றும் மேலை நாட்டு நல்லறிஞர்களிடம் நிலவி நிற்கின்றது. மௌரியர்களின் வரலாறும் விசாகதத்தனின் முத்தரா ராட்சதம் என்ற பெருநாடக நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டது என்பதை உணருங்கால் இலங்கியங்கள் வரலாறுகப் பயன்படுகின்றன என்பது தெள்ளிதில் புலனும். பழமைக்கும் பெருமைக்கும் உரிய நாகரிகங்களில் இன்றும் நன் முறையில் தெளிவாக எழுதப்படாத வரலாறு ஒன்றுண்டென்றால் அது சிறப்பிழந்து, சீரழிந்து நிற்கும் தமிழ் மக்களுடையதே. எண் ணற்ற பேரிலக்கியங்களை தன்னகத்தே பெற்ற தமிழுக்கும், அதைப் பேசும் மக்களுக்குமா இவ்விழிந்த நிலை? இங்கு ஒரு 'ட்ராயும் (Troy) மைசீனே (Mycenae) வும் வெளிக்கொணரப் படவேண்டுமானால் இன்பத் தமிழ் மொழியின் இலக்கியங்கள் வரலாற்று அறிஞர்களுக்கும் ஆராய்ச்சி வல்லுநர்களுக்கும் இருளை அகற்றும் ஒளிவிளக்காகப் பயன்படல் வேண்டும். *

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

இந்தி எதிர்ப்பு:

ஈட்டி முனையினை நீட்டித் திணிப்பினும்
இந்தி வெறி நாயை யோட்டுவோம்! — யாம்
இன்றே தமிழரைக் கூட்டுவோம்! — நம்
நாட்டில் அடல்மொழிக் கேட்டை யடக்கியே
நல்ல திறமையைக் காட்டுவோம்! — சீர்
நல்கும் வரலாறு தீட்டுவோம்!

நெஞ்சில் சுடினும் அஞ்சா மறவர
நேர்மைத் திருப்பணி யாற்றுவோம்! — களம்
நின்று வெறியினை மாற்றுவோம்! — யாம்
துஞ்சும் வரையிலும் கொஞ்சு தமிழ்மொழித்
தூய ஒளிச்சுடர் ஏற்றுவோம்! — அதில்
தோய்ந்து பெரும்புகழ் போற்றுவோம்!

பொங்கு கடலென மங்கு வெறியரின்
போக்காம் புரட்டினைத் தள்ளுவோம்! — யாம
பொன்னுந் தமிழ்ப்பணி கொள்ளுவோம்! — இந்திக்
கங்குல் கடந்திடப் பண்டை தமிழ்மொழிக்
கண்ணை வளர்த்திடத் துள்ளுவோம்! — உயிர்
காத்துப் புகழினை யள்ளுவோம்!

முன்னைப் பிறந்தநம் அன்னைத் தமிழ்மகள்
மூத்த புகழினைப் பாடுவோம்! — இந்தி
மூட வெறியினைச் சாடுவோம்! — யாம்
இன்னே உரிமையை நன்னர்ச் சுவைத்திட
இன்றே எழுச்சியை நாடுவோம்! — உரிமை
இன்ப மதுகுடித் தாடுவோம்!

கோலால் உடம்பினைச் சாலக் கிழிப்பினும்
கொள்கை வலிமையைத் தேக்குவோம்! — பொல்லார்
குற்ற வெறிதனைத் தாக்குவோம்! — இனி
மேலும் தமிழ்மொழி ஞாலப் புகழ்பெற
மேவு நலம்பல ஆக்குவோம்! — அம்
மேன்மைக் கிளைஞரை ஊக்குவோம்!

தாக்கு கருவிகள் ஆக்கி வரினும்எம்
    தாய்மைத் திருத்தொண்டு பண்ணுவோம்! — இந்தித்
    தாழ்வை யகற்றிட முன்னுவோம்! — வெறிப்
போக்கர் கொடுஞ்செயல் நீக்கி வளம்பெறப்
    பொற்பு வினைநலம் நண்ணுவோம்! — யாம்
    பொய்யில் புகழ்பெற எண்ணுவோம்!

காரை — இறையடியான்.

அன்றாண்ட வெள்ளையர்க்கே அடிமை ஆனோம்;
    அவராட்சி நீக்கிவிட்டோம்; ஆனால் இந்தி
கொன்றுண்ண நமையடிமை ஆக்கி, வாழக்
    கொடுக்கின்றார் பணவுதவி, சூழ்ச்சி யாலே!
நின்றாள எண்ணுகின்ற இந்தி ஆட்சி
    நீட்டுகின்ற சாவோலை இதுவே ஆகும்!
பன்றியினை உறவாக ஏற்றுக் கொண்டால்
    பால்பழங்கள் உண்பதற்கா வழியைக் காட்டும்?

தாய்இடத்தில் வேறொருத்திக் குரிமை உண்டோ
    தமிழகத்தில் இந்திக்குச் சலுகை தந்தார்!
நோய்பரப்பும் திட்டம்போல் வேற்றுப் பண்பை
    நுழைக்கின்ற கொடுமையெலாம் எண்ணிப் பாரீர்!
ஓயாமல் சொல்கின்றோம்; இந்தி வந்தால்
    ஒருமொழியும் வாழாது! தொழும்பர் ஆவோம்!
தூயமொழி அழிந்ததன்பின் வாழ்வும் உண்டோ?
    தொல்லைதரும் இந்தியினைப் பொறுத்தல் தீதே!

கல்லூரி வகுப்பெல்லாம் இந்தி வந்தால்
    கவின்தமிழ்தான் என்னாகும்? கற்றோர் மற்றோர்
சொல்லாத வழியெல்லாம் சொல்லிப் பார்த்தோம்;
    சூடற்ற சொரணையற்ற வடவர் நம்மைக்
கல்லாக மதிக்கின்றார்! இந்தி தன்னைக்
    கடுமையொடும் நுழைக்கின்றார்! இங்கே உள்ளார்
எல்லாரும் கொதித்தெழுந்தால் திமிர் பிடித்த
    எத்தருக்குத் தெளிவுவரும் எழுக நாடே!

உளுந்தூர்ப்பேட்டை —சுரா.

ஊமை இந்திக் குயர்வோ? தென்மொழி
ஒதுக்கிடப் படுவதுவோ? — நாம்
ஆமை களல்ல அரிமாக் குழாமென
ஆர்த்தெழ வேண்டுமடா!

பைந்தமிழ்க் காவில் இந்தியாம் செந்தீ
படர விடுவதுவோ? — தமிழ்
நைந்திடிலோ உயர் மானம்நம் சொத்தெனில்
நாட்ட நீட்டலுமேன்?

மல்லிகை தள்ளி மணமில் எருக்கினை
மாட்டுவரார் குழலில்? — நம்
கொல்லையின் மல்லிகை குளிர்தமிழ்! இந்தி
கொள்ளத் தகா எருக்கே!

— இரா. இளவரசு எம். ஏ.

ஆழிக் கரையில் அருந்தமிழ்ப் பாடி அறம்வடித்தே
வாழி வளம்பெற வாகை புனைந்து வளர்ந்தவனே!
ஊழிப் புயலாய் உறுமும் அரியாய் உயிர்த்தெழுவாய்!
பூழி பறக்கப் புகையும் பறக்கப் புலியெனவே!

ஊழிசை யாஞ்சங்கை ஊதடா! உன்றன் உளநெருப்பில்
ஏழிசை யாந்தமிழ் இன்னொளி எங்ஙனும் ஏறிநின்று
பாழிசை யாமிந்தி பாயும் இடமெலாம் பட்டெரிக்கும்;
யாழிசை யாந்தமி ழார்ந்த நெருப்பு முன் யாருளரே?

கல்லுங் கனிந்து கலைசொல்லும் நாட்டின் கவின்மொழியைக்
கொல்லும் புலிவந்து கூட்டுற வைக்கேட்டுக் கொள்ளுதடா;
நெல்லும் பதரும் நிகரோ? நினைவில் நிறுத்திடுவாய்
ஒல்லும் புகழில் உனக்கென ஓரிடம் உள்ளதிங்கே!

— காரை - கோ. பாரதி.

நமதே மொழி! நமதே திரு! நமதே தமிழ்நாடு!
இமைதாழினும் வடவர்மொழி எமைவந் துயிர்வாங்கும்
ஒன்றேபடு! சென்றேஅடு; செருநர்அவர் செயலில்.
நன்றேநினை நலமேவினை இன்னேஒழி அவரை!
பொன்றுப் புகழ் தமிழ் நம்மொழி வன்மையுறு மிகவே
வளமார்நிலம் தமிழ்மாநில் வாழ்வேதரு நமக்கே
குன்றும்உயர் நின்தோள் மிக வலிமை யுடைத்தன்றே
என்னும் இனும்? பேச்சைவிடு செயலால்முடி தமிழா!

வெ. கண்ணன், சென்னை - 5

அள்ளுந் தமிழாம் அருமை மொழிகாக்க
துள்ளும் உணர்வால் துடித்தெழுவாய் — வள்ளுவனைக்
கண்டுந் தரமறியாக் காதலோ? இந்திதனைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

— கலைச்செல்வன், பொறையாறு.

வண்ணமிகு வண்டமிழ்தான் யானை யென்றால்,
வடவர்மொழி இந்திசிறு பூனை யாகும்;
கண்ணனைய செந்தமிழ்தான் மானே யென்றால்,
கடுமொழிதான் இந்தி குறு நரியே யாகும்;

பண்பாடும் பைந்தமிழ்தான் ஆவே யென்றால்
பழிமொழியாம் இந்தியொரு பன்றி யாகும்;
தண்டமிழைக் காப்பாற்ற இந்தி வென்று
தண்டரையில் தலைகிமிர்ந்து வாழ்வாய் நன்றே!

— கைம்மலை, பொறையாறு.

தமிழுணர்வு:

எனையீன்ற தாயகமே! என்னைக் காக்கும்
ஏற்றமிகு தண்டமிழே! பண்டை நாளில்
உனைமும்மா முடிமன்னர் உவந்து போற்றி
உயர்விருந்த பெட்டகமே! பனிம லைமேல்
புனைந்திட்ட தமிழ்க் கொடியே! வையம் உய்ய
பூத்தநறும் பொற்கொடியே! உயிரே! வாழ்வே!
உனைக்காக்க என்னுயிர்போம் நிலைவந் தாலும்
உளமகிழ்வேன் என்னுயிருன் அடிக்கீழ் வைப்பேன்

— புலவர். துரை—பிச்சை கண்ணமங்கலம்.

வில்லெடுத்துப் போர்புரிந்த வெற்றித் தமிழினத்தார்
சொல்லெடுத்துப் போர்புரியச் சோர்வாரோ — நில்லாது
கல்லெடுத்துத் தாக்கிடினும் கண்போல் தமிழ்காக்க
எல்லாரும் வாரீர் இனிது.

புதுவை நரசிங்கன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

"மகிழ்தரும் 'தமிழாம்' என்ற
மணிமொழி கேட்ட போழ்தே
நெகிழ்தரும் உணர்ச்சிச் சொற்கள்
நிலைமிகும் உயர்ந்த உள்ளம்!
முகிழ்தரும் முதிர்ந்த பண்பு
முயற்சியும் கிடைக்கும் என்றால்
புகழ்தரும் தமிழை யார்தாம்
பொலிவுடன் கல்லா தாரே?"

வீ. கலைமாறன், திருப்பனந்தாள்.

மொழிப்பகை கொண்டெம் மொழியினைத் தாக்கும் முடிவறியார்
விழிப்புகை கக்கி வெருண்டெழுந் தோடி விலைக்கயலாய்
அழுக்கிடை மாண்டே அனலிடை நீராய் உருக்கிடவே
விழுப்படை சேர்ப்பாய்! வியன்முர சார்ப்பாய்! வினைத்தமிழா!

கோ. பொன்வேந்தன், சென்னை 1.

கற்றவர்கள் போற்றிவந்த நற்றமிழே! தாயே!
கற்றறிந்தார் தம்முடனே கயவரையும் பெற்றாய்!
பெற்றெடுத்த அன்னையையும் பேணிவளர்க் காது,
பித்தரென மதிகெட்டு மடமையராய் உன்னை

ஏற்றையுமே தள்ளிவைத்து மற்றவரின் சொல்லை
ஏற்றியுமே போற்றியுமே அழிகின்றார் உன்னோர்!
பெற்றெடுத்த பிள்ளைகளும் குற்றஞ்செய் தாலும்
பைந்தமிழே என்னமிழ்தே பொறுத்தருள்க நீயே!

— க. மணிமாறன், தேவன்குடி.

முத்தமிழ், முப்பழம், முக்கொடி இங்கே!
முன்னையர் நாடென முழங்கிடு சங்கே!
எத்தனை எத்தனை ஏற்றங்கள் இங்கே?
இத் தமி ழகம்போல், நிலம்வேறு, எங்கே?

இயலிசை நாடகம் எந்தமிழ் மொழியே!
எந்தமிழ் மொழியெனல் எமக்கிரு விழியே!
கயல்புலி வில்லெனல் கனித்தமிழ்க் கொடியே!
காளையர்க் கெக்கொடி அன்னையர் மடியே!

— வஞ்சிக் கோவன், சென்னை 14.

காதல்:

'செங்கதிரோன் மறைந்தஇருள் மாலைப் போழ்தில்
தென்னைமரத் தோப்பினிலே காத்திருங்கள்;
உங்கள்தமை நேர்கண்டு பேசு தற்கே
உயர்காதற் சுமைதூக்கி வருவேன்' என்றாள்;
பொங்குநிலா முகத்தாளைத் தழுவும் இன்பப்
பூரிப்பில் தோப்பினிலே தனித்தி ருந்தேன்;
அங்கவளும் குடந்தூக்கி வந்தாள் சென்றாள்;;
அவளுக்கோர் விழிவீச்சும் காணேன், ஏனோ?

நண்பரொடு, சுற்றமொடு கலந்து பேசி
நகையாடி யிருக்கும்போழ்(து) என்னை நீண்ட
கண்பார்வைத் தூண்டிலினால் தொட்டிழுத்தாள்;
கதிரொளிபோல் இளநகையில் மயக்கம் சேர்த்தாள்
தண்படுகை மணற்றிடலில் தனித்த மர்ந்து.
தலைவியினை எதிர்நோக்கி நிலைகின் றேன்யான்;
பண்புடையாள் போற்பாவை வந்தாள்; சென்றாள்;
பறைசாற்றும் புன்னகையைக் காணேன், ஏனோ?

பள்ளிக்குப் போய்வந்த பருவ நாளில்
பாவையென்னை நீராகச் சூழ்ந்தி ருந்தாள்;
துள்ளிவிளை யாடிவரும் புள்ளி மான்போல்
தோகையவள் கைகளிலே துவண்டாள்; இன்றோ
'அள்ளியெடுத் தணைத்தின்பம் காண்போம்' என்ற
ஆவலுடன் குளத்தருகே நின்றி ருந்தேன்;
புள்ளிமயில் அடக்கமுடன் வந்தாள்; சென்றாள்;
புலம்பியெழும் வளையொலியும் கேளேன், ஏனோ?

— திருமார்பன், விருதுநகர்.

வள்ளுவர் வகுத்த மனையறம்

புலவர். வித்துவான்: **ஒண். கி சந்திரசேகரன்,** எம்.ஏ;பி.டி;பி.ஓ.எல்

1. இல்லொழுக்கம்.

வடமொழி வழங்கு நிலத்தார்க்கு நூல் செய்தாரெல்லாரும் மாணவ நிலை முதலாகிய நால்வகை நிலைகளை வகுத்தோதினர். வள்ளுவனார் காலத்தொடும் நிலத்தொடும் மக்கள்தம் வாழ்விய லொடும் பொருந்த நூல்செய்யப் புகுந்தாராதலின், இல்லறம் துறவறம் என்னும் இருவகை நிலைகளையே யொன்றற் கொன்று இயைபுறுத்துக் கிடக்குமாறு வகுத்துக்கொண்டார். காட்டுரை யும் வாழ்வினைப் புறத்தாருகக் காட்டி, இல்வாழியல்பினியற்கை நிலையைச் சிறக்க நிறீஇனர். இவ்வில்லுறை வாழ்வில் ஆணும் பெண்ணும் ஒத்த கேண்மையும் உரிமையும் உடையவராய் விளங்க வேண்டியதன் இன்றியமையாமையை நன்கு வலி யுறுத்துகிறார்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே"

என்று தொல்காப்பியனார் நாட்டிய நெறியொடு நேர்பட நிறீஇ இல்வாழ்க்கைக்குத் துணைமையுந் தொடர்புங்காட்டி, அன்புநெறி நெகிழாமல் அறம்புரி இயற்கையையும் விளக்கினார்:

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது" (5 : 6)

"ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை" (கலி: 17)

மனையறங் காக்கும் மாணிழையார்க்குப் பல பொறுப்புகளை யும் பண்புகளையும் உரிமைகளையும் இவரியம்பியவாறு வேறெவ் வாசிரியரும் உணர்த்திலர். மனைத்தக்க மாண்புடையளாதல், தற்கொண்டான் வளத்தக்காளாதல் கற்பென்னும் திண்மையைக் கடைப்பிடித்தொழுகல், தகை சான்ற சொற்காத்து நிற்றல் முத லாகிய செயற்றிறங்களில் திறம்பாமல் நிற்கும் பெற்றியுடைய வளே வாழ்க்கைத் துணைவியாய் நலமுறுத்துபவளாவள். இவ் வியல்பில் நெகிழாது நின்றொழுகு நீர்மையாட்கு இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்க்கு உளதாகும் நிறைமொழி வாய்க்கும். அத் தகவினுள் பெய்யென மழை பெய்யும் என்று அவட்குளதாம் அருளாணையை யுணர்த்தினர்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை" (6 : 5)

இதனுன், வள்ளுவர் கண்ட வாய்மொழிப் பெண்ணினீர்மை நிறைமொழி மாந்தர்தம் இயல்பை நிகர்ப்பதாகும் அன்றே!

உழைத்து ஈட்டிய உறு பொருளுக்கு உரிமை கோடல் முதலாகிய உலகியல் பற்றே நோக்கி மக்கட் பேற்றை விழைவார்தம் நினைவை நெறிப்படுத்தும் முறையில் பலவுண்மைகளை யெடுத்துரைக்கின்றார். இல்வாழ் நெறியினர் தாமிறுக்கத் தகும் கடமைகளுள் அறிவு நூல்களை யிடையறாது பயின்று, கற்றவற்றை யோம்பி, யந்நூல்வழியே யொழுகிச் சான்றோராகி, யுலகியலை நன்னெறிக்கண் நிறுத்துதலே தலையாய கடனாகும். இந்நெறி யென்றும் இடையறாது தொடர்ச்சியுற்று விளங்குதல் கருதியே மக்கட் பேற்றினை விழைதல் விழுமியதாகும். ''தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்'', ''இவன்றந்தை யென்னோற்றான் கொல்'' என்னுந் தொடர்களான், தாமீன்ற மக்களை யறிவுடையவராக்கிப் பழி பிறங்காப் பண்புடையவரா யொழுக்கி மாநிலத்து மன்னுயிர்க்கெலாம் இனியராய் விளக்கிச் சான்றோரவைக்கண் பெருஞ் சுட்டுடையனாக்கி நிறுத்தற்கண் பெற்றோர்களுக்குண்டாம் பொறுப்புணர்ச்சிகளை நன்கு புலப்படுத்தினார்:

''தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது'' (7 : 8)

மாண்ட மனைவியும் மக்களும் ஒக்கலும் ஒன்றி நின்ற வழியும், அன்பில் வழி யில்லறம் நன்கு நடவாதாம். இடம் பொருளேவலாகிய வுறுப்புகளைப் பெற்று வைத்தும் அவற்றால் பெறத்தகும் நன்மைகளை யன்பகத்தில்லாதான் இழந்து விடுவன். அதனோடு, எல்லாவுயிர்களுக்கும் இன்னருள் செய்யும் அறக் கடவுளும் அவனை முனிந்து ஒறுக்காநிற்கும்; அன்பில்லாதவன் பிறவாற்றான் எய்தற்கரிய சிறப்புக்களை யெல்லாம் பெறுவிக்கும் நண்பென்னும் நாடாச் சிறப்பையும் நீக்கும் என்பனவாக, அன்புடைமை, அன்பின்மையின் விளைவுகளைப் பல்லாற்றானும் எடுத்துக்காட்டி, யன்பு செய்வதற்கென்றே யுயிர்க் குடம்போடு தொடர்ச்சி யுண்டாயிற்றென்னும் உண்மையையும் உணர்த்தினார்.

''அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்(கு)
என்போ டியைந்த தொடர்பு''

எனவே, வள்ளுவனார் காட்டிய இல்லறம் அன்பு நெறியாகிய அடிப்படையின் மேல் நாட்டப்பட்டதொரு மாபெரும் அறக் கூடமென்பது நன்கு புலனாம்.

இல்வாழ்வான் பொருளைப் போற்றி வாழக்கடவன். அப்பொருள்தான் போற்றினும் பொத்துப்படும் நிலையது. ஆகவே, அது நன்கு கிளைத்து நிற்குமாறு வேண்டின் அதனை நல்லாற்றில் உய்க்க வேண்டும். அந் நல்லாற்றுள் விருந்தோம்புதலாகிய வேள்வி முதற்கண் கொள்ளத்தக்கதாகும். அதனைச் செய்வானது வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று. அவ் வேள்வி

யின் பயனாய் அவனது வினை நிலனும் வித்திடல் வேண்டாமலே விளையும். மேலும், அருந்தவ நெறியில் நனியுழத்தல் வேண்டாமலே யும்பரோடுடனுறையும் இன்பப் பேற்றினை யீண்டு ஐம்புலன்களார இன்புற்றிருக்கும் நிலைமையானே யெளிதில் எய்தும் பெருமையுடையவனாவன். பேதைமையால் விருந்தோம்புதலை யிகழின் பொருள் நின்ற வழியும் பயனில்லையாகும்.

இனிப் பரிந்தோம்பிய பொருளான் பெறத்தகு நன்மைகள் யாவும் பிழைப்பற வுண்டாக வேண்டின், அல்லவை தேய்ந்து அறம் பெருகு நெறியறிந்து ஒழுகுதல் வேண்டுமன்றே! அகனமர்ந்து ஈதலின், முகமலர்ந்து இன்சொலனாகப் பெறல் நன்றாகு மாதலானும், யார்மாட்டும் இன்புறாஉம் இன்சொலவர்க்குத் துன்புறாஉந் துவ்வாமையில்லாகுமாதலானும், விருந்தோம்புதல் முதலாகிய நெறிகளில் பொருளைப் பாத்தூண் மருவுவார்க்குப் பண்பின் தலைப்பிரியாச் சொல்லாடல் இன்றியமையாததாகும். இனியகூறி விருந்தினரை நீங்காமல் பிணித்துக்கொண்டு ஓம்புதல் வல்லார்க்கு இருமை நலன்களும் ஓவற வொருங் கெய்தும் என்ப.

"சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையும்
இம்மையு மின்பந் தரும்"

உ. காத்தோம்பற் குரியன (அதி. 11-14):

இவ்வாறு வாழுநாளில் துன்பங்கள் பலவுளவாமன்றே! அவையுளவாகிய காலத்துத் துப்பாகி நின்றார்பால் செய்ந் நன்றியறிதலுடைமை யின்றியமையாததாகும். செய்ந்நன்றி மறத்தல் உய்தியில் குற்றமாம். அவ்வாறே யொருகால் நன்றி செய்தார் பின்னர் கொன்றன்ன வின்னா செயினும் அவர் செய்த கொடுமைகளையெல்லாம் அவை நிகழ்ந்தவன்றே மறந்து அவர் செய்தனவற்றுள் நன்றாகிய தொன்றினையே யென்றும் மறவாது மனத்தகத்தே யிருத்தி அவர் தமக்குச் செய்த பொருளுதவி தினையளவிற்றாகச் சிறிதாயினும் அதனை யவ்வளவிற்றாகக் கருதாது அது நிகழ்ந்த காலம், நிலை, வினை பயன் ஆகியவற்றை நோக்கிப் பனையளவிற்றாகக் கொள்ளல் வேண்டும்:

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்"

இல்வாழ் நிலையினர் அறங்கூறவையத்திருத்தற்கும், வாணிபம் நடாத்தற்கும் பிற தொழின்மேற் சேறற்கு முரியாரன்றே! அவ்வந் நிலைமைக் கணிருந்து செய்ந் நன்றி மறவா தொழுகும் நீர்மையராயினும், பகைவர் நண்பர் அயலாரென் றெண்ணி நடுவு நிலைமை தபுதல் கூடாதாம். தன்னெஞ்சம் நடுவொரீஇ யல்லவற்றைச் செய்ய நினையாமல் நிறுத்திச், சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் கோடாமனின்று, சொற் கோட்

டம் நிகழாமற் காத்து, நடுவிகந்தாம் ஆக்கத்தை யொழித்து அறநிலையை வழுவாமற் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அவ்வாறு தங்கினவருக்குப் பழவினை வயத்தான் ஒருகால் வறுமை யுண்டாயினும் அஃது ஒல்லையின் நீங்குமாதலினதனைச் சான்றோர்கள் கெடுவாக வையாரென்று அறிவுறுத்தினர்:

"கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு"

பகைவர் நோதக்கன வுரைத்தலும், நண்பராயினர் பயிற்சி மிகுதியான் நக்குத் தீயன கூறுதலும், அயலார் பகைமையும் பயிற்சியும் பற்றிலராயினும் தமதியல்பானே யெள்ளுதலுமாம். இவைபற்றி யுண்டாம் கதம் முதலாயினவற்றைக் காத்து, கல்வி யுடையவனாய் அடங்குதலையாற்றி, யொன்றானுந் தீச்சொற் பயனுண்டாகாம லோர்ந்து, சொல்லிழுக்குப்பட்டுச் சோகாக்கும் நிலையுண்டாகாமல் நினைந்து, நல்லோர்க்கு அஞ்சித் தஞ்செறிவினைக்காத்து, இல்வாழ்க்கையாகிய தனது நன்னிலையில் திரியாது தோற்றஞ் சான்று நிற்றல் வேண்டும்.

"நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

இவ்வாறு மெய் மொழி மனங்களான் தீநெறிக்கண் செல்லாது அடங்கி நிற்போர்க்கே முற்கூறிய நடுவு நிலைமை கைகூடுவதாகும். எனவே, ஏதிலார் குற்றம்போல் தங்குற்றமுங் காணும் நடுவு நிலைமை யுடையார்க்கே இவ்வடக்கம் அமையும். இவ்வடக்கம் தன்னை யுடையானை "அமரருளுய்க்கு" மென்றதனால் உண்டாம் மறுமைப் பயனை யுணர்த்தினர்.

இத்துணையும் இல்லற நிலைக்கேற்ற வறங்களைப் பொதுப்பட மொழிந்தார். இனி, இந்நிலைகள்தாம் அந்தணர், அரசர் முதலாய குடிப் பிறப்பினருக்கு ஏற்ப வேறுபடலுமுண்டாதலின், இல்வாழ்வார்தாம் மேற்கூறிய வறங்களை கைக்கொள்ளுவதோடு தத்தங் குடிக்கிழுக்குண்டாம் நிலையுண்டாகாமலும் ஒழுகற்பாலராவர். இவ்வாறொழுககில்லார், உயர்விலராய், பிறப்பானெய்திய விழுப்பமும் குன்றித் துன்புறுவர். ஆதலின், உரவோராயினும் இழுக்கத்தினேதம் படுபாக்கறிந்து தமதொழுக்கத் தினெல்காராகுப. எனவே, உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றானொழுகுதலின் இன்றியமையாமையைச் சுட்டி

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்"

என்றறிவுறுத்தினர் இதனான் அறநூல் நெறியோடு உலகியல் நெறியையுமொப்பநிறுத்தி வாழ்வியல் நெறியைத் தெரித்தோதும் வள்ளுவனரது உலகவாம் பேரறிவுத்திறம் தனிச் சிறப்புடைத்தாக விளங்குகின்றதன்றே!

[தொடரும்.]

"வள்ளுவரின் நகைச்சுவை"

ந. மகாலிங்கம்.

— ● —

குறைகளை மறைமுகமாகக் கூறி நகைச்சுவை யூட்டிச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைக் கலையை, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வையம் உய்ய வந்த வள்ளுவர், குறைந்த அளவில் ஆனால் குறையாத சுவையில் படைத்துப் போந்துள்ளார். ஏழு சீர்களில் எழுச்சி ஏற்படுத்திய வள்ளுவர், "எனக்குக் குமுகாயத்தைக் கண்டு சிரிக்கவும் தெரியும்", என் பதைச் சான்றுடன் நிறுவிச் சென்றுள்ளார். நகைச்சுவை குறைந்த அளவில் இருந்தால்தான் அதன் மதிப்பு குறையா திருக்கும். குறளிலும் குறைந்த அளவில் நகைச்சுவை உள் ளது நோக்கத்தக்கது. குறளில் அப் பகுதிகளைப் படிக்கும் பொழுது வள்ளுவரின் சான்றாண்மை செறிந்த சிரிப்பொலி நம் செவிகளினூடே நுழைந்து உடலை ஊடுருவிச் சென்று உளத் தினையும் உவகையில் திளைத்திடச்செய்யும். அந்தச் சிரிப்பொலி அன்றும் இன்றும் என்றும் திருந்தா இக் குமுகாயத்தைக் கண்டு சிரிக்குந் தன்மையையுடையது. அத்தச் சிரிப்பொலியிற் சில வற்றை ஈண்டு நாமும் செவியாரக் கேட்போம்.

நல்லார் பாங்கின் நட்பினர் இருவர் தம்முட் பிரிந்து செல்லுங்காலை சொல்லொணா உளவருத்த முறுவதையும், தீயார் பாங்கின் நட்பினர் இருவர் தம்முட் பிரிந்து செல்லுங்காலை சொல்லொணா உள மகிழ்வுறுவதையும் நாம் அறிவோம். இவ் விரண்டு தன்மைகளையும் நோக்கினார் வள்ளுவர். இணைந்தும் பிணைந்துமே வாழ்ந்த இரு அன்றிற்புட்கள் பிரிய விழைவின்றி ஊழ்வினையால் மன வருத்தத்துடன் பிரிந்து கொண்டிருப்பன போலும், இணைந்தும் பிணைந்தும் வாழ முயன்று தோற்ற இரு கொடிய நச்சரவங்கள் பிரிவையே பெரிதும் விழைந்து பெரு மகிழ்வுடன் பிரிந்து செல்வன போலும் உள்ள இரண்டு தன்மை களையும் கண்டார் வள்ளுவர்.

இரண்டினில் ஒன்றை நோக்கி, "பெரிதினிது" என்றார். அறிவுச் சுடர் கொண்டு இடர்களைய வந்த வள்ளுவரின் திரு வாயால் பெரிதினிது என்று கூறப்படுவது சான்றோரின் நட்பா கத்தான் இருக்கவேண்டும் என நாம் எண்ணுவோம். ஆனால் அவரோ, "பெரிதினிது பேதையார் கேண்மை", என்று கூறி நகைத்தார். அறிவிலிகளின் நட்பைப் போய்ப் பெரிதினிது என்கிறாரே என நாம் வியந்து கொண்டிருக்கையில் அவர், "அது 'பிரிவின்கண் பீழை தருவதொன் றில்" என்று கூறி

மேலும் நகைத்தார். வள்ளுவர் அறிவிலாரின் நட்பைப் புகழ் வதுபோல் நடித்தாரே யன்றிப் புகழவில்லை என்பது இப்பொழுது தான் நமக்கு நன்கு விளங்குகின்றது.

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்"

என்பதுதான் வள்ளுவரின் நகைச்சுவைக் கூற்று. 'பின் பிரிவு வந்துழி அஃதிருவர்க்குந் தருவதொரு துன்பமில்லையாகலாற் பேதையாயினோர் தம்முட் கொண்ட நட்பு மிகவினிது' என இக் குறட்கு உரை கூறுவர் பரிமேலழகர். பிரிவின்கண் துன்பந் தராத ஒரு நிறை கொண்டுள்ளதே பேதையார் கேண்மை என் கிறார் வள்ளுவர். ஏழு சீர்களிலே அமைந்திருப்பினும் இந் நகைச்சுவைக் கூற்று ஏழாயிரங் கோடிக்கு மேலும் கொடுத்துப் பெற்றுக் கொள்ளத்தக்கதன்றோ! இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே நகைச்சுவை எனில் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற இலக்கணத்தை வகுத்துச் சென்றுள்ள இக்குறளின் நயம் விழைதற்பாலதேயன்றோ!

தாழ்ந்த ஒன்றை உயர்த்திப் புகழ வேண்டுமானால் அதன் நிறையைமட்டும் புகழ்வர். தீயோர் வாழ்வு தாழ்ந்த ஒன்றுதான். இருப்பினும் தீயோர் வாழ்வதால்தானே நல்லோரைப் பிரித்துக் கண்டு புகழ முடிகிறது. ஆகவே தீயோர் வாழ்வு பெரிதினிது எனலாம். அதுபோலவே வள்ளுவர் ஈண்டு பேதையார் கேண்மை தாழ்ந்த ஒன்றாக இருப்பினும் அது பிரிவுறும்பொழுது துன்பம் ஒன்றுமே தராத சிறப்புடையதாகலான், அதைப் பெரி தினிதெனப் பகர்ந்து போந்தார். இப்படித் தாழ்ந்த ஒன்றின் நிறையை மட்டுமே போற்றி அதனை நகைச்சுவைக்கு ஆளாக் குங் கலையில் வள்ளுவரின் திறல் இக் குறளில் மிளிர்கின்றது.

இனி மற்றொரு குறளின் வழி வள்ளுவரின் நகைச் சுவை யினைச் சுவைப்போம்.

"தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்".

என்பதே அக்குறள். 'தேவருங் கயவரும் ஒரு தன்மையார்; அஃதியாதனோனெனின், தேவரைப்போன்று தம்மை நியமிப்பா ரின்றிக் கயவருந்தாம் விரும்புவனவற்றைச் செய்தொழுகலான்' என உரை கூறுவர் பரிமேலழகர். தேவர்கள் வாழ்வதை நாம் கண்களால் கண்டிலம். ஆனால் அவர்கள் நம் கற்பனையில்தான் என்றும் வாழ்ந்து வருகின்றனர். தாம் பணிந்து நடக்கத் தமக்குமேல் யாருமில்லை; தம்மை ஏவுவாரில்லாது தாம் விரும்பு வனவற்றை யாவும் செய்தலே தேவரின் இயல்பாக வள்ளுவர்

தொடர் நாடகம். தொடர்ச்சி 4.

போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்ஞர்டு சா.

தமிழில்: 'வழுதி'.

படை மேலாளன்: (தட்டொட்டியில் நின்று கொண்டு கீழே தெருவை நோக்கிக் கத்துகிருன்) அடே முட்டாள் பயல்களே, சுடுவதை நிறுத்துங்கள்...சொல்வது காதில் விழுகிறதா? சுடுவதை நிறுத்துங்கள்;... நீங்கள் பாழாய்ப் போக!... (ஒரு நொடி கீழே வெறித்து நோக்குகின்ருன். பின்பு, இரெய்ஞுவின் பால் திரும்பி, தன் முந்திய பணிவான குரலில் பேச முயன்று) உங்களுக்குத் தெரியாமல் யாராவது உள்ளே நுழைந்திருக்க முடியுமா?... நீங்கள் உறங்கிக் கொண்டிருந்தபொழுது?

இரெய்ஞு: நான் படுக்கவேயில்லை.

படை மேலாளன்: (பொறுமையிழந்து, அறைக்குள் மீண்டும் நுழைகிருன்.) உங்கள் பக்கத்து வீட்டாருக்கெல்லாம் மூளைக் குழப்பம் போலிருக்கிறது. எங்குப் பார்த்தாலும் தப்பி ஓடுகிற செர்பிய மறவர்களாகவே அவர்கள் கண்ணுக்குப் படுகின்றனர். (பணிவுடன்)... தொல்லை கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும் அம்மா!.. வருகிறேன். வணக்கம் (தலை தாழ்த்துகிருன் இரெய்ஞுவும் தலை தாழ்த்துகின்ருள்–காதரினைப்பார்த்தும் அவ்வாறே செய்கிருன். காதரினும் அவன்பின் தொடர, அறையை விட்டுச் செல்கின்றனர் இருவரும்).

காலத்தில் கருதப்பட்டது போலும். அதுபோலவே கயவர்களும் தம்மைப் பணிப்பாரின்றித் தாம் விழைந்தவாறு ஒழுகி வந்தமையான் அவர்களும் தேவரும் ஒன்று என்ருர் வள்ளுவர்.

தம் விழைவின்படி மற்றவரின் இயல்பை மதிக்காமல் விலக்கெதுவுமின்றி எச்செயலையுஞ் செய்யுந் தன்மையுடையவர் கயவர் என்று வெறும் பொருளை மட்டுங் கூறியிருக்கலாம் வள்ளுவர். ஆனுல் அவரது கலை நெஞ்சம் அதற்கு இடங் கொடுக்கவில்லை. கயவர் நிறைந்த இக் குமுகாயத்தைக் கண்டு சிரிக்க விழைந்த அவர், "ஏ! கயவர்களே! நீங்கள் தேவர்கள் ஆவீர்!" என்று கூறி நகைத்தார். திருக்குறளில் வள்ளுவர் நகைத்த விடங்கள் இவைபோற்பல; அவையாவும் அறிவொளி தரும் நகைச்சுவைகளாம். ○

(இரெய்னு அடைப்பான்களைச் சார்த்திவிட்டுத் திரும்புகின்றாள்... நடந்ததையெல்லாம் வியப்புடன் கவனித்துக் கொண்டு நின்றிருந்த உலூக்காவைப் பார்க்கின்றாள்.)

இரெய்னு: படை மறவர்கள் போகும் வரையில் அம்மாவுடனேயே இரு உலூக்கா, விட்டு நீங்காதே!

(உலூக்கா, இரெய்னுவைத் தலைசாய்த்து நோக்குகின்றாள். பின், இருக்கையைப் பார்க்கின்றாள்... திரைகளைப்பார்க்கின்றாள். ......பிறகு கமுக்கமறிந்தவள் போல் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, துடுக்குடன் நகைத்துக் கொண்டே வெளியேறுகிறாள். இதை விரும்பாத இரெய்னு அவள் பின்னாலேயே சென்று, அவள் முதுகில் அறைவதுபோல் படீரெனக் கதவைச் சாத்துகின்றாள். ஒளிந்திருந்தவன் உடனே வெளிவருகின்றான்; வாளை உறையில் செருகிக்கொண்டு: தனக்கு ஏற்படவிருந்த இடர்ப்பாட்டைப் பற்றிய எண்ணத்தை எளிதாக உதறித் தள்ளி விட்டு, நயமாக இரெய்னுவின் அருகில் வருகிறான்)

அவன்: மயிரிழையில் தப்பினேன்... எனினும் தப்பியது தப்பியதுதானே!... அன்புள்ள பெருமாட்டி! நான் சாகும்வரை உனக்குக் கடமைப்பட்டுள்ளேன்... செர்பியப் படையில் சேராமல் பல்கேரியப் படையில் சேர்ந்திருக்கலாமே என்று நினைக்கின்றேன், உன்னைப் பார்த்த பிறகு. நான் செர்பியன் இல்லை...

இரெய்னு: (மிடுக்குடன்) நீர் ஓர் ஆத்திரியராயிருப்பீர். எங்கள் நாட்டு உரிமையைப் பறிப்பதற்காகச் செர்பியர்களை எங்கள்மேல் ஏவிவிட்டுச் செர்பியப் படைகளுக்குத் தலைமை தாங்கி நடத்துகிறார்களே... இந்த ஆத்திரியர்கள்...! சீ, சீ, அவர்களை நினைத்தாலே வெறுப்பு!

அவன்: ஆத்திரியனா? நானா! இல்லை இல்லை. என்னை வெறுக்க வேண்டா, பெருமாட்டி! நான் சுவிசுக்காரன்...... பிழைப்புக்காகப் பட்டாளத்தில் சேர்ந்திருக்கிறேன்...... நான் சுவித்சர்லாந்திலிருந்து வரும் பொழுது முதலில் எதிர்ப்பட்டது செர்பியப் பட்டாளம்தான்...உடனே அதில் சேர்ந்துவிட்டேன். கொஞ்சம் தாராளமாக நடந்து கொள்.. நீங்கள்தாம் எங்களை முழுக்க முழுக்கத் தோற்கடித்து விட்டீர்களே!

இரெய்னு: நான் தாராளமாக நடந்து கொள்ளவில்லை?

அவன்: ஆகா! எவ்வளவோ பெருந்தன்மையோடும், மதுகையோடும் நடந்து கொண்டாய். ஆனால் எனக்கு வந்த இடர் இன்னும் நீங்கவில்லையே. இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் அடங்கிவிடும். ஆனாலும் இரவு முழுவதும் அங்கங்கே ஆட்கள் வலை போட்டுக் கொண்டுதாம் இருப்பார்கள். ஏதோ, கொஞ்சம் அடங்கிய நேரம் பார்த்து

எப்படியாவது நான் போய்விட வேண்டும். (இனிமையாக) இன்னும் ஓரிரண்டு நிமயங்கள் நான் இங்கே இருப்பதில் உனக்குத் தடையில்லையே.

இரெய்னு: (விருந்துக் கூட்டங்களில் மேற்கொள்ளும் நாகரிகப் பழகு முறையை மேற்கொள்கின்றாள்) அப்படி ஒன்றுமில்லை உட்காரும்......!

அவன்: நன்றி. (கட்டிலில் கால்மாட்டில் உட்காருகிறான்)

இரெய்னு: (ஒயிலாக நடந்துசென்று,இருக்கையில் அமர் கின்றாள் உட்கார்ந்தவள் கைவேட்டெஃகத்தின்மேல் உட் கார்ந்து விடுகின்றாள்... அலறிக்கொண்டு துள்ளிக் குதிக்கின் றாள். அவன் நடு நடுங்கிப்போய், வெருளும் குதிரைபோல அறையின் மறு பகுதியிற் போய்ப் பதுங்கிக் கொள்கின்றாள்)

அவன்: (எரிச்சலுடன்) என்னை ஏன் அப்படி அச்சுறுத்தி விட்டாய்? என்ன அது?

இரெய்னு: உம்முடைய கைவேட்டெஃகம்! அவ்வளவு நேரமும் அந்தப் படை மேலாளன் கண் முன்னுலேயே கிடந் திருக்கின்றது!... நல்ல வேளை தப்பித்தீர்.

அவன்: (ஒன்று மில்லாததற்கு அஞ்சி விட்டதற்காக எரிச்சல் அடைந்து)... ஓ! இவ்வளவு தானு?

இரெய்னு: (அவன் நடவடிக்கைகளால் அவளுக்கு அவன மேலுள்ள மதிப்புக் குறைந்து கொண்டே வருகின்றது... அதற்கேற்ப அவள் கலக்கமும் நீங்கிக் கொண்டே வரு கின்றது... செருக்கோடு அவனை உற்று நோக்குகின்றாள்)... ஐயா! நான் உம்மை அச்சுறுத்தியதற்கு வருந்துகின்றேன். (கைவேட்டெஃகத்தை எடுத்து அவனிடம் கொடுக்கின்றாள் பின்பு, எள்ளல் குரலில்,) என்னிடமிருந்து உம்மைக் காத்துக் கொள்வதற்காக இதை வைத்துக் கொள்ளும்.

அவன்: (அதனை வாங்கிக் கொள்கிறான். அவள் குரலில் இருந்த எள்ளலை உணர்ந்து, சலிப்போடு பல் தெரிய நகைக் கின்றான்) – பயனில்லை பெருமாட்டி! அதில் ஒன்றும் இல்லை. வெற்றுக் குழல்! (அதைப்பார்த்து முகத்தைச் சுளித்து, மதிப்புக் குறைவுடன் அதனைத் தூக்கி உறையில் திணித்துக் கொள் கிறான்.)

இரெய்னு: வேண்டுமானல் அதில் குண்டுகளை நிரப்பிக் கொள்ளும்! தடையில்லை.

அவன்: என்னிடம் குண்டுகள் இல்லை. போர்க்களத்தில் குண்டுகளால் என்ன பயன்? அவற்றுக்குமாருக நான் எப்பொழு

தும் சோக்கட்டிகளையே (Chocolles) வைத்திருப்பதுண்டு. தீர்ந்துபோய் மணிக் கணக்காயிற்று.

இரெய்னு: (ஆண்மையைப் பற்றித் தான் கொண்டிருந்த உயர்ந்த எண்ணங்கள் உடைந்துபோகக் கண்டு அதிர்ந்து) சோக்கட்டி! – பையில் தின்பண்டங்களையா நிரப்பிவைத்துக் கொள்கிறீர்? – பள்ளிப் பையனைப் போல! – அதுவும் போர்க் களத்தில்!

அவன்: (பல்லிளித்துக் கொண்டே) ஆம்... அது வெறுக் கத்தக்கதாக இல்லை! (பசியுடன்) ஆகா இப்பொழுது கொஞ்சம் கிடைத்தால்!

இரெய்னு: இதோ தருகிறேன் (எள்ளல் குறிப்புடன் இழு பேழையருகில் சென்று நொறுவைப் பெட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு வருகின்றாள்) கொஞ்சந்தான் இருக்கிறது... நான் தின்றது போக மீதி... (பெட்டியைக் கொடுக்கின்றாள்)

அவன்: (ஆவலுடன்) கைகொடுத்த கடவுள் நீ! (பெட்டி யிலிருப்பதை ஆவலுடன் அள்ளி அள்ளி விழுங்குகின்றான்) ஆ! எவ்வளவு சுவை! .. (தின்றுவிட்டு இன்னும் உளதா என்று பார்க்கிறான். இல்லை... பெட்டியை விரல்களால் வழித்து நக்கு கின்றான். – அதுவும் முடிந்ததும் வேறு வழியில்லாமல்., கவலை தோய்ந்த நகையுணர்வோடு 'சரி அவ்வளவுதான்' என்று நினைத்துக்கொள்கின்றான். நன்றி யுணர்வோடு இரெய்னுவை நோக்கி,) இளம்பெருமாட்டி! நீ வாழ்க! ஒரு முதிர்ந்த போர் மறவனை அவன் கைவேட்டெஃக உறையையும், குண்டுப் பெட்டியையும் திறந்து பார்த்தே தெரிந்து கொள்ளலாம். கற்றுக் குட்டிப் போர் மறவர்களே வேட்டெஃகமும், குண்டுகளும் வைத்திருப்பார்கள்., முதிர்ந்தவர்களோ, தின்பண்டம் வைத் திருப்பார்கள். சரி மிகவும் நன்றி (பெட்டியைத் திரும்பக் கொடுக்கின்றான். அவள் வெறுப்புடன் அதனைப் பிடுங்கி வீசி எறிகிறாள். தன்மேல்தான் எறிந்துவிடப் போகிறாளோ என்று அஞ்சி முகம் கூசி நடுங்குகிறான்.) ......அவ்வளவு சடக்கென எதையும் செய்யாதே பெருமாட்டி!... நான் உன்னை அச்சுறுத் தினேன் என்பதற்காக நீ என்னைப் பழிவாங்க முயலுவது...... சரியில்லை......

இரெய்னு: (பெருமிதத்துடன்) என்னை அச்சுறுத்தியதாக நினைப்புப்போலும்! அதுதான் இல்லை; நான் பெண்ணயிருந்தா லும் உமக்குரிய நெஞ்சுத் துணிவு எனக்கும் இருக்கிறது என்று நினைக்கிறேன்..... தெரிகிறதா ஐயா?

அவன்: நானும் அப்படித்தான் நினைக்கிறேன். ஆனல் என்னைப்போல மூன்றுநாள் தொடர்ந்து நீ குண்டுவீச்சின் நடுவில் இருந்திருந்தால் தெரிந்திருக்கும். இரண்டு நாட்கள்

வரைக்கும் ஆனுல் கூட எப்படியோ தாங்கிக் கொண்டிருப்பேன். ஆனுல்... தொடர்ந்து மூன்று நாட்கள் எவனுல் தாங்க முடியும்?... ஒரு சுண்டெலிக்குரிய நடுக்கம் எனக்கிருக்கிறது... இப்பொழுது; (அவன் இருக்கையில் அமர்ந்து தலையைக் கைகளால் பிடித்துக் கொள்கிருன்.) இப்பொழுது நான் அழுவதைப் நீ பார்க்க வேண்டுமா?

இரெய்னு: (கலவரமுற்று)...... ஐயையோ, வேண்டா. வேண்டா.

அவன்: அப்படிப் பார்க்க வேண்டுமென்ருல் நீ வேறு ஒன்றும் செய்யவேண்டாம். நான் ஒரு சிறுவன் போலவும் நீ என் செவிலி போலவும் நினைத்துக்கொண்டு என்னை நீ திட்டினுல் போதும்... அவ்வளவுதான். அழுகை பீறிட்டுக்கொண்டு வந்துவிடும் நான் இப்பொழுது பாசறையில் இருந்தால் எல்லாரும் என்னைப் பகடி செய்து தொலைத்திருப்பார்கள்!

இரெய்னு: (சற்று இளகி)...... வருந்துகிறேன். நான் உம்மைத் திட்டமாட்டேன்..... (அவள் குரலிலுள்ள பரிவால் தொடப்பெற்று மெல்லத் தலையை உயர்த்தி நன்றி யுணர்வோடு அவளை ஏறிட்டு நோக்குகின்ருன். அவள் உடனே சற்றுப் பின் வாங்கி, விறைப்பான குரலில்) நான் செல்வதற்காக வருந்த வேண்டா. எங்கள் போர் மறவர்கள் இப்படிக் கோழைகளாக இல்லை (இருக்கை யிருகினின்று விலகி அப்பாற்செல்கின்ருள்.)

அவன்: யார் சொன்னது? அவர்களும் அப்படித்தான்; போர் மறவர்களில் இரண்டே வகைதாம்; முதிர்ந்தவர்கள்; இளையவர்கள். நான் பதினுன்காண்டுகள் படையிலிருந்திருக்கிறேன். உங்கள் ஆட்களிற் பாதிப் பயல்கள் வெடி மருந்தை இதற்கு முன்பு மோந்துகூடப் பார்த்திருக்கமாட்டார்கள். ஏன், நீங்கள் எங்களை இப்பொழுது தோற்கடித்ததுதான் எப்படியாம்? போர்க்கலையை அறியாத ஒரே காரணத்தால்தான்... வேருென்ருலுமில்லை... (சினத்துடன், பழைய காட்சியை நினைவுகூர்ந்து) அய்ய! அதைப்போல் கற்றுக் குட்டித்தனமான ஒன்றை நான் பார்த்ததேயில்லை...

இரெய்னு: (பகடியாக...) ... உங்களைத் தோற்கடித்தது சற்றுக்குட்டித்தனமா?

அவன்: ... சரி இருக்கட்டும்... இதைக்கேள். ஒரு பெரிய தகரிப் (Machnic gun) படையைப்போய் ஒரு குதிரைப் படையால் தாக்குவது பெரிய போர்த்திறம் ஆகிவிடுமோ? தகரிகள் வெடித்தால், ஒரு குதிரையோ ஆளோ, அவற்றுக்கு 100 முழத்துக்கு இப்பால் பிழைத்து வந்து சேரமுடியுமா? நான் அந்தக் காட்சியைப் பார்த்தபொழுது என் கண்களையே என்னுல் நம்ப முடியவில்லை.

இரெய்னு: ஆவலோடு அவனை நோக்கித் திரும்பி, தன் கனவுகளும் உவகையும் மீண்டுவரப் பேசுகின்றாள்) அந்தப் பெருங் குதிரைப்படைத் தாக்குதலை நீர் பார்த்தீரா? அஃது எப்படியிருந்தது! என்ன நடந்தது?

அவன்: நீ குதிரைப் படைத் தாக்குதலை ஒரு பொழுதும் பார்த்ததில்லையே.

இரெய்னு: எப்படிப் பார்த்திருக்க முடியும்?

அவன்: ஆமாம்... பார்த்திருக்கமாட்டாய்தான் ஏன்...... பார்த்திருக்கவே முடியாதுதான். அஃது ஒரு வேடிக்கையான காட்சி! ஒரு பலகணியை நோக்கி ஒரு பிடி பட்டாணியை வீசி எறிவதுபோல் இருந்தது அது. முதலில் ஒன்று கிளம்புகிறது. அதையடுத்தாற்போல் இரண்டு மூன்று. பிறகு, எல்லாம் மொத்த மாக வந்து விழுகின்றன.

இரெய்னு: (மகிழ்ச்சிப் பெருக்கால் கைகளை இறுக மூடி மேலே உயர்த்துகின்றாள். கண்கள் விரிவடைகின்றன.) ஆம்! அதனை நடத்திய அந்த முதல்வர்! துணிந்தவருள் எல்லாம் துணிந்தவர்!

அவன்: (வறட்சியாக) உகும்! அய்யோ, அந்த ஆள் திண்டாடித் திணறித் தன் குதிரையைப் பிடித்துப் பின்னுக்கு இழுத்ததைப் பார்க்க வேண்டுமே!

இரெய்னு: எதற்காகக் குதிரையைப் பின்னுக்கு இழுக்க வேண்டும்?

அவன்: (அவ்வளவு பேதைமையான வினாவைக் கேட்டுப் பொறுமையிழந்து) அஃது அவனை இழுத்துக்கொண்டு ஓடியது!... மற்றவர்களுக்கு முன்னால் தான்போய் விழுந்து சாகவேண்டும் என்று அந்தப் பெயர்வழி விரும்பியிருப்பான் என்று நினைக்கிறாயா? கேள் கதையை. அதன் பிறகு எல்லாரும் வந்தார்கள்... இளைஞர்களெல்லாம் வெறித்தனமாகக் கத்தியை வீசி ஆர்ப்பாட்டம் பண்ணிக்கொண்டு வந்தனர். முதிர்ந்தவர்களெல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து பதுங்கிப் பதுங்கி வந்தனர். அவர்களுக்குத் தெரியும், ‘போர் புரிந்து பயனில்லை... தாங்கள் குண்டுக்குஇரையாக அனுப்பப்பட்டவர்கள்தாம்’... என்று! கடைசியில் குதிரையிலிருந்து விழுந்து பெரும்பாலாருக்கு முழங்காலில் சிராய்ப்பு!

இரெய்னு: அய்ய!- இருந்தாலும் எனக்குத்தெரியும்அந்தப் படைத் தலைவர் கோழையல்லர். அவர் சிறந்த மறவர் என்பது எனக்குத் தெரியும்.

அவன்: (நகையுணர்வுடன்) ஆமாம்... இன்றைக்கு அவனைப் பார்த்தால் அப்படித்தான் சொல்லுவாய்.

இரெய்ஞ: (உவகைப் பெருக்கால் திணறி....., அவன் கூறும் குறைகளையும் பொருட்படுத்தாமல்) ஆ! எனக்குத் தெரியுமே! சொல்லும்!...... ஐயா...... அவரைப்பற்றி இன்னும் சொல்லும்!

அவன்: இசை நாடகத்தில் முன்பாட்டுப் பாடுபவனைப் போல் அவன் வந்தான். ஆள் அழகானவன்தான். பளபளக்கும் கண்கள்... அழகான மீசை... தன் போர் முழக்கத்தை எழுப்பிக் கொண்டு, தான் குவிக்சாத்து காற்றடி அலைகளின்மேல் பாய்ந்ததுபோலப் பாய்ந்தான்!... நாங்கள் சிரித்தோம்!

இரெய்ஞ: அவ்வளவு துணிவா?

அவன்: ஆமாம்: சிரித்தோம் ஆனல் கொஞ்ச நேரத்தில் அழவேண்டி வந்தது... படைமுனைவன் (Sergeant) நடுநடுங்கி உடலெல்லாம் விளர்த்துப்போய் ஓடிவந்து, வெடிமருந்துக்கு மாருக வேறெதையோ அனுப்பி விட்டார்கள் என்றும், இன்னும் பத்து நிமயங்களுக்குத் தகரிகள் வேலைசெய்யா என்றும் சொன்னபொழுது எப்படியிருந்திருக்கும் எங்களுக்கு! எவ்வளவோ நெருக்கடிகளையெல்லாம் சரிக்கட்டியிருக்கிறேன்; அன்றுபோல் என்றுமே நான்கலங்கியதில்லை. என் கைவேட்டெஃகத்தில் கூட குண்டு இல்லை. என்னிடம் நொறுவைதான் இருந்தது. ஈட்டிகள் கூட எங்களிடம் இல்லை. அவ்வளவுதான் எங்களைச் சிதறடித்து விட்டார்கள். அந்தக் கோமாளி தான் குவிக்சாத்து பெரிய மறவனைப்போலக் கத்தியை வீசிக்கொண்டு தான் மிகவும் கெட்டிக்காரத்தனமான செயலைச் செய்ததுபோல் சுழன்று வந்தான்... உண்மையில் பார்த்தால் அவன் செயலுக்காக அவனுக்குத் தூக்குத் தண்டம் விதித்திருக்க வேண்டும். ஒரு போர்க்களத்தில் அவிழ்த்து விடப்பட்ட முட்டாள்களிலெல்லாம் அவன்தான் மிகுதியும் வெறிபிடித்த முட்டாளாயிருக்க வேண்டும். அவனும் அவன் படையும்...செய்தது தற்கொலைக்கு நிகர். எங்கள் தகரிகள் வெடிக்காமற்போனதால் பிழைத்தனர்... அவ்வளவுதான்.

இரெய்ஞ: (மிகவும் புண்ணுற்று வருந்தி, ஆயினும் தன் கனவுகளைத் துறக்க முடியாமல்) அவரை மீண்டும் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்வீரா?

அவன்: மறக்க முடியுமா என்னல் அவனை? (அவள் இழுபேழை அருகிற் செல்கின்ருள். அவள் தனக்கு ஏதாவது தின்பண்டம் தரப்போகிருளோ என்ற சிறு நம்பிக்கையோடு அவன்

திருத்திப் படிக்க!

பக்கம் 78 - இன் இரண்டாவது அடியை "அது பொருது கோவலன் அதை வாங்கினனெனினும் அவனை விரும்பவில்லை என்பதும், என்று திருத்திப் படிக்க வேண்டுகின்ருேம்.

அவனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவள் படந்தாங்கி யிலிருந்து படத்தை எடுத்துக்கொண்டு வருகின்றாள்.)

இரெய்னா: இதுதான் நாட்டுப்பற்றாளரும் மறவருமாகிய அந்தப் பெருமகனின் புகைப்படம்–அவரே என் கணவராகப் போகிறவர். (தொடரும்.)

அடிக் குறிப்பு: "தான் குவிக்சாத்து" ஆங்கிலப் புனை கதை யொன்றில் வரும் ஒரு முதியவன். தன்னைப் பெரு மறவனாகக் கற்பனை செய்து கொண்டு மறச் செயல்கள் பல ஆற்ற முனைந்து நகைப்புக் காளாகியவன்.

(80-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேணுவார் 'தூ' வென்று எள்ளல் வேண்டும். புதுமைக் கருத்துகள் வரவேற்கத்தக்கனவே. ஆனால் அவை முன்பிருந்து தள்ளப்பெறும் பழமைக் கருத்துகளைவிட உயர்ந்தனவாகவும், வலுவுள்ளவையாகவும் இருத்தல் வேண்டும். கரும்பு போன்ற பழங் கருத்தைத் தள்ளித் தக்கை போன்ற புதுமைக் கருத்தை வரவேற்பதால் ஏற்படும் பயன் என்ன? தமிழ் இசைமணி சுந்தராம்பாள் அவர்களின் இன்னிசைதாம் படத்தை நிறை வாக்குகின்றது. ஆனால் அவர் பாடும் பாடல்களோ அவரின் உயர்ந்த இன்னிசைக்குப் போதுமான திறம்படைத்தவை அல்ல. அவரன்றிப் பிறர்பாடும் பாடல்கள் உயர்வான இலக்கியச் சுவைக்குக் கேடாகவும் ஒலிக்கின்றன. கோவலன், கண்ணகி பாடலும், மாதவி கோவலன் பாடலும் கருத்தாழமற்றுத் தரக் குறைவாகவே உள்ளன. அவ்விடங்களிலெல்லாம் சிலப்பதி காரப் பகுதிகளையே பாடியிருக்கலாம். எண்ணெண் கலைகளும் அறிந்த ஆடலரசியாக இளங்கோவடிகள்காட்டிய மாதவியாகப் பூம்புகார் மாதவியில்லாமல் ஆடற்கலை நுணுக்கமேயின்றி அரங் கேற்றத்திலும், பிறவிடங்களிலும் அவர் ஆடுவது சுவைக்குறை வாக மட்டுமின்றிப் பண்பாட்டுக் குறைவாகவும் உள்ளது. சுருங்கக் கூறினால் அவற்றில் இக்காலப் போலி நாகரிக வாடை யுள்ளது. பூம்புகார் திரைப்படத்தில் ஏதேனும் சிறப்புகள் இருக்குமானால் அவை முற்றும் கண்ணகியாக இறுதியில் உணர்வுபெற நடிக்கும் திருவாட்டி விசயகுமாரியையே சாரும். வழக்குரை செய்யும் காட்சி சிறந்து விளங்குகின்றது. ஆனால் அவரையும் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மொத் தத்தில் சிலப்பதிகாரக் கண்ணகியின் தோற்றத்தைப் பூம்புகார் கண்ணகியால்–ஒரு சிறிதும் வருவித்துவிட முடியவில்லை. படம் முடிந்து வெளிவருகையில் நம் உள்ளத்தில் ஒலிப்பது,

'பொய்நெல்லைக் குத்தியே பொங்க நினைத்தவன்
கைநெல்லும் விட்டானம்மா'

என்ற பாட்டின் வரியே! – தொலை நோக்காடி. ○

ஆங்கில மொழியாக்கம்

11. ஒரு நாள் உணவை ஒழி என்ருல் ஒழியாய்
'இருநாளுக்கு ஏல்' என்ருல் ஏலாய்-ஒருநாளும்
என் நோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே
உன்ேடு வாழ்தல் அரிது.

A single day's food you forgo not;
Nor agree to two day's nourishment at a time.
My pangs you know not, O, my belly sorrowful,
It's impossible to live with you.

19 சேவித்தும் சென்று இரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்.

We serve, we beg, we cross the crystal seas,
We pretend, we govern, and we sing;
Thus our bodies waste; the belly tyrannizes us;
All this for a measure of rice!

25. ஆன முதலில் அதிகம் செலவு ஆனல்
மானம் அழிந்து மதி கெட்டுப்-போனதிசை
எல்லார்க்கும் கள்ளனுய் ஏழ்பிறப்பும் தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனும் நாடு.

When a man spends more than what he gets,
His honour goes; his wisdom's lost; where'er he goes
A thief in peoples' eyes; and wicked through out the [seven births,
A cruel cyinc he becomes.

ம. இலெ. தங்கப்பா

26. மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை-தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்.

Honour, birth, learning, liberality, intelligence,
Charity and penance, loftiness and diligence,
And love for girls with honeyed-tongues-these ten
Fly away when hunger comes.

33. வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

The hard ones conquer not the soft:
A dart that pierces the elephant enters not the cotton-wool
And a rock that splits not at the thrust of a crow bar
Splits for the root of a tender tree. [strong,

34. கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்றுஉண்டாயின்
எல்லாரும் சென்று அங்கு எதிர் கொள்வர் இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்று எடுத்த [தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்.

Uneducated though, if one is rich,
All people hail him; but a poor man
E'en by his wife and mother is despised;
In contenpt his words are held.

36. நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்டகரு அளிக்கும் கொள்கைபோல்-ஒண்தொடி
போதம் தனம்கல்வி பொன்ற வரும் காலம் அயல்
மாதர் மேல் வைப்பார் மனம்.

The crab, the oyster, the bamboo and the plantain-tree
Bring forth their off-springs or yields when they fall, E'en so, O girl,
When wisdom, wealth and learning fall,
Men lust for women not their own. O

முன்னிதழ்த் தொடர்ச்சி

மைக்கேல் காலின்சு

[1890-1922.]

— வழுதி —

ஆர்தர் கிரிபித், தி'வேலரா, பிளங்கெப் போன்ற தலைவர்கள் சின்பீன் கழகத்தின் முன்னணியில் நின்று விடுதலைக்கான வழிவகைகளைச் செய்துவந்தனர். ஆங்கிலச் சட்டமன்றத்துக்கான தேர்தலில் தாம் ஈடுபட்டு, வெற்றி பெற்றபின் வெற்றி பெற்றவர் சட்டமன்றத்துக்குச் செல்லாமல் 'தெயில் ஐரான்' என்ற பெயரில் அயர்லாந்து விடுதலைச் சட்டமன்றம் ஒன்றினை அமைப்பது என்று முடிவு கட்டினர். தொண்டர்படை சின்பீன் கழகத்துக்கு எப்பொழுதுமே கட்டுப்பட்டிருந்ததில்லை. தொண்டர்கள் அனைவரும் மாநாடு கூட்டி வேண்டும்பொழுது படை கொண்டு போராடுவதற்குத் திட்டம் வகுத்தனர் காலின்சு தொண்டர் படை அமைப்பாளனாகவும் இயக்குநனாகவும் அமர்த்தப்பெற்றான். ஆட்சியாளரையே எதிர்த்துநிற்க வேண்டிய படையினை அமைத்தல் எளிதன்று காலின்சு அதன் சட்ட திட்டங்களைத் திருத்தியும் புதுக்கியும் ஒழுங்குபடுத்தினான். புதிய தொண்டர்களைச் சேர்த்தான். அவன் அமைத்த அடிப்படையின் வலிமையில்தான் பிற்காலத்தில் தொண்டர்படை செயற்கருஞ் செயல்களையெல்லாம் சிறப்புற ஆற்ற முடிந்தது. தொண்டர்கள் வெளிப்படையாகவே போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டதால் அரசியலார் குறுக்கிட்டுப் பலமுறை பலரைச் சிறைப்பிடித்துச் சென்றனர். காலின்சு மீண்டும் சிறையிடப்பெற்றான். முதலில் பிணைப் பணம் கட்டமறுத்துச் சிறை சென்ற போழ்தினும், பின்னர் ஆட்சியாளரின் கட்டாயப் பட்டாளச் சட்டத்தை எதிர்த்துப் போராடவேண்டி யிருந்தமையால், சிறிது நாளில் காலின்சும் அவன் தோழர்களும் பிணைப்பணம் கட்டிச் சிறைமீண்டனர். அதன்பின் காலின்சு தொண்டர் படையின் துணைத்தலைவனாயிருந்து ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன. தலைமறைவாயிருந்து திட்டங்களை உருவாக்குவதிலும், ஒற்றர் படையினை

உருவாக்கித் தலைவர்கட்கு இன்றியமையாச்செய்திகள் அனுப்புவதிலும், தன்னைப் பிடிக்கவரும் காவலரின் கண்ணெதிரிலேயே தப்பித்துக் கொள்வதிலும், தேடிப்பார்க்கப் பெறும் வீட்டிலேயே ஒளிந்துகொள்வதிலும் காலின்சு திறமை மிக்கவன். தொண்டர் படை முன்னணியில் நின்று அவன் ஆற்றிய வேலைகளிலெல்லாம் இத்தகைய திறமைகளையே அவன் காட்டினான். அவனுக்குத் துணை ஒரு மிதிவண்டியே. இருபத்தெட்டாண்டாகியும் இளஞ் சிறுவனைப் போன்ற முகத்தைப் பெற்றிருந்த காலின்சு, தன் மிதிவண்டியில் ஏறி மின்னலென ஆடித்திரிந்து வேலைசெய்த காலங்களிலெல்லாம் காவலாளர் அவனுக்கு வலை விரித்திருந்தனர். அவனின் முக அடையாளங்களெல்லாம் அவர்கட்கு அறிவிக்கப்பட்டிருந்தன. ஆயினும் எவ்கை மாற்றுருவும் தாங்காமல் அவர்கள் நடுவிலேயே அவன் சுற்றி வந்த திறம் பாராட்டற்குரியது. காலின்சு கெயிலிக் மொழியிலும் ஆங்கிலத்திலும் இனிமையாகப் பேசும் திறன் பெற்றிருந்தான். நண்பர்களுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். அவனது கருத்துகட்கு யாரேனும் தக்க ஆராய்ச்சியோடு மறுப்புரைத்தால் அதனைப் பொறுமையுடன் கேட்பான். ஆனல், முயற்சியின்மையாலும், போதிய ஈடுபாடின்மையாலும், கோழைத்தனத்தாலும் சில தவருன கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் யாரேனும் அவன் கருத்துக்கு எதிர்ப்புரைத்தால் அவன் சீறிப்பாய்வான். தாயகத்தைப் பழிக்கும் சொற்களை அவனால் தாங்கிக்கொள்ள முடியாது. நெருப்புக் கனலாகக் கொதித்தெழுவான். கடமையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் மிக்கவன். குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் பழக்கம் உடையவன். புரட்சி வாய்ந்த எதிர்ப்பு வேலைகளில் ஈடுபட்டதால் நாட்டன்பர் உதவிக் கழகம், சிறிது நாளில் அவனைச் செயலாளர் பணியினின்றும் விலக்கியது. ஆயினும் தொண்டர்படை வேலையில் முழு மூச்சுடன் ஈடுபட வாய்ப்புக் கிட்டியதே என அவன் மகிழ்ந்தான். அப்போழ்து அவன் வறுமையில் வாடிக்கொண்டிருந்தான். உணவுக்கே வழியில்லாமல் பல நாட்களைக் கழித்திருக்கின்றுன். எனினும் தாயகத்தைப் பிரிந்திருந்த கொடிய வறுமையினும் தன்வறுமை பெரிதில்லையே என்று கூறித் தேற்றிக் கொண்டு சோராது உழைத்து வந்தான்.

பொதுமக்களின் நலனைச் சிறிதும் கருதாமல் அடக்குமுறை ஆட்சியை நடத்திக் கொலை, கொடுமைகளைச் செய்துவந்த வேற்றினத்தாரையும் பட்டம், பாராட்டு, அலுவல்கட்காக அவர்களிடம் பல்லிளித்து நிற்கும் வீடணர்களையும் எதிர்ப்பதற்கு வெற்று ஆர்ப்பாட்டங்களை விட்டுவிட்டு, உதைக்கு உதை, வெட்டுக்கு வெட்டு என்ற முறையினையே பின்பற்றல் வேண்டும் என்று தொண்டர் படை உணர்ந்திருந்தது. ஆட்சியைக் கவிழ்ப்பதற்குக் கமுக்கமான வேலைகள் என்ன என்ன

செய்ய வேண்டுமோ அனைத்தையும்செய்ய அவர்கள் அணியரா யிருந்தனர். காலின்சு மிகுந்த துணிவும் விரகும் கையாண்டு அரசினரின் ஒற்றர்படைக்குள்ளும் அலுவலாளருள்ளும் இன வுணர்வு மிக்க பலரைக் கவர்ந்து அவர்களை விடுதலை இயக்க உளவு வேலைகட்குப் பயன்படுத்திக் கொண்டான்.

உலகப் போரின் முடிவில் அமைதி மாநாடு நடக்கையில், அயர்லாந்தின் விடுதலை குறித்து அதிற் பேசல் வேண்டுமென்று சின்பீன் கழகத்தினர் முடிவுகட்டியிருந்தனர். காலின்சு அப் பேரவையிற் கலந்து கொண்டான். இந்நிலையில் தேர்தல் நடந் தது. தேர்தலில் பெரும்பான்மையாக வெற்றி பெற்ற விடுதலைக் கட்சியினர் இங்கிலாந்தின் சட்ட மன்றத்துக்கு உறுப்பினராகச் செல்லாமல் தங்கட்குள்ளேயேகூடி நாட்டின் விடுதலை அரசாட் சியை நிறுவினர். தப்ளினில் நடந்த ஆங்கில ஆளுநரின் ஆட்சிக் கெதிராக அமைக்கப்பட்ட இப் போட்டி ஆட்சியே மக்களின் எண்ணங்கட்குகந்த உண்மை ஆட்சியாயிருந்தது. இவ்வாட்சியைக் கலைக்க ஆங்கிலேயர் முயலாத முயற்சியில்லை. செய்யாத கொடுமையில்லை. சட்டத்துக்கும் நேர்மைக்கும் அரசி யற் பண்பாட்டுக்கும் புறம்பாக, தங்கள் ஆட்சியை நிறுவுவ தொன்றே குறியாய், அவர்கள் செய்த கேடுகளும், நடத்திய கொலைகளும் கணக்கிலடங்கா. காலின்சின் தலைமையில் கரந்து தாக்கும் போரில் ஈடுபட்ட தொண்டர் படையே இக் கொடுமை களையெல்லாம் எதிர்த்து விடுதலை ஆட்சியைக் காத்து நின்றது. அரசியலாரின் அமைப்பு முறையைத் தகர்த்துச் செயற்பாடு களைத் தடைப்படுத்தி இங்கிலாந்தின் அமைச்சர் அவையினையே கலங்கடிப்பதில் முன்னணியில் நின்றான் இளைஞன் காலின்சு.

தி'வேலரா, மகாரி, மிலராய் போன்ற தலைவர்கள் இங்கி லாந்தில் சிறையிலடைக்கப்பட்டுக் கிடந்தனர். மிகவும் திறமை யான விரகுகளின் மூலம் அவர்கள் சிறையினின்று தப்பித்துக் கொள்ளத் துணிவுடன் ஏற்பாடுகள் செய்தான் காலின்சு. இம் முயற்சியில் இரண்டு நாட்கள் அவன் உணவு கொள்ளவே நேரம் இல்லை. ஒற்றர்கள் பல முறை அவனை ஐயுற்று நெருங்கி னர். அனைத்தையும் சரிக்கட்டிக்கொண்டு ஓடத்திலேயே கடல் கடந்து அயர்லாந்து வந்தடைந்தான். இதுபோல் பல முறைகள் சிறையிலிருந்தவர்களைத் தப்புவிக்கச் சூழ்ச்சி புரிந்தவன் காலின்சு. ஒரு முறை நண்பகலிலேயே சிறையிலுள்ளவர்கள் தப்பித்துச் செல்ல அவன் ஏற்பாடு செய்திருந்தான் என்றால் அவன் சூழ்ச்சித் திறத்தினையும் விரகினையும் என் சொல்வது! திறன்மிக்க படைமறவன் மட்டுமல்லன்; தான் அமைச்சுத் திறனும் வாய்ந்தவன் என்பதை மெய்ப்பிப்பதுபோல், காலின்சு புதிய குடியரசு ஆட்சியில் பொருளியல் அமைச்சனாகவும் பொறுப்பேற்றான். ஆயினும் தன் கமுக்கமான எதிர்ப்பு வேலை

களைக் கைவிட்டானில்லை. விடுதலை யியக்கத்தின் பலகவர்கள் காலின்சின் பெயரைக் கேட்டு அஞ்சினர். ஆட்சியாளர் காலின்சைப் பலமுறை பிடிக்கமுயன்று தோல்வியுற்றனர். இதற்கிடையில் விடுதலைப் போரினைத் தொடர்ந்து நடத்தப் பெரும் பொருள் தேவைப்பட்டது. பொருட்கொடைத் திட்டம் ஒன்று தொடங்கப் பெற்றது. காலின்சே அதற்கும் பொறுப்பாளனுகைப் பணிபுரிந்து பெரும் பொருளைத் திரட்டினுன்.

ஆட்சியாளரின் கொடுமைகளை எத்தனை நாட்கள் தாம் தாங்கிக் கொண்டிருப்பது? 1919 ஆம் ஆண்டிறுதியில் தொண்டர் படை வெளிப்படையாகவே பழிக்குப் பழி வாங்கும் திட்டத்தினை மேற்கொள்ளலாயிற்று. தொண்டர் படைத் தலைவனுகக் காலின்சு இயங்கினுன். கொள்ளை கொலை முதலிய கொடுமை புரிந்த காவலரையும், ஒற்றர்களையும் மேலலலுவலர்களையும் தொண்டர் படை எதிர்த்துத் தாக்கியது. பலர் கொல்லப்பட்டனர் காவலர்படை வீடுகள், அரசியல் அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காலின்சு பம்பரம்போல் சுழன்று பணியாற்றினுன். ஒற்றுக்கேட்டல், உளவறிதல், அரசியலாரின் ஒற்றர்களை வழி மறித்தல், மடல்களைக் கைப்பற்றுதல், தீங்கு செய்ய எண்ணித் தன்னை அணுகும் ஒற்றர்களைத் தீர்த்துக் கட்டுதல், குடியரசு மன்றத்துக்குக் காப்பாக நிற்றல் அனைத்திலும் திட்டம் தீட்டி முன்னணியில் நின்றவன் காலின்சே. ஆங்கிலேய அரசு விடுதலைக் கிளர்ச்சியினை ஒடுக்குவதற்காகக் கொலை, கொள்ளை செய்து சிறைப்பட்டிருந்த கொடியவர்கள் முதல் கயவர்கள் பலர் அடங்கிய முரட்டுப்படை ஒன்றினை உருவாக்கிக் கையில் படைக்கலம் கொடுத்து அயர்லாந்துக்கு அனுப்பியது அவர்கள் செய்த கேடுகட்குக் கணக்கில்லை தொண்டர் பலர் கொல்லப்பட்டனர் ஒன்றுமறியாப் பொதுமக்களும் கேடுகட்காளாயினர் காலின்சின் படைஞர்கள் கலங்காமல் எதிர்நின்று போராடி அவர்களையும் வீழ்த்தினர். காலின்சைப் பிடிக்க அரசாட்சியினர் பல ஒற்றர்களை அனுப்பினர். சாவின் வாயிலிருந்து தப்புவதுபோல் காலின்சு பலமுறை தன் துணிவாலும் விரகினுலும் அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டான். என்ன செய்தும் விடுதலைக் கிளர்ச்சியினை அடக்க முடியாமற் போகவே, ஆங்கில அரசு அவர்களை மடக்கச் சூழ்ச்சி புரியத் தொடங்கியது. இருபுறமும் போரை நிறுத்தி அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டது. காலின்சு அமைதிக் குழுவின் தலைவனுகச் செல்லவேண்டியதாயிற்று. எனினும் அவன் விரைந்து முடிவு கட்டிவிடாமல் ஆங்கிலேயர் அளித்த வாக்குறுயை நிறைவேற்றினுல்தான் அமைதி முயற்சியில் அயர்லாந்து ஈடுபடும் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டான். அயர்லாந்து மக்களை மயக்கி அவர்களின் படைக் கலங்களைப் பறித்துக் கொள்ளல் வேண்டும் என்று ஆங்கில அரசு

செய்த சூழ்ச்சி வெற்றியளிக்காமற் போயினும், வேறு வழி யில்லாமற் இங்கிலாந்து ஒருவாறு அமைதி உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டது.

அமைதி மாநாட்டுக்கு அயர்லாந்தின் சார்பில் காலின்சும் இன்னும் நால்வரும் அனுப்பப் பெற்றனர். இதற்கிடையில் ஐரிசுக் குடியரசு அமைச்சரவையில் சிறு புகைச்சல் ஏற்பட் டிருந்தது. காலின்சுக்கும் வேறு சிலருக்கும் கருத்து வேறுபாடு கள் நிலவிவந்தன இச்சூழ்நிலையில் அமைதி மாநாடு கூடியது. இம்மாநாட்டில் இருபுறத்தாரும் ஓரளவுக்கு விட்டுக்கொடுத்தே நிலையினைச் சரிகட்ட வேண்டியிருந்தது. அயர்லாந்து தனியாட்சி பெறும் என்றும், ஆயினும் அது குடியேற்ற நாட்டு மதிப்பையே பெற்று ஆங்கில அரசரின் மேலாண்மைக்கு அடங்கியிருக்கும் என்றும் உடன்படிக்கை செய்யப்பெற்றது. இவ்வுடன்படிக்கை காலின்சுக்கும் பிற பன்னர்கட்கும் மகிழ்வு தருவதாக இல்லை என்றாலும், அப்பொழுதையச் சூழலில் பொதுமக்களும் தொண் டர்களும் பெருந் துன்பங்களில் உழன்று தளர்ந்திருக்கும் நிலை யில் அமைதியை நிலைநாட்டுவதற்கு வேறு வழியில்லை என்பதா லேயே அதனை அவர்கள் ஒப்புக் கொண்டனர். ஆயினும் முழு விடுதலை விரும்பிய குடியரசு சட்டமன்றத்தினர் இவ்வுடன்படிக் கையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. கருத்து வேறுபாடு களும் பூசல்களும் நிகழ்ந்தன. தொண்டர் படையிலும் பிளவு ஏற்பட்டது. இதற்கிடையில் உடன்படிக்கையின்படி காலின் சைத் தலைவனாகக்கொண்டு தற்காலிக ஆட்சி ஒன்று அமைக்கப் பெற்றது. ஆங்கிலேயரிடமிருந்த ஆட்சிப் பொறுப்பு காலின் சிடம் ஒப்படைக்கப்பெற்றது. முப்பத்தொரு அகவையே ஆகிய அவ்விளைஞன் தன் புதிய அலுவலைத் தாங்கித் திறம்பட நடத்தி வரலாயினான். ஆயினும் நெடுநாள் வாழ்ந்து அயர்லாந்தின் முழு விடுதலையினை அவன் காணக் கூடாது போயிற்று. முழு விடுதலை விரும்பிய முற்போக்குக் கட்சினர் காலின்சின் ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்யத் தொடங்கினர். ஓர் எளிய உள்நாட்டுக் குழப்பமே ஏற்பட்டு விட்டது. அக்குழப்பத்தை அடக்கும் முயற்சியில் ஒருநாள் காலின்சு சுடப்பட்டு உயிர் துறந்தான்.

தன்னலத்தையும் குடும்ப நலத்தையும் சிறிதும் எண்ணாமல் இரவு பகலாய் நாட்டுக்கே உழைத்து அயர்லாந்தை அடிமைப் பிடியினின்று விடுவிப்பதில் பெரும் பங்குகொண்ட அந்த மறவ னின் உடலம், இன்று குடியரசாகத் திகழும் அயர்லாந்தில் அமைதியாகத் துயில் புரிகின்றது. *

தென்மொழியின் மக்களவைப் பகுதிக்குத் தமிழ் வளர்ச்சி, குமுகாயச் சீர்திருத்தம் முதலிய கருத்து மடல்களை எழுதியனுப்ப வேண்டுகின்றோம். (— ஆசிரியர்.)

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

மொழி பெயர் தேயச் செலவு.

புலவர். தி. நா. அறிஒளி.

— * —

புல்லி குன்றம் கடந்து: கடல் நீரிலிருந்து விளையும் உப்பை விற்கும் உப்பு வணிகர்கள் 'உமணர்' எனப்பட்டனர். அவ்வுமணர் கூட்டம் மாட்டு வண்டிகளில் உப்பை ஏற்றிக் கொண்டு ஊர்தோறும், நாடுதோறும் சென்று விற்பது பண்டைக் கால வழக்கம் நிலத்தில் நீரற்றுப் போக, ஆழமான நீண்ட சுனைகள் வறண்டுவிடக், குன்றுகளிலுள்ள மரங்கள் எரிந்து கரிய, ஞாயிற்றின் கொடுமையான கதிர்கள் வேனிற் காலத்தில் காய்ந்தன. மிகுந்த வெப்பத்தைப் பொறுக்க மாட்டாமல் மூங்கில்கள் வெடிக்கும் அகன்ற இடங்களுள்ள காடுகளில் வேங்கைப் புலியைப் போரில் கொன்று வெற்றி பெற்ற ஆண் யானையின் தும்பிக்கை காண்பார்க்கு அச்சமூட்டும். அம் மலை போன்ற யானை, போரில் உண்டான புண்ணாலும், களைப்பாலும் துன்பப்பட்டு, மதம் வாடப், பிறை நிலவைப் போன்ற மருப்பில் (கொம்பில்) தன் பெரிய தும்பிக்கையை அணைத்துக் கொண்டு, பல மரங்கள் நெருங்கி அடர்ந்துள்ள காப்பான ஒரு பக்கத்தே தன் காதற்பிடியோடு தங்கியிருக்கக் கூடிய கற்பாறைகள் நிறைந்து கிடக்கும் காட்டு வழிகளைக் கடந்து, உமணர் கூட்டம் செல்லும்.

உப்புச் சுமையை ஏற்றிக்கொண்டு ஊர்தியை இழுத்து வந்த மாடுகள் களைப்பால் துன்புறும். அதைக்கண்ட உப்பு வணிகர் (உமணர்) எருதுகள் இளைப்பாறுவதற்காக அக் காட்டு வழியில் தங்குவர். அவர்கள் முரடான நிலத்தை இடித்துப் பிளந்து, சிறு கிணறு ஒன்றைத் தோண்டி வைப்பர். இவ்வாறு பல உமணர் கூட்டங்கள் இடித்துத் தோண்டியமையால் அகன்ற வாயையுடைய கிணருக ஆகிவிடும் அது. அக் கிணற்றிலும் தண்ணீர் சிறிது சிறிதாகவே சுரக்கும். சுரக்கும் ஊற்று நீரை, அக் காட்டுவழியில் செல்லும் புது வழிப்போக்கர்கள் தம் களைப்பு நீக்குவதற்காகப் பயன்படுத்துவர்; பருகி நீர்வேட்கை தணிவர் இத்தகைய மலைக்காட்டுப் பகுதி புல்லி என்ற மலைநாட்டுத் தலைவனுக்கு உரியது. இப்புல்லி ஓசையுண்டாக்கும் கழலைத் தன் கால்களில் பூண்ட பெரிய மறவனுவான். இம் மலைநாடு வேங்கடமலைக் காட்டுப் பகுதியாம். இப்பகுதி கடந்து செல்வதற்கு மிகுந்த துன்பம் தரக்கூடியது. அந்தக் கடுமையான வழிகளைக் கடந்து மொழிபெயர் நாடுகட்குப் பண்டைத் தமிழர் செல்வார்கள்.

புல்லியின் நாட்டைக் கடந்ததும், உறுதியான வில்லில் அம்புகளைத் தொடுத்து விற்போரும் வேட்டையும் ஆடும் வடுகர் நாடு தோன்றும். அந் நாட்டாராகிய வடுகர் கள்ளுண்டு, அக் களிப்பில் மூழ்கியவர்களாய்ச் செருக்கு மிகுதியாக ஆர்ப்பரித்து ஆடுவர். அவ்விடம் வேற்றுமொழி வழங்குமிடம். இந்த இடத்தையும் கடந்து வேற்று நாடுகட்குத் தமிழர் பொருளீட்டி வரச் செல்லுவர்.

''நிலநீர் அற்று நீள்சுனை வறப்பக்
குன்று கோடு அகையக் கடுங்கதிர் தெறுதலின்
என்றூழ் நீடிய வேய்படு நனந்தலை
நிலவுநிற மருப்பிற் பெருங்கை சேர்த்தி
வேங்கை வென்ற வெருவரு பணைத்தோள்
ஓங்கல் யானை உயங்கி மதந்தேம்பிக்
கடல்நீர் உப்பின் கணஞ்சால் உமணர்
உயங்கு பகடு உயிர்ப்ப அசைஇ முரம்பு இடித்து
அகல் இடங்குழித்த அகல்வாய்க் கூவல்
ஆறுசெல் வம்பலர் அசைவிட ஊறும்
புடையல் அங்கழல் கால் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழிஆர் மகிழத் கலிசிறந்து ஆர்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்
பழிதீர் மாண் நலம் தருகுவர் மாதோ!'' (அகம்: 295)

சொல் பெயர் தேஎம்: மேற்குக் கரைப் பகுதியைக் கடந்து, மேற்குப் பகுதி நாவலந்தீவு வழி சிந்துக் கரைப்பகுதி, அதைக் கடந்த ஆப்கானித்தானம், பாரசீகம் முதலிய நாடுகட்குத் தமிழர் சென்றனர். அவ்வாறு செல்பவர் கொண்கான நாடு, பூழிநாடு முதலிய நாடுகளைக் கடந்துசெல்லல் வேண்டும். நன்னனுக்குரிய நாட்டிலுள்ள ஏழிற்குன்றம் (எலிமூக்கு மலை) என்ற பெருமலையைக்(தற்காலக் கன்னட நாட்டுப் பகுதியிலுள்ள பெங்களூரும் பரு முதலிய பகுதிகள் பண்டை நன்னன் நாடு. தற்பொழுது 'கொங்கணம்' என வழங்கும் மராட்டிய மொழிப் பகுதி பூனா, பம்பாய்ச் சார்புப் பகுதிகளும் இப்பகுதியில் அடங்கும்) கடந்து சொல் மாறுபட்ட நாடுகட்குக் காட்டுவழிகளைக் கடந்து சென்றனர் தமிழர். 'சொல் மாறுதல்' என்ற தொடர் நம்மை எண்ணத் தூண்டுவதாகும். எழுத்து வேற்றுமை மட்டுமன்றி, சொல்லும், பொருளும் மாறிய வேற்று மொழிபயில் நாடுகட்குத் தமிழர் சென்ற வாய்மை இதனால் தெளிவாகும்.

''.............................நன்னன் நன்னாட்டு
ஏழிற் குன்றத்துக் கவாஅற் கேழ் கொளத்
திருந்து அரை நிவந்த கருங்கால் வேங்கை
எரிமருள் கவளம் மாந்திக் களிறுதன்

வரிநுதல் வைத்த வலிதேம்பு தடக்கை
கல்லூர் பாம்பில் தோன்றும்
சொல்பெயர் தேஎத்த சுரன் இறந்தோரே" (அகம்: 349)

கட்டி நாட்டுக்கு அப்பால்: கஞ்சங் குல்லையைத் தலையில் அணியும் கண்ணியாக வடுகர்கள் சூடுவார்கள். அவர்களுக்குரிய பகைப் புலத்ததாய பல வேற்படையையுடைய கட்டி என்பவனின் நாட்டுக்கு அப்பால் நம் மொழி மாறுபட்ட வேற்றுமொழி வழங்கும் தேயத்தில் தமிழகத் தலைவர்கள் பொருளீட்டி வரச் சென்றனர்.

தமிழகத்தின் ஒரு வடகோடிப் பகுதி கட்டியின் நன்னாடாகும். அதற்கு அடுத்த நாடு வடுகர் நாடு. அதைத் தாண்டி மொழி பெயர் தேஎம் உள்ளது. அதைக் கடந்து செல்வர் தமிழர். கட்டிக்கு உரிய நன்னாடு தமிழகத்துக்குப் பகை நாடு அன்று; மொழி வேறுபட்ட நாடுமன்று; தமிழ் வழங்கும் நாடே என்பதை மாமூலனார் தெளிவிக்கிறார்.

கட்டியை மாமூலனார், பரணர் (அகம் 226) குடவாயிற் கீரத்தனார் (அகம் 44) ஆகியோர் பாடியுள்ளனர். இந்தக் 'கட்டி', சேரன் படைத்தலைவருள் ஒருவன் என்பதைக் 'கங்கன், கட்டி' (அகம் 44) என்ற பாடற்றொடரால் அறியலாம். இவன் பாணன் என்பவனைத் துணையாகக் கொண்டு உறையூரில் தித்தனோடு போரிடவந்து, அத்தித்தனின் நாள் அவையில் ஒலிக்கும் கிணைப்பறையின் ஒலிகேட்டு, அஞ்சிப் போரிடாது ஓடினான் என அகம் 226 ஆம் பாடல் கூறும். இவன் நாட்டைக்கடந்து பொருளீட்ட நந்தமிழர் ஏகியமை இச் சான்றுகளான் தெளிவாகும்.

"கோடீர் இலங்குவளை ஞெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணொடு புலம்பி
ஈங்கு இவண் உறைதலும் உய்குவம் ஆங்கே
எழுவினி வாழியென் னெஞ்சே! முனாஅது
குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழி பெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே"

(குறுந்தொகை: 11)

முடிவுரை: இதுகாறும் ஆய்ந்தவாற்றான், இற்றை நாள் வட இந்தியாவின் அனைத்துப் பகுதியையும் கடந்து, இந்திய மாநிலங் கடந்த வேற்றுமொழி நாடுகட்கும் சென்று தம் வாணிகம், போர்த்தொழில், முதலிய வினையுடற்றிப் பொருளீட்டினர் தமிழர் என்பது விண் விளங்கு பகல் ஞாயிறெனத் தெள்ளெனப் புலனாகும்.

வேதியல்.

கொதிகலன்களும், எரிபொருள்களும்.

'செந்தமிழ்க் கோதை'

நீராவிப் பொறி, நீராவிச் சுழலுந்தி (Steam Turbine) போன்ற தொழிலாக்கக் கருவிகட்குத் தேவையான தகுந்த இயல்புள்ள நீராவியை எளிய செலவில் வேண்டிய வெப்ப, அழுத்த நிலைகளில் உண்டாக்குவதே கொதிகலன்களின் பயனாகும். 'நீராவி ஆக்க அணி' (Steam generating unit) என்பது வெப்ப ஆக்கிகளும், ஆக்கப்பட்ட வெப்பத்தை ஆவியாக்கப் பெறும் பாய்மத்தை (Fluid) அடையச் செய்யும் கருவிகளும் சேர்ந்த கூட்டமைப்பு' என்று அமெரிக்கப் பொறித்துறை வல்லுநர் குழு வரையறுக்கின்றது. அவ்வணியுள் கொதி கலன்கள், நீர்ச்சுவர்கள் (Water walls), மிகை வெப்ப அடுப்புகள் (Super heater), மறு வெப்ப அடுப்புகள் (Re heaters). காற்றடுப்புகள் (Air heaters) யாவும் உள்ளன.

கொதி கலன்கள் இருவகைப் பட்டன. 1. தீக்குழற் கொதி கலன்கள் (Fire tube Boilers), 2. நீர்க்குழற் கொதிகலன்கள் (Water-tube Boilers) என்பன அவை.

அ) தீக்குழற் கொதி கலன்கள் அல்லது புகைக் குழற் கொதி கலன்களில் கனல் வளிகள் (Gases of combustion) பாயும் குழற்களின் புறம்பே நீர் உள்ளது. காட்டு:- 'காக்ரான்' (Cochron), கார்னிஃச் (Cornish), இலங்காசையர் (Lancashire) நீராவிப் பொறி கொதி கலன்கள் (Locomotive Boilers) என்பன.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மேற்கிந்தியா, கிழக்கிந்தியா, நடுவிந்தியா, வடமேற்கிந்தியா, தென்கிழக்கிந்தியா வெங்கணும் பண்டைப் பேராண்மை கெழுமிய உரிமைத் தமிழரின் திருவடிகள் செலவு சென்று, வெற்றியொடு மீண்டன. பிறபுலம் சென்ற காலத்தும் தமிழ் நிலத்தை அன்னார் மறந்தாரல்லர்; தம் நாட்டுப் பற்றில் குறைந்தாரல்லர்.

இற்றை நாள் உலகெங்கும் தமிழர் வெறுக்கப்பட்டுத் துரத்தப்படும் தாழ்நிலையில் விளங்குவதை எண்ணிடின் நற்றமிழர் நன்னெஞ்சம் கொதித்துக் குமுறும். இழந்த பேராண்மைவீறை –கிழமை வாழ்வை மீண்டும் தமிழர் எய்த மாமூலனாரின் பொன்னேவியப் பூம்பாடல்கள் நமக்குப் புத்துணர்ச்சியூட்டுமாக! ○

ஆ) நீர்க் குழற் கொதி கலன்கள்:- இவற்றில் நீர் சுழலும் குழல்களின் புறம்பே கனல் வளிகள் உள்ளன. காட்டு:- பாப்காக் வில்காக்சு (Babcock and Wilcox Boiler) கொதி கலன்.

தீக்குழற் கொதிகலன்களில் (க) புறத்தீ மூட்டிய, (externally fired) (உ) அகத் தீ மூட்டிய கலன்கள் என இருவகை உண்டு முதல்வகைக் கலன்களில் தீ, கொதிகலனுக்கு வெளியே உள்ள செங்கற் சுவர் அறைகளில் உள்ளதால், இவை நிலையான வெப்ப ஆக்கிகட்கு ஏற்றவை. இரண்டாம் வகைக் கலன்களில் தீ கொதி கலனுக்குள் உள்ளதால் நீராவி ஆக்கச் செலவு மிகுதியாகும்.

தீக்குழற் கொதி கலன்கள்	நீர்க்குழற் கொதி கலன்கள்.
குறைந்த செலவும் மிகுந்த திறலும் உடையது	மிகுந்த திறல் பெற செலவு மிகவும் பெருகும்.
சிறு அளவில் ஆக்கலாம், பேரளவில் ஆக்கினுல் கலன் கூட்டை (Boiler Shell) ஏற்றிச் செலல் அரிது. குறைந்த அளவு நீராவிக்கு இவை ஏற்றவை.	சிற்றளவில் உள்ள நீர்க்குழற் கொதிகலன்கள் செலவு மிக்கவை சிக்கனமற்றவை. எனவே இவை அளவில் பெரியதாகச் செய்யப் படுகின்றன. நிறைந்த அளவு நீராவிக்கு ஏற்றவை.
நீராவி அழுத்தம் பரப்படிக்கு 250 'பவுண்டு'கட்கு மிகாதிருக்கும்காரணியம் கலன்சுவர் தடிப்பு மிகுதியாக வேண்டியுள்ளமையே.	நீராவி அழுத்தம் பரப்படிக்கு 1200 'பவுண்டு'கள் வரை மிகலாம்
* நீராவியின் உந்துதிறன் (Steam rate) குறைவு	நீராவியின் உந்துதிறன் மிகுதி.
குறைவான தரைப் பரப்பில் இவற்றை அமைக்கலாம்.	இவற்றை அமைக்கும் தரைப் பரப்பு மிகுதியாகும்.
கொதிகலன்கள் வெடிக்க வாய்ப்புகள் குறைவு	இக் கொதிகலன்களில் வெடிக்கும் நிலை அடிக்கடி ஏற்படலாம்.
நீர் மிகுந்துளதால், இவற்றை இயக்குவது எளிது	இவற்றை இயக்குவது முன்னதினும் எளிதன்று.
நீர் மேற்பரப்பு மிகுந்துளதால், ஆக்கப்பெறும் நீராவி உலர்ந்தது.	இவற்றில் ஆக்கும் நீராவியை உலர்த்தி மிகை வெப்ப அடுப்பில் தேவையாகுல் சூடாக்க வேண்டும்.
தூய்மையற்ற நீர் மென்கலன்களை அரித்துவிடுவதால் தூய நீருற்று அமைப்பு தேவை.	இவற்றில் நீருற்று அமைப்பு தேவையில்லை.

பொதுவாகச் சிற்றளவு நீராவித் தேவைக்குத் தீக்குழற் கொதிகலன்கள் குறைந்தசெலவிற் திறல்பட இயங்கும். பேரளவு நீராவித் தேவைக்கு நீர்க்குழற் கொழிகலன்கள் ஏற்றவை. அடிக்கடி பழுதுபார்ப்பின் இரண்டையும் இயக்க, வேண்டிய நுட்பம் ஒருதன்மையானதே!

கொதிகலன் தெரிந்தெடுத்தல்: (Selection of a boiler) பல்வகைக் கொதிகலன்களில், நம் தேவைக்கேற்றதைத் தெரிந் தெடுக்கக் கீழ்க்காணும் நிலைகளை ஆயவேண்டும்.

1) தேவையான அழுத்த நிலையில் வேண்டிய திறனுள்ள நீராவி ஆக்குந்திறன்,
2) வேண்டிய நீராவி வேகம் (Steam rate) உள்ளது.
3) தரை பரப்பு,
4) பழுது பார்க்கவும், தூய்மை செய்யவும் ஏற்ற நிலை,
5) இயக்க, வைப்புச் செலவுகள்,
6) மிக்கப் பயன் பெற எரிபொருள்களை எரிக்கும் தனி நிலை வாய்ந்துள்ளமை,
7) காப்பும் பயனும் உள்ள இயக்கம்,
8) முதற் பணம், பிழை திருத்தாக்கங்கள்.

கொதிகலன் எரிபொருள்கள்: நீரை ஆவியாக்குவன எரிபொருள்களே. எரிபொருள்கள் திண்மம், நீர்மம், வளிமம் (Solid, liquid, gasceous) என்ற எந்நிலைகளிலாவது இருக்க லாம் மரம், நிலக்கரி போன்றன திண்மநிலை எரிபொருள்கள். மாழைச்சார எண்ணெய்கள் (Mineral Oils) நீர்ம எரிபொருள் கள். வளிமநிலை எரிபொருள்கள் நீர்வளி (Water gas), ஆக்கி வளி (producer gas), எரியுலை வளி (blast furnace gas) கரியிழை வளி (Coke cover gas) அல்லது இயற்கை வளி (Natural gas) போன்றன.

நம் நாட்டில் 'மிகையெரி நிலக்கரி' (bituminous coal) தான் மிகுதியாக பயன்படுகின்றது ஒரு பவுண்டு நிலக்கரியை எரித்தால் உண்டாகும் வெப்ப அளவைக் கலோரி மதிப்பு (Calorific value) அல்லது எரி பொருளின் வெப்ப மதிப்பு (heating value of fuel) என்பர்.

பொருள்.	வெப்ப மதிப்பு (பவுண்டுக்கு)
நிலக்கரி	13500 சீமை வெப்ப அலகுகள். (British thermal units)
(பெட்ரோலியம்) மாழைச்சாரியம்	19000 சீ. வெ. அ.
நிலக்கரி வளி (coal gas)	500 சீ. வெ. அ.

கனற்சி (burning)என்பது எரியங்கட்கும்(combustibles) உயிரியத்திற்கும் (oxygen) இடை வினையும் வேதியல் வினை (Chemical action) ஆகும். இந் நிகழ்ச்சியில் எரி பொருளில் உள்ள நீரியம் (Hydrogen) உயிரியத்துடன் வினைப் பட்டு நீராவி (Water vapour) உண்டாவதால், எரி பொருள் தரும் வெப்பத்தின் ஒரு பகுதி உண்டாகிய நீரை ஆவியாக்கப் போகின்றது. எனவே, மிகுந்துள வெப்பம் உண்டான வெப் பத்தினும் குறைந்த அளவினதாம். இவ் வெப்பம்தான் நமக்குப் பயன்படுகின்றது. இதைக் கீழ் வெப்ப மதிப்பு (lower calorific value) என்பர்.

எரி பொருள்தரும் மொத்த வெப்ப மதிப்பை உயர் வெப்ப மதிப்பு (higher calorific value) என்பர். எனவே கீழ்வெப்ப மதிப்பு (சீ. வெ. அ) = உயர் வெப்ப மதிப்பு—1050 நிறை [1050 W]

1050-நீராவியின் உள்ளுறை வெப்பம் (Latent heat of steam) நி-வினையின்போது உண்டான நீராவியின் நிறை [பவுண்டுகளில்]

77 பாகை [F] வெப்ப நிலையில் நீராவியின் ஆவியாகு உள்ளுறை வெப்பம் ஒரு பவுண்டுக்கு 1050 சீ வெ. அ. ஆகும்.

தென்மொழி, கடலூர் 2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7-25 உருபா.	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எதிக் கேட்க.

அமைச்சர்

தென்மொழி, கடலூர் – 2.

சிறு கதை.

கோடை மழை

['செயகாந்தன்' என்னும் சிறுகதை எழுத்தாளர் தமக்குத் தனித் தமிழ் ஆற்றலின்மையாலும், ஓரிரு வாழ்வியற் கதைகளை எழுதிப் போலிப் புகழ் பெற்ற செருக்காலும் 'தனித் தமிழில் சிறுகதைகள் எழுத முடியாது' என்ற புன்கருத்தைக் கடந்த மாத 'ஆனந்தவிகடன்' வாயிலாகக் கூறித் தம் வெள்ளறிவைப் புலப்படுத்தியுள்ளார். அம் மொழிக் குருடர்களுக்கென ஓரிரு சிறுகதைகளைத் தனித் தமிழில் வெளியிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. அன்ன பேதைகள் இதனைக் கண்ணுறுவாராக. அவரின் அடம்பிடிக்கும் 'புரட்சி' மூளைக்குப் புரியாத தமிழ்ச்சொல் இக்கதையுள் தென்படின் அவர் எடுத்துக் காட்டட்டும். — ஆசிரியர்.]

ஒளிச் செல்வன் புகுவதற்கு ஈர்க்குச்சியளவு தொளைகூட விட்டு வைக்காமல் வானை மூடிக் கப்பியிருக்கும் மழைக்கால முகில்மூட்டம் போல, அறுசுவைகளுள் வேறு எந்தச் சுவையும் புகுவதற்கு இடங்கொடாமல் கைப்போன்றே என் சுவைப் புலன் முழுவதையும் ஊடுருவி வளைத்துநின்றது. கசப்பு! கசப்பு! ஒரே கசப்பு! மருத்துவர் கொடுக்கும் மருந்துதான் கசப்பென்றால் அவர் கூறும் கட்டுப்பாடான உணவாகிலும் அதற்கு விலக்காயிருக்கக்கூடாதா? பதினைந்துநாட்களாகக் கோதுமைஉரொட்டியும் பாலுமே காலை உணவாகப் பயன்படுத்தி வந்தவன், மாறுதல் வேண்டுமென்று விரும்பிக் கேட்டதற்கு "வேண்டுமென்றால் ஆப்பம் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று கட்டளையிட்டார் மருத்துவர்.

— புதுவை சுப்பிரமணியன் —

செல்வி ஆவல் ஆவலாக ஆவி பறக்க ஆப்பத்தைக் கொண்டு வந்து வைத்தாள். நானும் பழைய நினைவோடு ஆப்பத்தை விண்டு வாயில் போட்டேன். அந்தச் சிறு துண்டே தொண்டையில் இறங்க மறுத்து விட்டது

"ஏன் செல்வி! தேங்காய்ப்பால் ஊற்றித்தானே ஆப்பம் சுடுவார்கள்! வேப்பிலைச்சாறு ஊற்றிக்கூடச் சுடுவார்களோ?" என்றேன்.

"வேப்பிலைச்சாறு மட்டுமா? எட்டிக்காய், பாகற்காய், முடக்கத்தான் எல்லாவற்றையும் போட்டுக் குழைத்துச் சாறு பிழிந்து சுடுவார்கள்.........சே! சே! என்ன இருந்தாலும் நாச் சுவைக்கு நீங்கள் இவ்வளவு அடிமைபடக் கூடாது. காய்ச்சல் என்றால் கசப்பு இருக்கத்தான் செய்யும்! பொறுத்துக் கொண்டு தான் சாப்பிட வேண்டும். நீங்கள் என்னவென்றால் சிறு பிள்ளை போல முரண்டு பிடிக்கிறீர்களே! குழந்தைகளே தாழ்வில்லை போங்கள்!" என்றாள் அவள்.

இப்படித்தான் இந்தப் பதினைந்து நாட்களில் என்னைவிட அவள் பெரியவளாகி விட்டிருந்தாள். நான், சோர்வாலோ சோம்பலாலோ அன்றிப் பிணியால் வந்த அசட்டையாலோ ஏதாயினுஞ் செய்தால், உடனே அதைப் பற்றிய அவளுடைய ஆய்வுரை தொடரும், நான் அவளைவிடக் கல்வியிற் பெரியவனாக இருக்கலாம்; அறிவிற் சிறந்தவனாக இருக்கலாம்; அடைவில் முதிர்ந்தவனாக இருக்கலாம்; ஆனால், நோய் வந்தபொழுது எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்று என்னைவிட அவளுக்குத்தான் மிகுதியாகத் தெரியும் போலும்! இந்தப் பதினைந்து நாட்களும் அவள் நடந்துவந்த வழி இந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டியது. சே! சே! ஆண் மகனுக்கு நோயே வரக்கூடாது! வந்தாலும் இளமைக் காலத்தில் வரவே கூடாது! அப்படியே வந்தாலும் இல்லறம் மேற்கொண்ட கணவனுக்கு வரவே கூடாது!

இந்த முப்பதாண்டு வாழ்க்கையில் நான் ஒரு பொழுதும் இத்தகையதொரு கடுமையான பிணிக்கு ஆளானதில்லை. மிகுதியான உழைப்பால் சோர்ந்து படுத்ததுண்டு! பசி மயக்கத்தால் கிறங்கிச் சுருண்டதுண்டு! ஏதோ ஒரு நாள் சளிக் காய்ச்சல், இரண்டு நாள் இருமல் என்று தொல்லைப்பட்டதுண்டு! போராட்டக் காலத்தில் காவலர்களின் கசையடியால் அல்லற்பட்டதுண்டு! ஆனால், ஒரேயடியாகப் பதினைந்து நாட்களாக வாட்டி வதைக்கும் இது போன்றதொரு நச்சுக் காய்ச்சலை நான் கண்டதில்லை. அந்தச் சிற்றூரிலே பிணியால் துன்புற்ற பலர்க்கு நான் ஆறுதல் சொல்லியதுண்டு. இன்று, அவர்களெல்லாரும் எனக்கு ஆறுதல் சொல்வதைக் கண்டபொழுது என் மனம் நைந்தது. யாரேனும் ஒருவர்க்கு நோய்வந்தால், அடுத்து நான் அங்குச் செல்வதும், அவர்க்கு நம்பிக்கை ஊட்டி ஆறுதல் சொல்வதும், துணிவு பிறக்கச் செய்வதும் என் கடமைகளாய் விட்டன. இப்படி என் அறிவுரை எத்தனையோ பெயர்க்குப் பயன்பட்டிருக்கிறது. நான் சொன்ன மருத்துவ முறைகள் பலர்க்குப் பிணி போக்கியிருக்கின்றன. நான் ஊட்டிய நம்பிக்கை ஒன்றே எத்தனையோ பெயர்க்கு மருந்தாக மாறியுள்ளது.

இன்றோ என்னுடைய இரக்கத்துக்கு ஆளானவர்கள் இப்பொழுது என்பால் இரக்கங்கொண்டு என்னைப் பார்க்க வருகின்றார்கள் என் அறிவுரை பெற்றவர்கள் எனக்கு அறிவுரை வழங்க வருகின்றார்கள். அவர்களுடைய இரக்கம் அன்பினின்று பிறந்ததுதான்! நன்றியுணர்வினின்று எழுந்ததுதான்! ஆனால் எனக்கென்னவோ அஃது என் சிறுமையைச் சுட்டுவதாகப் பட்டது. தேர்வில் வென்ற மாணவனைக் கீழ்வகுப்புக்கு அனுப்புவது போன்றிருந்தது! வகுப்பில் கடைநின்றாரையெல்லாம் அழைத்துச் சட்டாம்பிள்ளையின் தலையில் குட்டச் சொல்வது போன்றிருந்தது. எப்படியோ அவர்கள் ஏதாயினும் சொல்லி விட்டுப் போகட்டும்! அவர்களுள் என்னினும் முதியாரும் இளையாரும் உள்ளனர். ஏதோ என்பால் உள்ள அன்பால் எனக்கு நன்மை தருமென்று தமக்குத் தோன்றியவற்றையெல்லாம் சொல்கின்றனர்......! ஆனால், இவளுக்கென்ன வந்துவிட்டது. நான் எது செய்தாலும் அன்றி எது சொன்னாலும் அதிலே ஒரு குறை தென்படுகிறதே இவளுக்கு! என்னவோ இந்த உடற் பிணி என் அறிவை மழுங்க வைத்து விட்டது என்று நினைத்து விட்டாள் போலும்!

''மருந்து கொண்டு வரட்டுமா?'' என்று சமையலறையிலிருந்து இல்லத்தரசியின் குரல் கேட்டது.

''ஊம்!'' என்று ஒப்புதல் தெரிவித்தேன்.

மருந்து வந்தது. வழக்கம்போல் அவளுடைய அறிவுரையும் சேர்ந்து வந்தது.

''மருந்தைச் சாப்பிட்டுவிட்டு உடனே படுத்து விடாதீர்கள். சிறிது நேரம் உட்கார்ந்திருங்கள்! எப்பொழுதும் படுத்துக் கொண்டேயிருந்தால் நோயும் நம்மிடையேதான் படுத்துக் கொண்டிருக்கும்!''

எனக்குச் சிரிப்பு வந்தது. இம்முறையும் அவள் ஏதாவது சொல்வாளென்று நான் எதிர்பார்த்தேன். எதிர்பார்த்தது தடையின்றி நடைபெறவே எனக்குச் சிரிப்பு வந்தது. அது வெறுஞ் சிரிப்பன்று! அவளை எள்ளி நகையாடு முகத்தான் எழுந்த சிரிப்பு! உள்ளத்தில் ஊறி நின்ற கைப்புணர்ச்சியைக் கக்க எழுந்த சிரிப்பு! அவளையும் பாராமல் அவள் கொணர்ந்த மருந்தையும் பாராமல் முற்றுந் துறந்தவனைப்போல முகட்டு வளையைப் பார்த்து நான் சிரிப்பதைக் கண்டபொழுது அவளுக்கு என்ன தோன்றியதோ? அவள் முகம் மாறுதலடைந்து நெஞ்சிலே முள் தைத்துவிட்டாற் போன்ற குறிப்பைக் காட்டியது. அவள் சொல்லியது எனக்குப் பிடிக்கவில்லை என்பதை அவள் கண்டு கொண்டாள். அதற்குமேல் நொடிகூடத் தாழ்த்தாமல் அவள் அகன்றுவிட்டாள். எண்ணச் சுமை அழுத்த யான் உறங்கிவிட்டேன்.

கோயில் மணியொலி என்னை எழுப்பியது. மாலை வழிபாட்டின் முன்னறிவிப்பு அது. பலகணி வழியே வெளியே பார்த்தேன். இள வெயிலில் பசுஞ் செடி கொடிகளும் பொன் வண்ணம் போர்த்துக் கொண்டிருந்தன. பஞ்சுப் பொதியன்ன வெண் முகில்கள் காய் கதிர்ச் செல்வனின் கடைசி முயற்சியால் வகை வகையான வெள்ளிப் படிமங்களாக மாறி ஓடின. பலகணித் தொளைகள் வழியே உள்ளே புகுந்து விளையாடிய இளங் காற்று உடலில் ஓர் இன்பக் குறுகுறுப்பை ஊட்டியது. அக் குறுகுறுப்பின் எதிரொலி உள்ளத்திலும் படிந்தது. பதினைந்து நாட்களாக உள்ளேயே அடைபட்டுக் கிடந்தேன். இந்த ஒரு பொழுதாவது காலார நடந்து கோயில் வரை சென்று வரலாம் என்ற தணிக்க முடியாத ஆவல் எழுந்தது.

''மருந்தைக் குடித்தபின் வெளியே செல்வோம்'' என்று முடிவு செய்தேன்.

''செல்வி! மருந்து கொண்டு வாயேன்!'' என்றேன்.

நொடிக்கு நொடி வெளியே செல்ல வேண்டும் என்ற ஆவல் உள்ளே வளர்ந்தது. கூடவே செல்வி ஏதாவது மறுப்புச் சொல்வாளோ என்ற குமைச்சலும் இருந்தது.

''இம் முறை அவள் ஏதாவது சொல்லட்டும்! சொற்களாலேயே அவளைச் சுட்டுப் பொசுக்க வேண்டும்'' என்ற சீற்றம் பொங்கியது.

''நன்றாகத் தூங்கினீர்களே! எப்பொழுது விழித்துக் கொண்டீர்கள்?'' என்றபடியே செல்வி மருந்து கலக்கிக் கொண்டு வந்தாள்.

''ஆமாம் செல்வி! நல்ல உறக்கம்! களைப்பு தளர்ச்சியெல்லாம் எங்கே போயின வென்று தெரியவில்லை. புதிய வலிவு உடம்பில் பிறந்துள்ளது போன்ற உணர்ச்சி தோன்றுகிறது.''

என்னை ஒரு நொடி நன்றாக உற்றுப் பார்த்த அவள், ''இன்றைக்குத்தான் உங்கள் முகத்தில் பழைய களை திரும்பியுள்ளது'' என்றாள்.

''அப்படியா? இருக்கலாம்! உடம்பில் தெம்பு தோன்றியது போல உள்ளத்திலும் தெளிவு பிறந்துள்ளது எனக்கே தெரிகிறதே!''

''எல்லாம் இறைவன் அருள்!''

''நன்றாக நினைவு படுத்தினாய்! அந்த அருளுக்கு நன்றி சொல்லத்தான் வெளியே போகலாம் என்றிருந்தேன். நீயும் அதையே சொல்லி விட்டாய்!''

''என்ன! வெளியே போகிறீர்களா?''

நாண் தெறித்த அம்புபோல் வந்த கேள்வியில் வியப்பு மட்டும் இல்லை; வெறுப்பும் இழையோடியது.

''ஆமாம் செல்வி! வெளியுலகைக் காணது எத்தனை நாட்கள் உள்ளேயே அடைபட்டுக் கிடப்பது? வெளியே செல்லக் கால்கள் பரபரக்கின்றன. கோயில் வரை காலார நடந்து சென்று வருகிறேன்!''

''இவ்வளவு விரைவாகத் தேறி எழுந்தது பிடிக்கவில்லையா உங்களுக்கு? மறுபடியும் படுத்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது!''

''நீ அஞ்சுவதுபோல் ஒன்றும் நிகழாது செல்வி! போன அளவிலேயே திரும்பி விடுவேன். நீ கவலைப்படாதே!''

''அதெல்லாம் ஒன்றும் வேண்டா! இப்பொழுது நீங்கள் போகக்கூடாது என்றால் போகக்கூடாதுதான்! இரண்டு நாள் போகட்டும்! இன்னும் நன்றாக உடம்பு நலமடைந்த பிறகு போகலாம்!''

இப்பொழுது அவளிடமிருந்து கண்டிப்பான கட்டளையே பிறந்தது. அதுவரை என்னுள் அடங்கிக் கிடந்த சீற்றம் மடையுடைத்து வெள்ளமாய்ப் பொங்கியது.

''நான் போகத்தான் போகிறேன்! உன்னுடைய வேண்டுதலுக்கு-இல்லை இல்லை-உன்னுடைய கட்டளைக்கு நான் ஒன்றும் இணங்கப் போவதில்லை. நானும் இந்தப் பதினைந்து நாட்களாகப் பார்த்துக் கொண்டுதான் வருகிறேன்! உன்னுடைய அறிவுரைகளும் ஆய்வுரைகளும் அளவுக்கு மீறிப் போய்க் கொண்டிருக்கின்றன. நோய்களைப் பொறுத்தமட்டில் என்னைவிட நீ அறிவுள்ளவள் என்று காட்டிக் கொள்ள இஃதொரு வாய்ப்புப் போலும்! இனி மருத்துவர் வருவதுகூட வேண்டா என்று நினைக்கிறேன். இனி நீயே எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்! உனக்குத்தான் எல்லாந்தெரியுமே! இப்படியொரு வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்று எத்தனை நாட்களாகக் காத்திருந்தாயோ தெரியவில்லை!''

நான் உமிழ்ந்த வெம்மை சொற்களோடு நிற்கவில்லை. குரலிலும் நின்றது. செல்வி படிமமாக நின்றாள். உணர்ச்சிகளில் ஒன்றையும் வெளிப்படுத்தாத படிமமாக நின்றாள். நான் ஏற்றிய வெம்மையிலே அந்த மெழுக்குப் படிமம் மெல்ல மெல்லக் கரைவதாகத் தோன்றியது. அப்புறம் அவள் ஒன்றுங் கேட்கவில்லை. வெற்று மருந்துக் குவளையை எடுத்துக்கொண்டு அடுப்படிக்குச் சென்றுவிட்டாள். வீறாப்போடு சொன்னேனே யொழியச் சொன்னபடி நான் வெளியே கிளம்பவில்லை. மீண்டும் படுக்கை

யிலேயே சாய்ந்துவிட்டேன். அரை மணித் துளியளவு கழிந் திருக்கும் சூல் கொண்ட முகில்கள் வானில் சூழ்ந்தன. அன்று முழுதும் காய்ந்த வெயிலுக்கு மாற்றாகச் சில்லென்ற குளிர்காற்று வீசியது.

மழை! மழை! ஆம்! மழை வந்தேவிட்டது! சிறு தூறலாய்த் தொடங்கிய மழை சிறிது நேரத்தில் வானம் பொத்துக் கொண் டதோ என்னுமாறு வெள்ளமாய்ப் பொழிந்தது. வறு மணல் திட்டுகள் காட்சியளித்த தெருவில் வாய்க்கால்கள் ஓடின. வீட்டு முகட்டு வளையிலிருந்து அருவி கொட்டியது.

செல்வி தடுத்திராவிட்டால்—நினைத்த வண்ணமே நான் வெளியே சென்றிருந்தால்—அதன் விளைவு எவ்வளவு கேடாய் முடிந்திருக்கும். ஒண்டுவதற்கு மரம் மட்டைகூட இல்லாத வெட்ட வெளியில் துப்புரவாக நான் நனைய நேர்ந்திருக்குமே! காய்ச்சல் விட்ட உடம்போடு இந்தப் புது மழையில் நனைந்தால் என்ன ஆகும்? என் அகத்தில் பெருமிதம் சுரந்தது.

''எங்கே அவளைக் காணோம்! இந்த மழையில் என்ன செய்து கொண்டிருக்கிறாள்? அவளுக்கு நன்றி சொல்ல வேண்டுமே!''

கண்கள் அவளைத் தேடின. சமையலறையிற் சென்று பார்த்தேன். கருகிய மலர்போல் செல்வி தரையிற் கிடந்தாள் அவளைச் சூழ்ந்திருந்தது மயக்கமா உறக்கமா என்று தெரிய வில்லை. தரையிற்பட்டுக் காய்ந்துபோன கண்ணீர்ச் சுவடுகள் நினைவிழப்பதற்குமுன் வேண்டிய மட்டும் அவள் அழுதிருக் கிறாள் என்பதைக் காட்டின.

சே! எவ்வளவு சிறுமையாக நடந்து கொண்டேன் நான் மூச்சின் வெம்மையால் அனிச்சம் பூவை வாடச் செய்து விட் டேனே!

''செல்வி!'' என்று அவள் நெற்றியிற் கை வைத்தேன்.

கை பட்டதோ இல்லையோ அவள் விழித்துக் கொண்டாள். ஆனால், இதென்ன? விழித்தவள் நான் அருகில் நிற்பதைக் கண்டதும் என் கால்களைப் பற்றிக்கொண்டு தேம்புகிறாளே!

''*நான் தவறு செய்து விட்டேன்! என்னை மன்னித்து விடுங்கள் அத்தான்*''

' செல்வி! என்ன இது! யார் யாரை மன்னிப்பது? நீ ஒன் றும் தவறு செய்யவில்லையே! எனக்கு எவ்வளவு பெரிய ஊறு

நேர இருந்தது. அதை உன் உள்ளுணர்வு கொண்டு தடுத்து நிறுத்திவிட்டாயே! அதற்கு நானல்லவா உனக்கு நன்றி செலுத்த வேண்டும்!'' என்று அவளைத் தூக்கி நிறுத்தினேன்.

என் சொற்கள் அவள் காதில் விழுந்தனவாக எனக்குப் படவில்லை. மீண்டும் அவள் ''நீங்கள் என்ன சொன்னாலும் தவறு செய்தவள் நான்தான்! புதிதாக உங்களுக்குவந்த இந்தக் கடுநோய் என் அறிவைக் கலக்கிவிட்டது. நீங்கள் துன்பப் படுவதைக் கண்டபொழுதெல்லாம் நான் என்ன செய்வதென்று புரியாமல் தவித்தேன். உங்களுக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்ற அச்சம் என்னை வாட்டியது. நான் பேசியதற்கெல்லாம் அந்த அச்சந்தான் காரணம். எப்படியாவது நீங்கள் விரைவில் எழுந்து நடமாடமாட்டீர்களா?'' என்று என் நெஞ்சம் அலை பாய்ந்து தவித்தது. இந்தக் கலக்கத்தில் என்னென்னவோ பேசிவிட்டிருக்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள்! என்னுடைய வாழ்வு 'நலம்' இன்பம் எல்லாம் நீங்கள் தந்தவை! நான் எப்படி உங்களைவிடப் பெரியவள் ஆகமுடியும்?''

''செல்வி! வேண்டா! இதோடு இந்தப் பேச்சை விட்டு விடு! மொத்தத்தில் நாம் இருவருமே தவறு செய்யவில்லை. நீ அச்சத்தின் வயப்பட்டாய்! நான் செருக்கு வயப்பட்டேன்! உடலில் தோன்றிய வலுவின்மையும் உள்ளத்தில் தோன்றிய சோர்வும் என் உள்ளச் செருக்குக்கு நீர் வார்த்தன. அதன் விளைவாக உனது மென்மையைச் சுட்டுவிட்டேன் இனி நாம் புதியவர்கள்! அந்த செருக்கும் அச்சமும் இன்று பெய்த அன்பு மழையிற் கரைந்து ஓடிவிட்டன. இன்றிலிருந்து நாம் துப்புரவு செய்யப்பட்ட தூய இணை! போ! பழையவற்றை மறந்து விடு! போய் மருந்து கொண்டுவா!''

''அடாடா! பார்த்தீர்களா! பேச்சுப் போக்கில் மருந்து கொடுப்பதையே மறந்துவிட்டேன்!'' என்று சொல்லிவிட்டு அவள் ஓடினாள்.

''மருந்து குடித்தபின் என்ன செய்ய வேண்டும் செல்வி!'' என்று வேண்டுமென்றேகேட்டேன். ''ஐயோ! வேண்டா; அந்த விளையாட்டு!''என்று இதழ்க்கடையில் புன்னகை விரிய அவள் ஒதுங்கி நின்றாள். மருந்தைக் குடித்தேன். அருகில் நின்ற அவள் பார்வை என்னை விழுங்கிக் கொண்டிருந்தது.

''செல்வி! இதுகாறும் நாம் கோடை மழையைக் கண்டதில் லையே! இன்று கண்டோம்!'' என்றேன்.

''மழையை மட்டுமா? மழை ஓய்ந்த அமைதியையும் அதிற் பூத்த இன்பத்தையுங் கண்டோம்'' என்றாள் அவள். *

மணியியல். Gemmology.

பவளம்.

பவளம் போலும் சிவந்த இதழ் என்று புலவர்களின் புகழ்ச்சிக்குக் காரணமான பவளம் சிவப்பு மட்டுமன்று; வெண்மை, கறுப்பு, நீலம் முதலிய வண்ணங்களிலும் பவளங்கள் கிடைக்கின்றன. முற்காலத்தில் பவளம் ஒரு கொடி என்று கருதப்பட்டது. 'பவளக்கொடி மாலை' என்ற புகழேந்திப் புலவராற் பாடப் பெற்றதாகக் கருதப்பெறும் ஒருநூலுள் பவளம் கொடிகளிலிருந்து எடுக்கப்படுவதாகவும், அதை எடுப்பது அரிது என்றும் கூறப்படுகின்றது. 'பவள மலை' என்ற சொல் வழக்கிலிருந்தும் பவளம் மலைகளிலிருந்து கிடைப்பதாக மக்கள் கருதி வந்ததாகவும் எண்ண இடமுண்டு. ஆனல் முத்தைப் போல் பவளம் கடலில் இருந்து எடுபடும் ஒருவகை மணியாகும். இவ்விரண்டுமே சுண்ணும்புப் பொருளும் கரிப்பொருளும் சேர்ந்து உருவாகிய மணிகளாகும். பவளம், துப்பு, துகிர் என்பன ஒரு பொருட் பல சொற்களாம். வடமொழியில் இது ப்ரவாளம் என்று பலுக்கப்பெறும். தமிழம் என்பதை வடநூலார் த்ரமிளம் என்று பலுக்கியதும் இதைப் போன்றதே!

பண்டையிலிந்தே பவளம் நம்நாட்டின் இறக்குமதிப் பொருளாக இருந்து வந்திருக்கின்றது. இன்றும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ இருபது இலக்கம் உருபாவுக்கும் மேலான மதிப்புள்ள பவளங்கள் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப் பெறுகின்றன. மார்சேல்சு, செனேவா முதலிய இடங்களில் இத் தொழிலில் சிறந்தார் பலர் இருக்கின்றனர். உரோமர் பவளத்தைக் குழந்தைகளின் கழுத்தில் அணிந்து வந்தனர். அவர்களுக்கு வரும் குழந்தை நோய்கள் இதனல் அகலும் என்று கருதினர். மலட்டுத்தன்மை பவளத்தால் நீங்கும் என்று இத்தாலியப் பெண்டிர் இதனை மிகவும் விரும்பி அணிகின்றனர். சீனர் பவளங்களில் பலவகையான பொருத்தான் (Buttons)களைச் செய்கின்றனர். ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் பவளத்தாலாகிய மாலை, மணிகளை மக்கள் விரும்பி அணிகின்றனர். 'இந்தியர்க்கு முன்பே பவளங்களைப் பற்றி மேனாட்டினர் அறிந்திருந்தனர்' என்று பிளினி என்னும் நாடுகாணி கூறுவர்.

தமிழக இலக்கியங்களில் முத்தைப்போல் பவளமும் பல்கி வரக் காண்கின்றோம். பவளம் அணியும் பெண்கள் மக்கட்பேறு பெற்றுச் சிறந்துவாழ்வர் என்றும்,முருக்கம் பூ, பசுங்கிளிமூக்கு,

செவ்வரத்தம்பூ, கோவைக்கனி, முதலிய நிறங்களில் பவளங்கள் கிடைக்கின்றன என்றும், புழு அரித்தல், முகம் முறிதல், திருகல் முதலிய குற்றங்கள் உடைய பவளங்கள் சிறந்தன வாகா என்றும் திருவிளையாடல் புராணம் கூறும். 'செங்கொடி வல்லி' என்று பவளத்தைச் சிலப்பதிகாரம் குறிக்கும். காய்ச்ச லால் உடலில் ஏற்பட்ட நச்சுகளையும், நெஞ்சில் கட்டும் கோழையையும், இழுப்புக் காய்ச்சல், விறைப்புக் காய்ச்சல், என்புருக்கி, நாடித்தளர்வு, நாவறட்சி முதலியவற்றையும் பவளம் போக்கும் என்றும், பவளப் பொடியை உண்டு வர உடல் நல் ஒளிபெற்றுச் சுடர்விடும் என்றும் 'பதார்த்த குண சிந்தாமணி' எனும் நூல் கூறும். பவளங்கள் என்பவை ஒரு வகைப் புழுக்களால் உண்டாக்கப் பெறும் கூடுகளே ஆகும். பாலிகோவா (Polyzok), மொலுசுகா (Mollusca) என்ற வகை களைப் போன்ற நீர்வாழ் உயிரிகளின் எலும்புக் கூடுகளால் பவளப்பாதைகள் உண்டாகின்றன. பவளப் புழுவின் உடல் குழாய்போல் நீண்டு கொண்டே போகின்றது. உடலின் அடிப் பகுதி அகன்று தட்டையாகவும் மேற்பகுதி உருண்டையாக வளைந்தும் இருக்கும். அதன் மேற்பகுதியில் வாய்போன்று ஒரு திறப்பு உண்டு. அந்தத் திறப்பைச் சுற்றிலும் மெல்லிய தோற் பைகள் இருக்கும். அப்பைகளே அப் பூச்சிகளுக்கு வாயாகப் பயன்படுகின்றன. இவ் வாய் வழியாக உண்ட உணவுப் பொருள்கள் வயிற்றுள் குழைக்கப் பெற்று மீண்டும் இவ்வாய் வழியாகவே வெளிவருகின்றன. பவளப் புழுவின் வயிறு பல மென்தோல் அடுக்குகளைக் கொண்டது. வயிற்றின் தசைச் சுவர் களில் இரண்டு அடுக்குகள் உள்ளன. இவற்றுக்கிடையில்தாம் பவளங்கள் உண்டாவதற்கேற்ற ஒருவகைப் பசைப் பொருள் சுரக்கின்றது. சிலவகைப் புழுக்களுக்கு உடலின்மேல் சிறு சிறு காய்களைப் போன்ற பிசிர்கள் உள்ளன. இந்தக் காய்களிலிருந் தும் பவளப் பிசின் சுரக்கின்றது. பவளப் புழு ஒரு விரற்கடை நீளம் முதல் இரண்டடி நீளம் வரையில் இருக்கும்.

மிகுதியான வெப்பங்கள் சூழ்ந்த கடற் பகுதிகளிலேயே பவளப் புழுக்கள் வாழ்கின்றன. பெரும்பாலும் கடலில் ஆழ மில்லாத பகுதிகளில் இப் புழுக்கள் வாழ்வதில்லை. தாம் வாழ்வ தற்கென்று இப் புழுக்கள் கட்டிக் கொள்ளும் கூடுகளே பவள மாகும். கறையான்கள் ஒன்று சேர்ந்து புற்றுகளை அமைப்பது போல், பல பவளப் புழுக்கள் ஒரே இடத்தில் சேர்ந்து அடை போல் திட்டுகளை அமைக்கும். இத் திட்டுகள் நாளடைவில் இறுகிப் பாறைகளாகி பெரிய பெரிய நிலப்பகுதிகள் போல் கடல் நீர் மட்டத்திற்குச் சில அடிகள் கீழாக இருக்குமாறு வளர்ந்து நிற்கும். இப்பவளத் திட்டுகளின்மேல் செடி கொடிகள் பல படர்ந்து அவற்றை மேலும்கெட்டிப் படுத்துகின்றன. பவளப் பாறைகள் மூன்று வகையாக அமைவதுண்டு. வட்ட வடிவமாக

வும், நீண்ட தொடராகவும், சங்கிலி போன்று விட்டு விட்டுத் தொடர்ந்ததாகவும் இவை அமைகின்றன. கடல் ஓரங்களில் கரையை ஒட்டியவாறே கரைப்பக்கத்தில் சாய்வை உடைய வாகத் தொடர் பாறைகள் அமைந்திருக்கும். பல நிலத்திட்டு களைச் சுற்றியும் இவை அமைவதுண்டு. பவளப் பாறைகள் மிகுந்து விளங்குகின்ற ஆத்திரேலியாவின் கரையை ஒட்டிய வாறே ஏறத்தாழ 1250 கற்கள் நீளமுள்ள பவளத்தொடர் பாறைகள் அமைந்துள்ளன. இம்மூவகைப் பாறைகளில் வட்டப் பாறைகளே மிகவும் அழகுவாய்ந்தவை. இடையில் வெளியுள்ள அமைதியான நீர்ப்பரப்பும் அதைச்சுற்றிலும் வளையம் போலும் அமைந்த பாறைகளே வட்டப் பாறைகளாம். இவ் வளையங்கள் ஒருகல் முதல் நாற்பது ஐம்பது கற்கள் வரை விட்டங்கள் உடையன வாயிருக்கும். இந்தியப் பெருங் கடலிலுள்ள சாகசு என்ற வட்டப்பாறை 65 முதல் 95 கற்கள் வரை விட்டத்தை உடையதாக விருக்கின்றது. தொலைவிலிருந்து பார்ப் போர்க்கு இப்பாறைகள் மஞ்சள், செம்மஞ்சள், பச்சை, இளஞ் சிவப்பு, சாம்பல் முதலிய வண்ணங்களில் காட்சியளிக்கும். ஆத்திரேலியாக் கடற்கடையில் உள்ள பவளத் தொடரே உலகத்திலேயே நீண்ட தொடர். இதனைப் 'பகற் கனவுத்திட்டு' என்று வழங்குகின்றனர். இப்பவளத்தொடர் பாறைகளைப் பார்ப் பதற்கென்ற கண்ணடிப் படகுகளை அங்கு அமைத்திருக்கின் றனர். கப்பல்களில் இருந்து கொண்டே பாறைகளின் அடிப் புறத்தைப் பார்க்கலாம். அத்திட்டுகளில் மக்களும் வாழ்கின்ற னர் அவர்கள் பல வண்ணப் பவளங்களைக் கொண்டே வீடு களை மிகவும் அழகுபட அமைத்திருக்கின்றனர்.

பவளங்களில் எல்லா வகைப் பவளங்களும் சிறந்தவை என்று கொள்ளல்முடியாது. திட்டுகளில் வெட்டி யெடுக்கப்படும் பவளங்களை விடத் தனித் தனியாக உலவும் புழுக்களினால் உண்டாக்கப்பெறும் பவளங்களே விலை மிகுந்தவை இந்தியா வின் மேற்கிலுள்ள இலக்கத்திட்டுகள், மாலாத் திட்டுகளைச் சுற்றிலும், பாம்பன் இராமேசுவரம் முதலியவற்றிற்கு அண்மை யிலும், பசிபிக் பெருங்கடலில் உள்ள திட்டுகளைச் சுற்றிலும், ஆத்திரேலியாவின் வடகிழக்குப் பகுதிகளிலும் பவளங்கள் கிடைக்கின்றன. நடுத் தரைக்கடல் நாடுகளாகிய துனீசியா, அல்சீரியா, மொராக்கோ ஆகிய விடங்களில் விளையும் சிவந்த பவளங்கள் சிறப்பானவை. அண்மைக் காலத்தில் அயர்லாந் திலும், சப்பானிலும் பவளங்கள் கிடைக்கின்றன. கிழக்கிந்தியத் திட்டுகளிலும், சிங்களத்திலும், ஆப்பிரிக்காவின் கீழ்க் கரையில் உள்ள மடகாசுகர் அருகிலும் பவளத் திட்டுகள் நிலையாக இருந்து வருகின்றன செந்நிறப் பவளங்கள் நேபிள்சுக்கு அருகிலும், கார்சிகா, சார்டினியா, கடலோனியா, பிராவன்சு ஆகியவற்றின் கடற்கரைகளிலும் கிடைக்கின்றன. பாரசீக

மேகலை

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு வணக்கம். புரட்டாசித் திங்கள் தென்மொழி கண்ணுற்றேன்.

ஆசிரிய உரையில் ஐம்பதினாயிரம் கையொப்பங்களே விடுக்கப் பெற்றுளவென அறிந்து மகிழ்ச்சியைவிட அதிர்ச்சியும் வியப்பும், கவற்சியும் கொதிப்புமே மிகையப் பெற்றேன். தமிழ் தமிழ் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் தமிழர் எத்தனைப் பெயரினர் இவ்வரும் பெரும் முயற்சியினில் பங்கேற்று எத்துணை அளவில் ஊக்கம் மேற்கொண்டனர்? ஊக்கினர்? இப்பெருமாநிலத்தில் இந்தியை எதிர்த்துக் குரலெழுப்பும் முயற்சியின் தலைப்பட்டார் ஆயிரவரேனும் இலராயினரோ? அவ்வாயிரவர் ஆளுக்கொரு நூற்றுவரையேனும் அணுகி இருந்திருப்பரேல் குறைந்த அளவில் நூறாயிரமேனும் விடுக்கப் பெற்றிருக்க வேண்டும் அன்றோ? இன்றுகாறும் தென்மொழியில், பாட்டும், கதையும் கட்டுரையும் எழுதி எழுதிப் பாயும் புலிகள்போலப் பதை பதைத்துக் கொதித்தழன்ற பைந்தமிழ்ப் பாவலரும் எழுத்தாளரும் நூறு பெயரினரேனும் இலராயினரோ? இன்னார் ஆயிரவரையேனும் அணுகிக் கையொப்பம் பெற்றிலரேல் அவர் தமக்கு அளப்பரிய மொழிப்பற்றும் ஆர்வமும் கொதிப்பும் வாயளவான் இருந்தென்னை? இந்நூற்றுவர் தம் சிறு சிறு முயற்சியாலும் பின்னுமொரு நூறாயிரம் விடுக்கப் பெற்றிருத்தல் வேண்டுமேயன்றோ? இவரெல்லாரும் தம் தம் மனையில் தாய் தந்தை தமையர் தமக்கையர்கட்டே கையொப்பம் பெற்று விடுத்தனரோ? அவ்வுறவினரும் சினந்து உருமினார்முன் ஒடுங்கினார் போலும்! இங்கிருக்கும் தமிழ் மங்குமெனப்

வளை குடாவில் கரும் பவளங்கள் கிடைக்கின்றன. இது மேலும் ஆத்திரேலியாவைச் சேர்ந்த பேரியர் ரீப்சில் கிடைக்கின்றது.

பவளங்கள் அணிமணிகளாகவும் நோய் நீக்கும் மருந்துகளாகவும் பயன்படுகின்றன. பவளத்தைப் பொடியாக்கிப் பல வகையான நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். இப்பொடியைத் திப்பிலி, தேன் ஆகியவற்றோடு கலந்து உண்டால் மூச்சுத்தட்டு, செரிமக்காய்ச்சல், வளிக்கோட்டம், விக்கல் முதலிய நோய்கள் நீங்கும் என்றும், சர்க்கரை, ஆநெய் இவற்றுடன் சேர்த்து உண்டுவரின் என்புருக்கி நோய் விலகும் என்றும், தேன், சருக்கரை, துளசிச்சாறு இவற்றுடன் கலந்து உண்ணின் உறுப்பு முடக்கு நோய் நீங்கும் என்றும் தமிழ் மருத்துவ நூல்கள் கூறுகின்றன.

பொங்கி மலேயாத் தமிழர் சீறினராய் விடுத்த குரலும் ஐம்பதினாயிரத்துள் அடங்குமேல் இங்குளராயினோர் பட்டும் விடுத்ததின் எண்ணிக்கை அதிற் பாதியோ? சற்று மிகையுமாம் போலும்!

இருதிங்கட்கு முன்பே, தென்மொழியில் வேண்டுகோள் விடப்பெற்ற அந்நாள்தொட்டே, முயற்சியுட் பட்டு நாளொரு மேனியாய்ப் பதுங்கிப் பதுங்கிப் பதின்மரையேனும் அணுகி இருப்பரேல், தென்மொழி வழி மொழிப்பற்றும் இந்தி எதிர்ப்புக் குரலும் ஊட்டினரும் ஊட்டப் பெற்றருமாய்ப் பன்னூற்றுவர் முயற்சியினால் இறுதியில் பன்னூறாயிரமேனும் எதிர்ப்புக்குரலாக விடுக்கப் பெற்றிருத்தலே வேண்டும். எனில் இவை நடைபெறுமை என்னுள் கவற்சியும் அழற்சியும் தரும் தன்மைத்தாயுள் நிற்க, இங்ஙனம் அளப்பரும் ஆழ்கனவில் துயின்ற யான் மேற்கொண்ட முயற்சியும் கூறுவன். இருபத்துநான்கு மணிநேரமும், மூவேளையும் மாறி மாறி வரும் பணியும் செய்து ஓய்விலாப் பிற பணிகளையும் செய்து, இந்தி எதிர்ப்புக் குரலுக்குக் கைகொடுக்கும் ஆர்வத்தின் தென்மொழியிற் கண்ட அன்றே தொடங்கினேன். இச்சென்னையில் யான் தனித்திருந்தேனாகையில் யானே சமைத்துண்ணும் பணிமேற்கொண்டதும் ஒன்று. இத்துடன் உடல் நலமின்றிக் கிடந்து நலிந்திருந்ததும் ஒன்றும். இருநூற்றுக்கும் மேற்றுப் பொருளீட்டும் அந்நிலையினின்று நீக்கப்படின் என்னையே உயிராகக்கொண்டு வறியநிலையில் வாழ்ந்து வரும் குடும்பமே மாயும் என்பது யான் உணர்ந்த ஒரு தோற்றமே யாகும். அவ்வாறு ஆகிடும் ஞான்று ஏதிலார்போல வீதியில் நிற்கவே பேதைமை முயற்சியில் ஈடுபட்டேனென்று அணித்தாயினோர் தம்மால் எள்ளப்பட்டேனும் ஆயினேன். இவ்வாறு கொண்ட முயற்சி சரியென்றோ பிழையென்றோ நீவிரும் சொல்வீராயினும் ஆகுக; எனினும் என்னுள் கொண்ட ஆர்வமும் இந்தி மீது கொண்ட கொதிப்புமே என் இத்தகு செயற்குக் காரணியங்களாம்.

வீதியிலும் பாதையிலும் போவோர் வருவோரை வழிமறித்து நிறுத்தி விளக்கம் செய்தேன். கற்றோருள் (பணிசெய்வாருள்) பலர் துணிந்தனர் மற்றோரும் அங்ஙனமே எனினும் முனிந்தவரும் பலர். போக்கிலிகளால் புடையப்பெறுவை என்று வாழ்த்தவும் பட்டேன். ஓய்வு நேரங்களில் கடற்கரைக்கும் பிறவிடங்கட்கும் குழுமிய இடத்து நின்று இந்தி எதிர்ப்புக் குரலெழுப்பித் "தென்மொழி" ஏறுநடை போடுவதையும், களிறு போல் பிளிறுவதையும் எடுத்துரைத்து அம்முயற்சிக்குத் துணையளிக்க வாரீர் என்று ஓலமிட்டும் அணுகியும், பரப்பிடத்து நின்றும் பல தாள்களையும் இருகையிலும் மாற்றி மாற்றிப் பாங்குடன் தாங்கி அவர்தம் கையொப்பங்கள் பெற்றேன். இம்முயற்சியை எதிர்த்தாரையும், துணைசெயத் தயங்கி மயங்கினோரையும் இடித்துச் சாடினேன். என் சீற்றம் கண்டு தணிவித்தவர் சிலர்; என் முயற்சிகண்டு வெகுவாகப் பாராட்டியவர் சிலர். அறிவிலிகள் ஒரு சிலர்க்கு விளக்குவான் வேண்டியும் ஒரு கையொப்பம் பெறவேண்டியும் ஒவ்வொருவர் கண்ணும் அரைமணிநேரம் வீணாக்கிய மடையனும் யானே யாவேன்.

'யான் கல்லூரி மாணவன்; இன்னும் கலவலாகா' என்று பல்லிளித்தவரும், 'யான் இந்தியையே படிக்கின்றேன் எனின் எதிர்ப்பது நன்றன்று'

என்று நடுங்குவாரும், 'யான் பணியகத்தோன்' எனப் பதுங்குவாரும் முணகுவாரும் 'எமக்கு ஏனிந்த வம்பெல்லாம்' என்று ஒதுங்குவாரும், 'இதனால் ஆவது யாதா'மென விளவுவாரும் என்னால் நையவும், நேருக்கு நேர் வையப்பெற்றார் எனினும் நாணத்தாற் கூனினர் இல்லை. என்னோடு சிறிது காலம் நட்புற்றிருந்த ஒரு மகன் எம். ஏ. தேர்ந்த தமிழ் மகனே ஆகவும், கையொப்பம் இடுகெனக் கேட்கப்பட்ட பொழுது இம் முயற்சி என் பயக்கும் என்று எள்ளினார்போல் நடை போடவும் வெகுள்வதன்றி, நட்பறுத்தலன்றி, வேறென் செய்தற்காகும் என்னால்? இம்மட்டோ?

வேறொரு கரணியமாய் வெளியூர் போந்த அவ்வமயமும் வாளா விருந்திலேன்; ஆண்டும் வீதி வீதி சென்றேன். பாதையில் நின்றேன். போவார் வருவாரைத் தடுத்தேன். மிதிவண்டிகளில் போயினரையும் மறித்தேன். இரண்டு நாட்கள் இடைவிடாது பிசு பிசுத்த மழையிலும் கடைகளிற் குந்தி வாணிகம் செய்யும் அனைவரிடத்தும் கையொப்பங் கள் பெற்றேன். நூலகங்கட்குச் சென்றேன். சென்ற விடத்தெல்லாம் தென்மொழியின் இந்தி எதிர்ப்புக் குரலை எடுத்து விளக்கினேன். தனித் தமிழ் ஆர்வத்தை மாணுக்கரிடையே துளிர்விக்க முனைந்தேன். இவ்விடையரு முயற்சிகளால் எய்திய இன்னல்கள் பல. சொற்போர்க் கழைத்தவர் சிலர். மற்போர்க்கு எதிர்ந்தவர் சிலர். பேதை ஒருவன் பண்பிலாச் சொற்களால் என்னை வைததோடு போர் புரியுமாற்றின் சினந்து துணிந்தனன். இவன் எருமைபோலும் உருவத்தினன். யானோ அற்றன்றே; எறும்புபோலும் தோற்றத்தினன். எனினும் அஞ்சாது சாடினேன். அடிபடாது மீண்டேன். அவனுக்கும் ஒரு 'சங்க'முண்டாம். அச் 'சங்கத்' தலைவரிடம் இந்தியை எதிர்க்கும் நெறி ஒன்று 'சங்கத்'துள் உளதாஎன்று கேட்டறிந்த பின்னரே கையொப்பம் இடுவன் என்றனன் என் சினத்துக்குச் சொல்லவும் வேண்டுமோ? 'நீ ஒரு குழந்தையா? என்றேன் உங்கள் 'சங்கம்' தெளிவில்லாத மடயர் 'சங்கமா?', என்றேன். 'சங்கத்'தின், முழு நெறிகளையும் இத்தனை நாள்காறும் அறிகிலையா என்றே வினவினேன். ஆனைபோலும் இன்னொரு வனை அணுகினேன். அவன் பொதுஉடைமைக் கட்சித்தலைவருள் ஒருவன் எனப் பின்னரே அறிந்தேன். அவன் நீண்ட வினு விடை கட்குப் பிறகும், ''மணிக்கணக்கில் சொற்போர் புரிய அணியமா'' என்று வினவினன். 'மானம் கெட்டவரோடு பேசும் மனம் பெற்றில லேன்' என்று அகன்றேன். அவன் சீற்றத்துக்குச் செப்பலும் வேண் டுமோ? ஒரே அறை கொடுத்திருப்பானாயினும் இளம்பிள்ளை போலும் என் ஒடுங்கிய உடல் பதைத்திருக்குமே! இவ்வாறு பட்ட இடர் பல ஆசிரியர் ஒருவர், தமிழ் ஆர்வமுள்ளவராம்! இந்தியை வன்மையாக எதிர்ப்பவராம்! அவரை வீதியிலே நிறுத்திக் கையொப்பம் இடுக என்ற விடத்து, அரசு இட்டுள்ள அச்சுறுத்தும் கட்டளைகளை எனக்குரைத்தார். கையொப்பம் இட்டால் யாரேனும் பார்த்துவிடுவாராம். அத் தமிழ் ஆசிரியர் என் சுடுசொற்களால் தலை கவிழ்ந்து போயினர்! இத்தகு முயற்சி கொண்டும் யான் பெற்ற கையொப்பங்கள் மூவாயிரத்து நானூ றென்னும் சிற்றெண்ணிக்கையினதே என எண்ணுங்கால் நாணு கின்றேன். இச் சிற்றெண்ணிக்கையின் கணக்குப்படி நோக்கின் ஐம்பதினாயிரம் கையொப்பங்கள் பெறுவான்வேண்டிப் பதினைந்துபெயரி னரே முயற்சியுள்பட்டாராகவும் அப்பதினைவர் உழைப்பே பெறப்படும். இத்தனைப் பெயரினரா முத்தமிழ் காக்க இத் தமிழ் நாட்டில்! வியப்பாக

இருக்கிறது. வருத்தமாகவும் இருக்கிறது. எழுநூறிலக்கம் தமிழர்களுள் அரையிலக்கம் கையொப்பமே பெறமுடியும் எனில், ஏறத்தாழ 35 இலக்கம் மக்களின் ஒப்போலையைப் பெற்று, எதிர்க்கட்சியினராய் விளங்கும் தி. மு. கவினர் இந்தியை எதிர்த்துச் சிறை சென்றவாறிருந்தும் அசைந்து கொடாத ஆணவ அரசு, எங்ஙனம் இதன்கண் கருத்துச் செலுத்தி அஞ்சும்? அச்சுறுத்தம் போதுமென்பது திண்ணமாயின் அதைக் காட்டினும் பத்துப் பதினைந்தே பெயரினர் கூடிக் குருதிக் குறியிட்டு உயிரைப் பணயமாக்கி அரசுக்கு ஓலை விட்டிருக்கலாமே!

இவ்வனைத்தும் யான் கூற முற்பட்டமைக்குக் கரணியம் என் முயற்சியின் பெருமை அளத்தற்கன்று. இச் சிற்றளவு முயற்சியேனும், இந்தியை எதிர்த்துப் பாட்டெழுதும் இளைஞர்கள் தாமேனும் ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்டற்கே. வெறும் பாட்டில்மட்டும் வீறுர்ப்புக் காட்டுவதுதான் தமிழ் காக்கும் முனைப்பா? இந்தியை எதிர்க்கும் நினைப்பா? நாட்டுக்குப் பாட்டெழுதி நடுவீட்டில் குதிருக்குள் மறம் பேசுவதே இன்றையத் தமிழன் நிலையா? இவை கிடக்க. உலக நாடுகளின் ஒன்றிப்புக் கழகத்திற்கும் மடல் விடுக்கத் துணிந்த தென்மொழியின் முடிவு என்னுள்ளத்தாற் பெரிதும் வரவேற்கப்படுகின்றது. யான் கொண்ட வருத்தத்தையும் களைவதாய பெருமகிழ்வினை அளிக்கின்றது. இதன் பொருட்டும் ஆசிரியரையும் அவர்தம் ஆசிரிய உரையையும் போற்றி வணங்குகின்றேன்.

வாழ்க செந்தமிழ்! வீழ்க இந்தி மொழி!

தங்கள் அன்புள்ள,

மு. மகிழரசன், சென்னை -34.

ஐயா,

சென்ற திங்கள் 'தென்மொழி' முன்னுரையின் வழி ஐம்பதினாயிரம் கையொப்பங்கள், நடுநிலைமையாளர்களின் சார்பாகக் கிடைத்தமை குறித்து அறிவித்திருந்ததைக் கண்டோம். ஆனால், உண்மையாக, உறுதியாக எங்களால் அறுதியிட்டுக் கூறமுடியும், அக் கையொப்பங்கள் மிகக் குறைந்த அளவினவே என்பதை! 'தென்மொழி' என்றவொரு தனித் தமிழ் இலக்கிய ஏட்டையோ, அதன் தரத்தையோ இன்னும் உணர இயலாத 'உண்மைத் தமிழர்கள்' இலையிடைக் காயாகப் பரவிக் கிடக்கின்றனர். அந்தோ, அவர்களுக்காக நாம் வருந்துவதையன்றி வேறு வழியில்லை. வாய்ப்பின்மையாலும், நலக் குறைவு போன்ற பிற துன்பங்களினாலும், உரிய பொழுதில் கையொப்பப் படிகளை அனுப்பவியலாது தவறிவிட்டனர் பலர். இவ்வாறு பல துறைகளில் நோக்குங்கால், அந்த ஐம்பதினாயிரம் கையொப்பங்களும், பெருவெள்ளத்தின் சிறு துளிகளே என்பதைச் சொல்லித் தெரிய வேண்டுவதில்லை. இக் கூற்று யாவற்றையும் ஆளுவோரும், அன்னாரின் சார்பிலே பின்பாட்டுப் பாடுவோரும் உய்த்துணர்ந்து, இந்திக்கு உள்ள பேரெதிர்ப்பையும், தாய்மொழிப்பற்றின் உணர்ச்சியாற்றலையும் அறிந்து ஆவன செய்வாராக.

தங்கள் அன்புள்ள,

ஆ. இராமகிருட்டிணன், நூ. பாரூக், திருநெல்வேலி.

திரைப்படக் கண்ணோட்டம்:

பூம்புகார்.

கற்றவர் ஒருசிலராலும், கட்சித் தலைவர் ஓரிருவராலும் பலபடப் பாராட்டிப் பேசப்பட்டதால் திரு கருணாநிதி அவர்களின் 'பூம்புகா'ரைப் பார்க்க நேர்ந்தது. பெரும்பாலும் இக்கால் நூல்களுக்கு எழுதப்பெறும் அணிந்துரைகள் போலும், நூல் விற்பனைக்கு அடிப்படையான வெளியீட்டு விழாப் போலும், திரைப் படங்களை வெளியிடுங்காலும் தலைவர்கள் சிலரையும் கற்றவர் ஒருசிலரையும் தருவித்துப் பாராட்டச் செய்வது வழக்கமாகி விட்டது. இனி இது மரபாகி விடவும் கூடும். தம்மை அழைத்த காரணம் பற்றியே அத் தலைவர்களும் கற்றவர்களும், அணிந்துரை யாசிரியர்கள் தாம் அணிந்துரைக்கும் நூற்களைப் படியாமலேயே, படித்தாலும் குற்றங் குறைகள் மலிந்திருப்பினும் கடியாமலேயே, தம்மையும் மதித்து அணிந்துரைக்கத் தந்தவர்களின் மனம் புண்படாவண்ணம் துணிந்துரைக்கும் பொய்யுரை போலியுரைகள் போல், தமக்கெனத் திரையிட்டுக் காட்டப் பெற்ற திரைப் படங்களைப் பற்றித் தாம் தாம் கண்ட அளவில் தமக்குத் தெரிந்த சொற்களில் வானளாவப் புகழ்ந்து விட்டுப் போகின்றனர். அப்புகழ்ச்சி அப் படங்களுக்கு விளம்பரமாகப் பயன்படுமே யன்றி அவற்றிற்கு உண்மையான மதிப்புரையாக ஆகிவிடாது. புளிக்கின்ற கொடி முந்திரிப் பழத்தைக் கூட வாணிகன் 'சருக்கரைப் போல் இனிக்கும் பழம்' என்று ஏமாற்றி விலை போக்குவதைப் போன்றிருக்கின்றது இவர் செய்கை. இப்போலிப் புகழுரை செய்வார் தம்மாலேயே தமிழும் கெட்டது; தமிழனும் கெட்டான்; தமிழகமும் வடவராட்சியில் சிக்கித் தன் பழம் பெருமையும் பண்பாடும் குன்றிக் கிடக்கின்றது இத்தகையார்க்குப் பேராயக் கட்சிக்காரர்களே சான்று. உண்மையாக மக்கள் தொண்டு செய்ய விரும்புவார் இனி இத்தகைய முகமன் கூறுவாரை நம்பி ஏமாந்து போக வேண்டா என்று வேண்டிக் கொள்கின்றோம்.

பூம்புகார் என்ற திரைக்கதைக்குச் சிலப்பதிகாரமே அடிப்படைச் சான்று என்று திரு. மு. கருணாநிதி அவர்களே திரையில் தோன்றி முன்னுரைக்கின்ற பகுதி புதுமையாகவும் வரவேற்றற்குரியதாகவும் உள்ளது. இருப்பினும் கதையளவில் இளங்கோ வடிகளின் சிலப்பதிகாரக் கதை வேறு; கருணாநிதியின் 'பூம்புகார்' கதை வேறு. சிலப்பதிகாரத்துள் சில கற்பனைகளும் இயற்கைக்குப் பொருந்துமாறு சில நிகழ்ச்சிகளும் நுழைக்கப் பட்டதாக உரையாடலாசிரியரே கூறுகின்றார். சிலம்புகள் கோவலனால் கண்ணகிக்கு அணிவிக்கப் பெற்றன என்பதும்,

மாதவியின் மாலையை வாங்க முதியோன் ஒருவன் முன்வர, அது பொருது கோவலன் அதை வாங்கி அவளை விரும்பினானெனினும் வில்லை என்பதும், கண்ணகியே கோவலனை மாதவி வீட்டுக் கனுப்புவதாகக்காட்டப் பெறுவதும், மாதவி மணிமேகலையை மாசாத்துவானிடமும் அவன் மனைவியிடமும் ஒப்படைத்து விட்டுத் துறவு பூணுவதாக அமைத்திருப்பதும், கோவலன் ஒரு நாளிரவில் கண்ணகியின் வீட்டுக்கு வந்து வறிதே திரும்பிப் போவதாக இருப்பதும், சிலம்பை அரசனின் மெய்க்காப் பாளனே திருடுவதாகக் காட்டுவதும் பிறசிலவும் கருணாநிதியின் 'பூம்புகார்'- கற்பனைகள்! கண்ணகியிடமிருந்து பெற்ற நகைமூட்டை, பிடாரனின் பாம்புப் பெட்டியோடு மாறுண்டு போதலால் பாம்புகள் வெளிப்படுதலும், கையில் தனிச் சிலம் போடு வழக்குரைக்கப் போகும் கண்ணகி மாளிகை முற்றங்களிலும், மலை முடுக்கங்களிலும், வெற்று வெளியிடங்களிலும் ''என் கணவன் கள்வனா? இல்லை; இல்லை'' என்று உரக்கக்கூறும் எதிரொலியே நாற்புறங்களினின்று வரும் வான்மொழியாகக் கேட்கப்பெறுவதும், நெடுஞ்செழியன் தன் கைச் செங்கோலைத் தானே எறிவதும், மணி முடியைக் கழற்றி வீசுவதும், தன் வெண் கொற்றக் குடையைத் தானே வெட்டி வீழ்த்துவதும், கண்ணகி எரி யேந்து கைப்பாவை யிடத்துள்ள எரியை வாங்கி மதுரையை எரியூட்டச் செய்வதும் கருணாநிதியின் அறிவியல் சான்ற புரட்சிக் கருத்துகளாம். ஆனால் இக் கற்பனையின் தேவையையும், புரட்சிக் கருத்துகளின் நுழைப்பையும் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கண்ணகியின் கற்புத்திறம் சான்ற இறை மணம் கமழும் சிலப்பதிகாரக் கதையைப் பகுத்தறிவு மணம் கமழும் பூம்புகாராக மாற்றியிருப்பது வரவேற்றற்குரியதுதானா? நம்மைப் பொறுத்த மட்டில் இது தேவையில்லை என்றே சொல்லுவோம். தமிழர் பெருமைக்கு அணிகலனாக விளங்கும் சிலப்பதிகாரத்திற்கும் அதனை முத்தமிழ் நயங் கமழ நமக்களித்த அடிகளார்க்கும் சிறப்பளிப்பான் வேண்டி, அடிகளையும், சாத்தனாரையும்கூட நமக்குக் காட்டிக் கதையைத் தொடங்கும் உரையாடலாசிரியர், அவர்தம் கதையமைப்புகளை மட்டும் மாற்றுவானேன்? இப் புதுமையால் பெற்ற நலனோ அறிவோ யாது? நடைமுறைக்கு மாறான செய்திகளை நடைமுறைக்கும், பகுத்தறிவுக்கும் ஏற்றதாகச் செய்வதால் தவறு ஒன்றுமில்லையெனின், அதற்குச் சிலப் பதிகாரக் கதையைப் போய் எடுத்துக் கொள்வானேன்? அவ் வாறான பிறகதைகளை ஆக்கிக்கொள்ளலாமே? நடைமுறைக்கும் பகுத்தறிவுக்கும் மாறுபாடுடைய கருத்துகள் அச் சிலப்பதிகாரத் தில் இருப்பதாகக்கருதினால், அச் சிலப்பதிகாரத்தையும் அதனைத் தமிழர் நலங்கருதி யாத்துத்தந்த இளங்கோவடிகளையும் நாம் இன்னும் போற்றிப் பாராட்டிக் கொண்டிருப்பதால் என்னபயன்?

உண்மையாகவோ அன்றிப் பொய்யாகவோ எழுதப்பட்ட இறைநெறிப் பழங் கதைகளை நம் காலத்திற் குகந்தாற்போல் நாம் மாற்றிக்கொண்டு போவதால் அக் கதைகள்தாம், தாம் ஏற்படுத்தப் பெற்ற நோக்கங்கள் குன்றிச் சிறப்பிற் குறையுமே யன்றி, நமக்கவற்றால் ஏற்பட்ட பயன் யாதாக இருக்கும்? கண்ணகியின் தெய்வத்தன்மை பொருந்திய கற்புத் திறம் இன்று தள்ளப்பெற்றுப், பகுத்தறிவுக்கு ஒத்ததாகக் கருதப் பெறும் கற்புத் திறம் ஒன்று மட்டுமே இக்கால் கொள்ளப்படுவதாக இருக்குமானால், அக் கற்புத்திறமும் ஒரு கால் எள்ளப்பெற்று எதிர் காலத்தில் தள்ளப்படுவதாகவும் அமையலாம். இவற்றால் மாந்தனின் மனம் ஒவ்வொரு தலைமுறையினும் ஒவ்வொரு படி தாழ்ந்து போதலன்றி உயர்ந்து சிறவாமற் போகும் என்பதைப் பண்டை இறைநெறிக் கதைகளைப் புதுக்கி எழுதும் புதுமை நோக்கினர் அறிந்து கொள்வாராக. [கருத்து வேறுபடின் அவற்றைக் கருதாமையே சிறந்தது] இம் முறை, கடவுட்படிமங் களைத் தேரில்வைத்து மாந்தர் சிலர் தெருத்தெருவாய் இழுத்துச் செல்வதை மடமை எனக்கடிந்து, அவற்றை இழுவுந்து (Tractor)களில் வைத்து ஊர் ஊராய் இழுத்துச் செல்வதைப் போன்றும், ஐங்கனிக்குழைவை (பஞ்சாமிர்தம்) வைத்துப் படிமங்கட்குப் படையல் செய்வதை மடமை யென்றொழித்து வாதுமைத் தோய்வு (பாதாம் அல்வா) தன்னைவைத்துப் படைப் பதைப் போன்றும் இருக்கின்றதன்றி வேறென்ன?

பகுத்தறிவுக் கொள்கையர் தமக்கென்று ஒரு பூம்புகாரைச் சீர்திருந்திய சிலப்பதிகாரமாக எழுதிக் கொள்கின்ற உரிமை, சமயப் பித்தர்கள் தமக்கென்று ஒரு கண்ணகி கதையை எழுதிக் கொள்கின்ற உரிமையையும் வளர்க்கலாமன்றோ? 'தீப்பற்றுக' என்று சொன்ன அளவிலேயே மதுரை தீப்பற்றி எரியுண்டது என்றசெய்தி உண்மைக்கு மாறுபட்டதென்னின், கண்ணகியின் வன்சினத்துக்கொப்ப நிலம் பிளத்தலும், வளமனைகளும் அரண் மனையும் இடிந்து பொடிப்பொடியாய்ப் போகின்ற செய்திகள் மட்டும் (அவை நில நடுக்கத்தால் ஏற்பட்டவை எனினும்) பகுத்தறிவுக் குட்பட்டனவோ? கற்புத் திறம் காட்ட வேண்டின் தெய்வ நிகழ்வுகளைக் காட்டியே ஆகல் வேண்டும். அன்றேல் உளத்தானும் உணர்வானும் வெளிப்படுகின்ற அவ்வுயர்ந்த கற்புத்திறம் பொய்பட்டுப் போம். இனி அவ்வாறன்றி உலகியல் ஒழுகலாற்றுக்கு ஒப்பான வகையான் அக் கற்புத் திறம் எல் லார்க்கும் புரியுமாறு உரைத்தல் இயலாதோ எனின், அவ்வாறு உணர்த்துகின்ற ஏதக் குறிப்புகள் பிறர்க்கு எளிதே புரியுமா றில்லையாகலின் இயலாது என்க. இக்கூற்றுக்குத் தன் கணவன் மாண்டான் என்று கண்ட அளவிலேயே உயிர் துறக்கும் கோப் பெருந்தேவியின் கற்பு மாடுயர் கற்பெனினும், உலகியல்மாந்தர் களின் புறத்தோற்ற வினைமுறைகட்குப் புரியுமாறும் போற்றி

யொழுகுமாறும் ஏதக் குறிப்புகள் படைத்ததில்லை யாகலின், அவள்தன் கற்பினும் கண்ணகியின் கற்பே பெருமளவில் இன்று காறும் போற்றியொழுகப்படுவதே சான்றும். பழந் தமிழகத்தின் பெருமை சாற்றி நிற்கும் பண்டை முத்தமிழ்ப் பாவியமான சிலப்பதிகாரத்தை மக்கட்குக் கூறவிரும்பின் அதில் உள்ள வாறே கூறுவதுதாம் அந்நூலையும் அந் நூலாசிரியரையும் அவர் கருத்தையும் போற்றுவதாகும்; அழியாது காப்பதாகும். அவ்வாறு அதில் உள்ளவாறே கூறுதற்குக் காலமும் கருத்தும் ஏற்றனவாகாவே எனில், அக் கதையினையே விட்டுவிட்டுக் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்ற வேறொரு புதுக்கதை புனைந்து கொள்வதே சால்பாகும். நம் தாயின் நினைவாகத் தரப்பெற்ற ஒரு கழுத்தணியையோ கண்டிகையையோ அவர் நினைவழியா மற் பொருட்டு நாம் பேணுதல் வேண்டின், அவற்றை அவ்வவ் வுருவில் வைத்துக் கொள்வதே சிறப்பாகுமன்றி, அவற்றை மாற்றியும், சிதைத்தும், வேறு உருக்கொண்டு புனைதல் சால் பாகாது. அவற்றை அவ்வாறு மாற்றுமிடத்து அவ்வுண்மை உருவம்கலைந்து, அவற்றின் மூலமாகிய பொன்னே வெளிப்பட்டு வேறு பொன்னிற்கும் அதற்கும் வேறுபாடு தோன்றுமற் போகு மன்றி, நம் தாயின் நினைவையும் அந்நகைகள் நமக்கூட்டா இது போன்றே முற்காலத்துப்பிடித்த நம்தந்தையின் புகைப்படத்தில், அவர் வைத்திருக்கும் குடுமி இக்காலத்துக்குப் பொருந்தாமை யால், படத்தில் உள்ள அதனைக் களைந்து ஒழுகை (கிராப்)வாரி யிருக்குமாறு வரைந்து கொள்வதால் அவர் பால் உள்ள பற்றும் அன்புமே மாறுபட்டுப்போவதன்றி வேறென் பயன் விளையும்? இக்காலத்தும் மேனாட்டார் பிடிக்கும் 'பைபிள்' நெறிக் கதைகள் அவர்தம் மறை நூற்களில் கூறப்பட்டவற்றிற்கு மாறுக இல்லாம் லிருப்பதை இங்குள்ளார் அறிந்து தெளிக

இவையன்றிப் 'பூம்புகார்' படம் ஓரளவுக்குத் தமிழ் மணம் கமழ்வதாகவாவது உளதா எனின் அதுவுமில்லை. உரையாடல் களின் பல விடங்களில் சொல்லாரவாரம் மிகுந்திருக்கின்றது. பொருட் சிறப்பும் குறைவே. இடையிடையே தமிழ், தமிழகம், தமிழாட்சி என்ற சொற்கள் பயிலப் பெறுவது தவிர, உரை யாடல்கள், மக்களுளத்தில் மறைந்து உருவற்று நிலைசாம்பிக் கிடக்கும் தமிழுணர்வைக் கொஞ்சமும் எழுப்பவில்லை. 'குமுதம்' போன்ற குமுகாயப் போலித் தாளிகைகள் இதனைப் பாராட்டிப் புதுமை என்று வியப்பதைப் படித்து உரையாடலாசிரியர் உள மகிழ்வாரானால், அந்நிலையைவிடக் கேடுபயக்கும் நிலை தமி ழர்க்கு வேறு இல்லை போலிப் புதுமைகள் காட்டி மக்கள் உள்ளங்களைச் சிறிது சிறிதாக அரித்துக் கொண்டு வரும் அதைப்போன்ற தாளிகைகளின் பாராட்டை உண்மைத் தமிழ்ப்

(48–ஆம் பக்கம் பார்க்க.)